
GOKULAM

கோகுலம்

டிசம்பர் '94


ரூ. 5.00





கோகுலம்

டிசம்பர் '94 மாத இதழ் மலர் : 12 இதழ் : 11



அருமைச் சிறுவர் சிறுமியரே,

எல்லோருக்கும் அன்பு வணக்கம்.

தீபாவளிச் சிறப்பிதழைப் பாராட்டி நிறையப் பேர் கடிதம் எழுதியிருக்கிறீர்கள். 'விலை உயர்வைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். எங்கள் ஆதரவு கோகுலத்திற்கு என்றும் உண்டு' என்றும் ஏராளமான தம்பி தங்கைகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எழுதி ஊக்கமளித்திருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் எப்படி நன்றி கூறுவது என்பது தெரியவில்லை. உங்களுடைய ஆதரவு நீடித்திருக்கும் வகையில், கோகுலம் என்றும் பணியாற்றும் என்ற உறுதியை மட்டும் கூறிக் கொள்ளுகிறேன். இந்த நோக்கிலாவது, 'கோகுலம் சிறுவர் சங்கத்தை மறுபடி புதுப்பிக்கக் கூடாதா?' என்றும் ஏராளமான பேர் எழுதியிருக்கிறார்கள். இதைப் பற்றி எதுவும் உறுதியாக இப்பொழுது கூற இயலாவிட்டாலும், இந்தக் கோரிக்கையைத் தீவிரமாகப் பரிசீலிக்கிறோம் என்பதை மட்டும் தெரிவிக்கிறேன். நீங்களும் உங்கள் கருத்தை எழுதி அனுப்பலாமே!

தீபாவளி, குழந்தைகள் தின வாழ்த்துகளை அனுப்பியுள்ளோருக்கு இதன் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது கிறிஸ்துமஸ் மாதமல்லவா? கிறிஸ்துமஸின் சிறப்பை விளக்கும் சில பகுதிகள் இந்த இதழில் வெளியாகியுள்ளன.

குழந்தைக் கவிஞர் அமரர் அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டிக்கு வந்துள்ள கதைகள் பரிசீலனையில் உள்ளன.

அடுத்த இதழோடு உங்கள் கோகுலத்துக்கு 12 வயது பூர்த்தியாகிறது. கோகுலத்தின் இந்த வளர்ச்சிக்குக் காரணம் உங்கள் ஆதரவும் அபிமானமுமே.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.





அன்புடன்,

(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்.

கோகுலம் 1994 டிசம்பர்

இந்த இதழில்...

அறிவியல்

தொடர்கதை

அறிவுக்கு வேலை

போட்டி

பாடல்கள்

நாடகம்

* கத்துவது எந்தத் தவளை?
பக்கம் 93






* காமிரா பக்கம் 69

படக்கதை

கதைகள்



• ஆமை போட்ட நிபந்தனை
பக்கம் 17



• அழகி குல்னாராவும் அதி
சயங்கள் மூன்றும் பக்கம் 41



• காண்டி பக்கம் 92

மற்றவை

ஏசு பிறந்தார்

அந்தப் பெண் தனியாக அமர்ந்து ஏதோ சிந்தித்துக் கொண்டிருந்தாள். கருணை உள்ளமும், தெய்வ சிந்தனையும் கொண்ட அந்தப் பெண்ணுக்கு வெகு விரைவில் திருமணம் நடைபெற இருந்தது. தன் கணவனைப் பற்றி அவள் சிந்தித்துக் கொண்டிருக்கிறாளோ!

அந்தப் பெண்ணுக்கு எதிரே திடீரென்று ஓர் ஒளி வெள்ளம் விழுந்தது. ஆயிரம் நிலவுகள் ஒன்றுகூடி வந்தது போன்ற பொலிவுடன், பளபளக்கும் அழகிய தங்கமயமான சிறகுகளுடன் ஒரு தேவதை அதில் இருந்து வெளியே வந்து அந்தப் பெண்ணைப் பார்த்துப் புன்னகைத்தது.



"மரியாள், என்னைத் தெரியவில்லை? நான்தான் கேப்ரியல்," என்று சிரித்த தேவதை, "மரியாள், பூவுலகில் உள்ள பெண்களில் யாருக்குமே கிடைக்காத ஒரு பெரும் பேறு உனக்குக் கிடைக்கப் போகிறது. தேவன், மானிடக் குழந்தையாக உன்னிடம் பிறக்கப் போகிறான். நீ முற்றிலும் அதற்குத் தகுதியானவளே. உனக்கு வரப் போகும் கணவனிடமும் இதைக் கூறப் போகிறேன். கலங்காதே" என்று கூறி மறைந்தது.

திட்டமிட்டபடி பாக்கியசாலியான மரியாளுக்கும், ஜோசப்புக்கும் திருமணம் நடைபெற்றது. இவர்கள் இருவரும் வசித்த ஊருக்குப் பெயர் நாசரத்.

நாசரத்தை ஆண்டு வந்த மன்னர் திடீரென்று ஓர் உத்தரவைப் பிறப்பித்தார். "எல்லாக் குடிமக்களும் தங்கள் பிறந்த ஊருக்குச் சென்று அங்கே தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்" என்பதுதான் அந்த உத்தரவு.

மரியாளின் கணவன் ஜோசப்புக்குப் பிறந்த ஊர் பெத்தல்ஹேம். எனவே மன்னரின் உத்தரவுக்கு இணங்க தனது பெயரைப் பதிவு செய்து கொள்ள ஜோசப், மனைவியுடன் பெத்தல்ஹேமுக்குக் கிளம்பினார்.

பெத்தல்ஹேமில் ஏக இடநெருக்கடி. ஜோசப்பைப் போலவே தங்கள் பெயரைப் பதிவுசெய்து கொள்ளப் பலரும் வந்திருந்தனர். பெத்தல்ஹேம் இடநெருக்கடி தாங்காது தவித்தது. ஜோசப்புக்கு தங்க இடமே கிடைக்கவில்லை. மனைவி மரியாளுடன் அலைந்து திரிந்ததுதான் மிச்சம்.

கடைசியில் இருவரையும் கண்டு மன மிரங்கிய ஒரு வீட்டுக்காரர், "என் வீட்டில் இடம் இல்லை. ஆனால், என் மாட்டுக் கொட்டகையில் நீங்கள் விரும்பினால் தங்கிக் கொள்ளலாம்" என்று அனுமதித் தார். இருவரும் மகிழ்ச்சியோடு அவர் வீட்டு மாட்டுக் கொட்டகையில் தங்கிக் கொண்டனர்.

அன்று நள்ளிரவு, மரியாளுக்கு அந்த எளிய மாட்டுக் கொட்டகையில், கேப்ரி யல் தேவதை அறிவித்திருந்தபடியே தேவன், குழந்தையாகப் பிறந்தார். உலக மக்களை உய்விக்க வந்த அந்த தெய்வீகக் குழந்தையே ஜீஸஸ் என அழைக்கப்பட்ட ஏசுபிரான். மனித உள்ளங்களை உயர்த்த வல்ல ஒரு புதிய பாதையை உலகுக்கு அளிக்க வந்த அந்த தெய்வீகக் குழந் தையை, மாட்டுக்கு வைக்கோல் வைக்கும் மரத் தடுப்பில் இட்டு, எளிய துணியால் மூடிக் கொஞ்சினர் பாக்கியம் செய்த பெற்றோர்.

உலகை உய்விக்க தேவன் மானிடக் குழந்தையாக அவதரித்துள்ளதை அறிந்து தேவதைகள் மகிழ்ச்சிப் பெருக்கால் ஆடிப் பாடினர். அவர்கள் வாயிலாக இதை அறிந்த மக்கள் தெய்வீகக் குழந்தை யைத் தரிசிக்க விரைந்தனர்.

குழந்தை ஜீஸஸ், வளர்ந்து ஏசுபிரா னாகும் வரை அவரது எதிர்ப்பாளர் களால் சொல்ல முடியாத துன்பங்களுக் கும், கொடுமைகளுக்கும் இலக்கானார். வசுதேவருக்கு மகனாய்ப் பிறந்து, கோகு லத்தில் வளர்ந்த கண்ணபிரான் பின் னைப் பருவத்தில் சந்தித்ததைப் போன்ற ஆபத்துக்களை, குழந்தை ஜீஸஸும் சந்தித்தார். இருவருமே எத்தனையோ அற்புதங்களைச் செய்து தங்கள் தெய்வீக சக்தியை உணர வைத்தனர். இருவருமே சாதாரண மானிடக் குழந்தைகளைப் போல் வீட்டில் பிறக்கவில்லை. கண்ணன் பிறந்து தப்பி விட்ட செய்தியை அறிந்த தும், பிறந்த குழந்தைகள் எல்லாவற்றை யும் கொன்று விட கம்சன் கட்டளையிட் டான். இதே போல், ஒன்றரை வயதுக்கு உட்பட்ட எல்லாக் குழந்தைகளையும் கொன்று விட நாசரத்தை ஆண்ட மன் னர் உத்தரவிடுகிறார். கண்ணன் மாடு மேய்த்துக் குழலூதியதைப் போலவே,



ஜீஸஸ் நல்மேய்ப்பாளராக இருந்து உலகை உய்வித்தார். கண்ணன் அருளிய கீதை யைப் போலவே, பைபிளின் பத்துக் கட்டளைகள் உலக மக்களை உயர்த்த வல்லவை.

மனித மனங்களை தேவ நிலைக்கு உயர்த்த ஜீஸஸ் அவதரித்த இந்தத் திரு நாளில் உலக மக்கள் எல்லோரும் பகை உணர்வுகளை உதிர்த்து விட்டு சகோதரத் துவத்தின் பெருமைகளை உணர்ந்து உலகத்தை வாழ வைக்க இறைவன் அருள வேண்டும் என்று வேண்டுவோமாக.

காந்தி அண்ணல் கதைப்பாட்டு, வே. இரா. சிவ ஞானவள்ளல், ரூ. 12/- வே. இரா. சிவஞானவள்ளல், கலைஞர் தெரு, புலவர் நகர், வேலூர் - 632 009.

சிறுவர் இலக்கியத்தில் பாடல் பிரிவு தனிச்சுவை வாய்ந்தது. குறிப்பாக, குழந்தைக் கவிஞரை முன்னோடியாக வைத்து குழந்தைப் பாடல்களைப் படைப்பதில் தனிச் சிறப்பு வாய்ந்தவர்களாக இருப்போரில் குறிப்பிடத்தக்கவர் சிவஞானவள்ளல். துள்ளும் சந்தம் இவருக்குச் சொந்தம். எளிய நடையில், அழகு கொஞ்சும் சந்தத்தில் காந்தியடிகளின் வரலாற்று நிகழ்ச்சிகளை மட்டும் இந்த நூலில் சிறுவர்களுக்காகப் படைத்திருக்கிறார்.

இதோ மாதிரிக்கு :

கத்தி இல்லை
கிளர்ச்சியில்
கல்லும் இல்லை
கிளர்ச்சியில்
சத்தி யங்கள்
அடிப்படை
சாந்தம் தானே
வெளிப்படை
உரிய முறையில்
அன்பினால்
உலகை அசைத்துக்
காட்டிய
அரிய அறப் போர்வழி
அண்ணல் தந்த
நேர்வழி.



குழந்தைக் கவிஞரின் பாட்டில் காந்தி கதையைப் போலவே இதுவும் சாதனை படைக்கும் என்பது உறுதி. படங்கள் இல்லாதது பெருங்குறை.

ஹெர்க்குலிஸ், ப. ராமஸ்வாமி, பக். 80, ரூ. 12.50, பழனியப்பா பிரதர்ஸ், பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14.

உலகப் புகழ் பெற்ற கிரேக்க புராண வீரன் ஹெர்குலிஸின் சுவையான வரலாறு சிறு சிறு கதைகளாகத் தரப்பட்டுள்ளது. ஹெர்குலிஸ் பற்றி வெளி வந்துள்ள பல மொழி பெயர்ப்புகளில் இதை மிகச் சிறந்த படைப்பு எனலாம். பழம் பெரும் எழுத்தாளரின் பண்பட்ட நடை, மொழி பெயர்ப்பு நூல் என்பதை மறக்க வைத்துள்ளது. ஆசிரியருக்குக் கிடைத்துள்ள மிகப் பெரிய வெற்றி. லதாவின் ஓவியங்கள் நூலுக்கு மெருகூட்டுகின்றன.

மூன்று முத்துக்கள், உதயை மு. வீரையன், பக். 80, ரூ. 12.50, மக்கள் பதிப்பகம், 4, சிங்கப்பெருமாள் கோவில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5.

இதில் ஒரு துப்பறியும் நெடுங்கதையும் இரண்டு சிறுகதைகளும் உள்ளன. கதை சுவையாக விறுவிறுப்பாக ஓடுகிறது. இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட கதை என்றாலும் இப்பொழுது எழுதியது போலவே இருக்கிறது. கண்ணன் ஆசிரியர் ஆர்வியின் அணிந்துரை நூலுக்கு சிறப்பளிக்கிறது. ஒரு படம் கூட இல்லாதது வருத்தம்தான்.

பார்த்தா பறக்கிறது வெளவால்? ரேவதி, பக். 52, ரூ. 8.90, பழனியப்பா பிரதர்ஸ், பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14.

கோகுலத்தின் கௌரவ ஆசிரியரால் தொடர்ந்து கோகுலத்தில் எழுதப்பட்டு வரும் அறிவியல் சிறுகதைகளின் 4 ஆம் தொகுதி இது. விலங்குகள் பறவைகள் குறித்து நாம் பரம்பரையாக உண்மை என நம்பிவரும் பல செய்திகளைத் தவறு என்று மெய்ப்பிக்கிறது இதில் உள்ள சிறுகதைகள்.

மாய விளக்கு, வை. கோவிந்தன், பக். 152, ரூ. 25/-, கண்ணப்பன் பதிப்பகம், 72, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

சிறுவர் இலக்கிய முன்னோடிகளில் ஒருவரான அமரர். அணில் வை. கோவிந்தன் அவர்களின் மொழி பெயர்ப்பு நூல். அரபுக் கதைகளில் புகழ் பெற்ற 'அலாவுதீனும் அற்புத விளக்கும்'தான் இது. கதை மிகவும் சுவையானது. இதற்கு மேலும் சுவையூட்டும் வகையில் கதை அமைந்துள்ளது. நல்ல படைப்பு.

எங்கிருந்தோ வந்தான்! கொ.மா. கோதண்டம், பக். 76, ரூ. 12.50, பழனியப்பா பிரதர்ஸ், பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14.

கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான கொ.மா. கோதண்டத்தின் அருமையான பன்னிரண்டு சிறுகதைகள் இதில் உள்ளன. பெரும்பாலானவை ஏற்கெனவே கோகுலத்தில் வெளி வந்து வாசகர்களின் பாராட்டைப் பெற்றவை. காட்டுச் சூழலில் நடைபெறும் இந்தக் கதைகள் எல்லாவற்றிலும் காட்டுச் சிறுவனான நீலன்தான் ஹீரோ. தனது காட்டு இயல் அறிவைக் காட்டி, பிரச்னைகளைத் தீர்த்து நூல் முழுவதும் நிறைந்து நிற்கிறான் நீலன். தெளிவான நடை. பரிசளிக்க முற்றிலும் தகுதி உள்ள புத்தகம். ஓவியங்கள் நூலுக்கு அழகு செய்கின்றன.

உங்கள் நூலகம் பகுதியில் இடம் பெறும் நூல்களை வாங்க விரும்புவோர் நேரடியாக உரிய பதிப்பகத்திற்கே எழுதிக் கேட்க வேண்டும். இதற்காகவே பதிப்பகத்தினரின் முகவரியும் ஒவ்வொரு நூல் மதிப்புரையுடன் குறிப்பிடப்படுகிறது. இந்தப் பகுதியில் அறிவியல், பொது நூல்கள், சிறுவர் நூல்கள் மட்டுமே இடம் பெறும். இரு பிரதிகளை, ஆசிரியர் கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 97 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். கட்டணம் இல்லை.



தாத்தா வந்தார்!

காட்சி - 1

மாணிக்கத்தின் வீடு. தோன்றுவோர்: மாணிக்கம், நண்பன் ஜோசப், அப்பா, அம்மா, மாமா. மாணிக்கம் பள்ளிக்குக் கிளம்பிக் கொண்டிக்க மாமா வருகிறார்.

மாமா: பள்ளிக்குக் கிளம்பியாச்சா மாணிக்கம்? இதோ இந்த பிளாஸ்டிக் கவர்ல ஐம்பது பால் பாயிண்ட் பேனா இருக்கு. வாங்கிக்க.

ஜோசப்: எதுக்குமாமா இத்தனை பேனா? நேற்றுத்தான் எனக்கு ஒரு பேனா தந்துட்டீங்களே?

மாமா: அது உனக்குக் கொடுத்தது. உன் நண்பர்கள் எல்லாம், ஏண்டா உங்கமாமா துபாய்லேருந்து வந்திருக்கிறரே, எங்களுக்கு எதாவது வாங்கிக் கொண்டு வரலையான்னு கேட்க மாட்டாங்களா? அவங்களுக்குக் கொடுக்கத்தான் இது.

ஜோசப்: போங்க மாமா; உங்களுக்கு வேற வேலையே இல்லை! நீங்க துபாய்க்குப் போயிட்டு வந்தா என் நண்பர்களுக்குப் பேனா தரணுமா என்ன? அதெல்லாம் யாருக்கும் எதுவும் தர வேண்டாம். இதையெல்லாம் நானே கொஞ்சம் கொஞ்சமா தீரத் தீர பயன் படுத்திக்கறேன்.

(பிளாஸ்டிக் கவரை வாங்கி பீரோவுக்குள் வைத்துப் பூட்டுகிறான்)

மாமா:- மத்தவங்களுக்குத் தராட்டாலும் பரவாயில்லே மாணிக்கம். தினமும் உன்னோட பள்ளிக்கு வரானே பக்கத்து வீட்டு ஜோசப். அவனுக்காவது ஒரு பேனாவைக் கொடு.

மாணிக்கம்: போங்க மாமா. நான் யாருக்கும் தரமாட்டேன்.

(போகிறான்)

அம்மா: (உள்ளேயிருந்து வந்து கொண்டே) தம்பி, இந்த மாணிக்கத்தோட போக்கைப் பார்த்தியா! வரவர ரொம்ப மோசமாப் போயிட்டிருக்கு. ஒருத்தருக்கும் ஒரு பொருளையும் தர மாட்டேங்கறான்.

அப்பா: (வந்து கொண்டே) இதெல்லாத்தையும் விடக் கேவலம், பிறந்த நாளின் போது இவனுடைய நண்பர் எல்லாம் வந்துட்டாங்க.

மாமா: மாணிக்கமே அவங்களையெல்லாம் கூப்பிட்டானா? பரவாயில்லையே!

அம்மா:- இவன் கூப்பிட்டானாவாவது! யாரையும் இவன் கூப்பிடவே இல்லை. எதிர் வீட்டு தங்கம், நம்ப மாணிக்கத்தை விட இரண்டே நாள் பெரிசு. அதுனால, அது தன்னுடைய பிறந்த நாளுக்கு நண்பர்களைக் கூப்பிட்டப்போ, இன்னும் இரண்டு நாள்ல மாணிக்கத்துக்குப் பிறந்த

நாள்னு சொல்லிடுத்து. பசங்க விடுவாங்களா? எல்லாரும் வந்துட்டாங்க.

மாமா: அப்புறம் என்ன பண்ணினீங்க?

அப்பா: நான், எல்லோருக்கும் கொடுக்க, நிறைய சாக்லேட் வாங்கி வைச்சிருந்தேன். இந்த மாணிக்கம் என்ன பண்ணினான் தெரியுமா?

மாமா: என்ன பண்ணினான்?

அப்பா: அந்த டப்பாவை அப்படியே உள்ளே கொண்டு போய் வைச்சுக்கிட்டான். நண்பர்கள் கொடுத்த பரிசுகளை மட்டும் வாங்கி வைச்சுகிட்டு, ஒரு இனிப்புக் கூடத் தராம அவங்களைத் திருப்பி அனுப்பி விட்டான்!

அம்மா: எதிர் வீட்டுத் தங்கம் கூட, என்னடா மாணிக்கம், பிறந்த நாள் வாழ்த்து சொன்னவங்களுக்கு ஒரு சாக்லேட்டாவது தரக் கூடாதான்னு கேட்டுது. நான் யாரையும் கூப்பிடலையே? நீங்களாகத்தானே வந்திருக்கீங்க? யாரு உங்க வாழ்த்தையும் பரிசையும் கேட்டாங்கன்னு திருப்பிக் கேட்டான். அதுக்குமேல பசங்க நிற்பாங்களா? எல்லாரும் போயிட்டாங்க. எனக்குக் கூடப் பாவமா இருந்தது.

மாமா: இப்படிக் கூட இந்தக் காலத்தில் ஒரு பையன் இருப்பானா! மற்றவர்களுக்குக் கொடுத்து மகிழ என்ன வாய்ப்பு இருக்கிறது என்றல்லவா இந்தக் காலத்துப் பசங்க பெருந்தன்மையா இருக்காங்க. இந்த மாணிக்கம் மட்டும் இப்படி வித்தியாசமான பையனா இருக்கானே! எனக்கு மனதுக்கு ரொம்ப வருத்தமா இருக்கு.

அப்பா: இவனை மாத்த நாங்களும் என்னென்னவோ பண்ணிப் பார்த்தோம். மாணிக்கம் எதுக்கும் மசியலே. எதுக்காக மற்றவங்களுக்கு நாம கொடுக்கறதுன்னு நம்மையே கேட்கிறான்.

அம்மா: இத்தனைக்கும் வகுப்பில் அவன்தான் முதல் ரேங்க். இப்படிப்பட்ட புத்திசாலிப் பையன், இந்த மாதிரி குணம் கெட்டவனா இருக்கானேன்னு எல்லோருக்கும் வருத்தம். ஆசிரியர்கூட இவனை மாற்ற முயற்சி பண்ணித் தோத்துட்டாரு.

மாமா: இவனை இப்படியே விடக் கூடாது. இதற்கு ஏதாவது ஒருவழி பண்ணியே ஆகணும்.

ஜோசப்: *(வந்து கொண்டே)* மாணிக்கம் மாணிக்கம்... மாணிக்கம் பள்ளிக்குக் கிளம்பிப் போயிட்டானா ஆன்ட்டி?

அம்மா: அவன் போயி பத்து நிமிஷத்துக்கு மேல ஆயிடுச்சே தம்பி.



ஜோசப்: அட! மாணிக்கத்தின் துபாய் மாமா! எப்போ மாமா வந்தீங்க துபாய்லேருந்து?

மாமா: நேற்றுத்தான் வந்தேன் ஜோசப். ஜோசப்... உன் நண்பனை மாற்ற ஒரு வேலை பண்ணப் போறேன். நீயும் கொஞ்சம் உதவினால் தேவலையே?


ஜோசப்: *(மகிழ்ச்சியோடு)* காத்துக்கிட்டிருக்கேன் மாமா.

(இருவரும் போகிறார்கள்)

காட்சி - 2

மாணிக்கத்தின் வீட்டுக் கூடம். தோன்றுவோர்: மாமா, மாணிக்கம், ஜோசப் மற்றும் மாணிக்கத்தின் நண்பர்கள்.

மாணிக்கம்: எதுக்காக மாமா என்



நண்பர்களையெல்லாம் கூட்டிக்கிட்டு வரச் சொன்னீங்க?

மாமா: காரணமாகத்தான் மாணிக்கம். நான் துபாய்க்குப் போவதற்கு முன்னால, அதாவது ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு வரை நம்ம தெருவில் ஒரு நற்பணி மன்றத்தை நடத்தி வந்தேன். என் நண்பர்கள் உதவியோடு.

மாணிக்கம்: அம்மாகூட அதைப் பத்தி சொல்லியிருக்காங்க மாமா.

ஜோசப்: எங்க அப்பாகூட சொல்லியிருக்காங்க மாமா.


மாமா: வசதியில்லாத பிள்ளைகளுக்கு இரவிலே பாடம் சொல்லித் தருவது, ஊனமுற்றவர்களுக்கு தொழில் நடத்த பணம் சேர்த்துக் கொடுப்பதுன்னு நண்பர்களோட உதவியுடன் பல நல்ல பணிகளை நான் பண்ணியிருக்கிறேன்.

மாணிக்கம்: உருப்படாத காரியங்களையெல்லாம் பண்ணிக்கன்னு சொல்லிக்கிடுங்க. அந்த மாதிரிக் காரியத்தையெல்லாம் என்னைப் பண்ணச் சொன்னால் நான் பண்ண மாட்டேன். இப்பவே சொல்லிட்டேன்.

மாமா: அதான் நேற்றைக்கே உன்னைப் பற்றி நல்லாத் தெரிஞ்சுக் கிட்டேனே... அதுக்கப் புறமும் உன்னைப் போய் நான் கூப்பிடுவேனா?

மாணிக்கம்: அதானே பார்த்தேன்?

மாமா:– நான் சொல்ல வந்தது இது தான். இந்த ஆண்டு கிருஸ்துமஸுக்கு நானும் இங்கே இருப்பதால், இந்தப் பகுதியில் உள்ள ஏழைப் பிள்ளைகளுக்கு என்னால் ஆன உதவிகளைச் செய்ய ஆசைப்படறேன். உங்களில் யாராவது ஒருத்தர் கிருஸ்துமஸ் தாத்தாவா வேஷம் போட்டுக்கிட்டு இங்கே பக்கத்தில் உள்ள குப்பத்துக்குப் போகணும். வீடுவீடா,



பட்டம்

வானி லுயர்ந்து பறக்குது
　　வந்து பாராய் தம்பியே!
காண ஜோராய் இருக்குது
　　கண்ணன் விட்ட பட்டமே!

வண்ண வண்ண பட்டமாம்!
　　வாலும் உள்ள பட்டமாம்!
விண்ணில் மேலும் மேலுமே
　　விர்விர் ரென்றே பறக்குது

பருந்தைவிட உயரமாய்
　　பறந்து மேலே போகுது!
கரந்து கரந்து நூலினை
　　கண்ண னுமே விடுகிறான்!

உச்சி மீது வானத்தில்
　　உயர்ந்து உயர்ந்து போகுது!
இச்சை யோடு தெருவிலே
　　இளைய கண்ணன் விடுகிறான்!

'காற்றில் பறந்து பறந்துமே
　　கணக்கில் லாத தூரத்தில்
நாற் றிசையும் போகுது
　　நூலி லாடி பட்டமே!

மேக வானை நோக்கியே
　　மிதந்து மிதந்து பட்டமே;
வேக மாக செல்லுதே
　　விண்ணின் ஆய்வு செய்யவோ?

செ.கு.மலரடியான்

குடிசை குடிசையா ஏறி இறங்கி அங்குள்ள பிள்ளைகளிடம் அவங்களுக்கு என்ன தேவைன்னு கேட்டு எழுதிக்கணும். அதை யெல்லாம் வாங்கி, அதுல அவங்க பெயரை எழுதி, கிருஸ்துமஸுக்கு முந்தின நாள், மறுபடி கிருஸ்துமஸ் தாத்தா வேஷம் போட்டுக்கிட்டுப் போய் அவங்க கிட்ட கொடுக்கணும். செலவு என்னுடையது.

ஜோசப்: மாமா, கிருஸ்துமஸ் தாத் தாவைப் போல யாரு வேஷம் போட்டுக்கப் போறாங்க?

மாமா: அதை நீங்கதான் முடிவு பண் ணனும்.

எல்லோரும்: *(மாணிக்கத்தைத் தவிர)* நான் போட்டுக்கறேன் மாமா. நான்... நான்...

மாமா: உங்க பெயர் எல்லாத்தையும் எழுதி, திருவுளச் சீட்டுப் போடலாம். அதுல யார் பெயர் வரதோ அவங்க கிருஸ்துமஸ் தாத்தாவா இருங்க. ஆனால் ஒன்னு, கிருஸ்துமஸ் தாத்தாவாக இருக்கப் போறவங்களுக்கு நீங்களெல்லாம் முழு ஒத்துழைப்புத் தரணும்.

எல்லோரும்: கண்டிப்பா தறோம் மாமா.

மாமா: ஜோசப், இவங்க பெயரை யெல்லாம் குறிச்சுக்கிட்டு, தனித் தனி காகிதத்தில் எழுதி, சுருட்டிக் கொண்டுவா.

ஜோசப்: மாமா, மாணிக்கத்தின் பெயரை எழுதறதா வேண்டாமா?

மாணிக்கம்: *(வெறுப்புடன்)* எழுதிக்க... எழுதிக்க..

(ஜோசப் போகிறான்.)

காட்சி - 3

மாணிக்கத்தின் வீடு . தோன்றுவோர்: மாமா, மாணிக்கம், ஜோசப், நண்பர்கள்)

மாமா: என்ன ஜோசப், சீட்டெல்லாம் ரெடியா?

ஜோசப்: இதோ ரெடி மாமா. மாணிக் கத்தின் பெயரையும் எழுதியிருக்கேன். எல்லாம் ஒரே மாதிரிச் சீட்டுதான். இதோ, இந்த டப்பாவுல சுருட்டிப் போட்டி ருக்கேன்.

மாமா: சரி, யாரைவிட்டு எடுக்கச் சொல்லலாம்?

ஜோசப்: இதோ நம்ப எதிர் வீட்டு சாந்தாப் பொண்ணு இருக்கே. இவள்தான் இந்த செட்டில் சின்னப் பெண்.

மாமா: சாந்தா— இங்கே வா. (சாந்தாவர, அவள் கையில் டப்பாவைக் கொடுத்து) இதுலேருந்து ஒரே ஒரு சீட்டை எடுத்துக் கொடும்மா (சாந்தா சீட்டை எடுத்துக் கொடுக்க மாமா பிரித்துப் படிக்கிறார்) மாணிக்கம்...!

ஜோசப்: மற்றவர்களுக்கு எதுவுமே கொடுக்க மனசு வராத மாணிக்கத்திற்கு, கொடுப்பதில் மகிழ்ச்சிகாணும் கிருஸ்துமஸ் தாத்தா வேஷமா!

மாணிக்கம்: வேஷம் தானே... பரவா யில்லை. மாமா கிருஸ்துமஸ் தாத்தா வேஷம் எனக்குத்தான்.

மாமா: (எல்லோரையும் பார்த்து) மாணிக்கம் கிருஸ்துமஸ் தாத்தாவா வேஷம் போட்டுகிட்டுக் கிளம்பும் போது நீங்களும் கூடவே போகணும். வசதி இல்லாத வீட்டுக் குழந்தைங்க என்ன கேட்கிறாங்கன்னு கேட்டு எழுதிக் கிட்டு வாங்க.

எல்லோரும்: சரிமாமா, இன்னைக்கு மாலையே ஆரம்பிச்சுடறோம்.

காட்சி - 4

மாணிக்கத்தின் வீட்டுக்கூடம். மாமா, மாணிக்கம், ஜோசப், நண்பர்கள்.

மாமா: என்ன, எழுதிக்கிட்டு வந்திங்களா?

ஜோசப்: ஆமாம் மாமா, இதோ லிஸ்ட். எல்லாரும் கிருஸ்துமஸ் தாத்தாவைப் பார்த்ததும் ஓடி வந்து சுத்திக் கிட்டாங்க. பொம்மை வேணும், சிலேட் வேணும், சட்டை வேணும், கால்பந்து வேணும்னு ஒரே வேண்டுகோள்தான்.

மாணிக்கம்: ஒரு பையன் கேரம் போர்டு கூடக் கேட்டான் மாமா. நடக்க முடியாத அவன் தங்கைக்கு இருந்த இடத் திலேயே விளையாட அது வேணும்னு கேட்டான்.

மாமா: அப்படியா! தனக்காக அந்தப் பையன் கேட்கலையா?

மாணிக்கம்: இல்லை. மூன்றாவது வீட்டுல இருக்கிறானாம் அந்த ஊனமுற்ற சிறுவன். அவனுக்காக இந்தப் பையன் கேட்டான்.

மாமா: அவன் பெயர் என்ன?

மாணிக்கம்: விக்டர் மாமா. எனக்கு நல்லா நினைப்பு இருக்கு.

மாமா: சரி, உங்க லிஸ்டைக் கொடுங்க. நான் இரண்டு நாட்களில் இதையெல்லாம் வாங்கி வைக்கிறேன். கிறிஸ்துமஸுக்கு முந்தின நாள் இதையெல்லாம் அந்தப் பிள்ளைகளிடத்தில், நீயே கிருஸ்துமஸ் தாத்தாவா மாறிக் கொண்டு போய்ச் சேர்க்கணும். இன்னும் இரண்டு நாள்கூட இல்லையே.

காட்சி - 5

மாணிக்கத்தின் வீட்டுக் கூடம். மாணிக்கம், மாமா, ஜோசப் நண்பர்கள்.

மாமா: இந்தப் பெட்டியில் இருநூற்றி எட்டு பேனா, அறுபத்தி இரண்டு கலர் பாக்ஸ், எண்பது பொம்மை, சட்டை வகைகள் எல்லாம் இருக்கு. குழந்தையின் பெயரை எழுதி, கவர்ல போட்டு தனித் தனியோ வைச்சிருக்கேன். கிருஸ்துமஸ் தாத்தா வேஷத்துல இருக்கிற மாணிக்கமே தரட்டும். எல்லோரும் உதவி பண்ணுங்க.

(எல்லோரும் போகிறார்கள். ஒரு மணி நேரத்திற்குப் பிறகு, கிறிஸ்துமஸ் தாத்தா வேஷத்தில் மாணிக்கம் அவசரம் அவசர மாக வருகிறான்)

மாணிக்கம்: (வந்து கொண்டே) என்ன மாமா! அந்த கேரம் போர்டு கேட்ட சிறு வனை மறந்துட்டீங்களே! அதே மாதிரி பேனாவிலும் எண்பது குறையுதே! வாங்க மறந்துட்டீங்களா?


மாமா: மறக்கலே மாணிக்கம். நம்ம ஊர் கடை வீதியிலே இருக்கிற எல்லாக் கடைகளிலும் உள்ள பேனாக்களையும்


"விரல்சுத்தின்னு சொல்லிட்டு ஏண்டா பிள்ளையார் கோவிலைச் சுத்தறே?"

"இதுதான் 'விரல்சுத்தி-வினாயகர்' கோவில் ஆச்சே, அதனாலதான்."

"அட மண்டு! இது, 'வரசித்தி-வினாயகர் கோவில்டா..."

- சீர்காழி வி.ரேவதி





நான் வாங்கி விட்டேன்.

மாணிக்கம்: கேரம் போர்ட்டு...?

மாமா: ஒரே ஒரு கடையில்தான் கேரம் போர்டு இருந்தது. அதுகூட விரிசல். அதனால அதையும் வாங்க முடியலே...

மாணிக்கம்: மாமா, என்னோட கேரம் போர்டு இருக்கே. அதைத் தரட்டுமா? நீங்க எனக்காக வாங்கிக்கிட்டு வந்த பேனா கட்டில் ஐம்பது பேனா இருக்கே. அதையும் தந்துடறேன்...

மாமா: (திகைத்து) மாணிக்கம், உண்மையாகவே நீ மாணிக்கம்தானா?

மாணிக்கம்: இந்த கிறிஸ்துமஸ் தாத்தா வேஷம் போட்டாலும் போட்டேன், என மனசு அடியோட மாறிடுத்து மாமா. எல்லாமே நீங்க வாங்கிக் கொடுத்த பொருள் தான்மாமா. ஆனாலும், நான் கிறிஸ்துமஸ் தாத்தாவாகி என் கையால அந்த வசதி இல்லாத பிள்ளைகளுக்குக் கொடுத்தப்போ அவங்க அடைந்த மகிழ்ச்சி இருக்கே அதை அனுபவிச்சாத்தான் புரியும். மற்றவர்களுக்குக் கொடுப்பதால் இப்படிப்பட்ட ஒரு மகிழ்ச்சி கிடைக்கும் என்பது எனக்கு இதுவரை தெரியாது மாமா. அதிலும், யாரோ ஒரு ஊனக் குழந்தைக்காக இன்னொரு குழந்தை கேரம் போர்டு கேட்ட காட்சி என் மனதை உருக்கி விட்டது. நான் எத்தனை சுயநலக் காரனா இருக்கேன் என்பதை எண்ணிக் கூசிப் போனேன். உண்மையான கிருஸ்துமஸ் தாத்தாவாக மாறி இவர்கள் கேட்பதைத் தர முடியவில்லையே என்று நான் இப்போ வருத்தப் படுகிறேன் மாமா.

மாமா: வசதி உள்ள ஒவ்வொருவரும் கிருஸ்துமஸ் தாத்தாதான் மாணிக்கம். இல்லாதவர்களுக்குக் கொடுத்து, அவர்கள் முகம் மகிழ்ச்சியால் பூரிப்பதைக் காண்பதே தனி இன்பம் என்று கூறினாயே, இதைத் தான் திருவள்ளுவர் "ஈத்துவக்கும் இன்பம்" என்று குறிப்பிடுகிறார். இந்த இன்பத்தை, பிறருக்கு எதையும் கொடுத்தறியாத மனமுடையவர்கள் அறியமாட்டார்கள் என்றும் கூறுகிறார்.

மாணிக்கம்: திருவள்ளுவர் என்றைக்கோ கூறியதை நான் இன்று உணர்கிறேன் மாமா. நான் பழைய மாணிக்கம் அல்ல.

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர் (228)

இடம் கிடைக்கும்...



“அம்மா சீக்கிரம். பஸ்ஸுக்கு நேரமாகி விட்டது” என்று பதட்டத்தோடு கேட்டான் அன்வர்.

“இதோ ரெடி” என்று டிபன் பாக்ஸை மூடி அவன் கையில் கொடுத்தாள் அம்மா.

கையில் வாங்கிக் கொண்ட அன்வர்,

“வர்ரேம்மா” என்று அம்மாவிடம் கூறி விட்டு விரைந்தான்.

இந்த 22-சி பஸ்ஸை மட்டும் நம்பவே முடியாது. குறித்த நேரத்திற்கு வருவதில்லை. எப்படியும் இன்று அதைப் பிடித்தே விட வேண்டும். அன்வருக்கு மூச்சிரைத்தது.

தூரத்தில் பஸ் ஸ்டாப் தெரிந்தது. சிமெண்டினால் ஆன நிழற் குடையைச் சுற்றிப் பள்ளிச் சீருடை அணிந்த சிறுவர் சிறுமியர் விளையாடிக் கொண்டிருந்தனர்.

அவர்களைப் பார்த்த போதுதான் அன்வருக்கு நிம்மதி ஏற்பட்டது. அவர்கள் நின்றால் பஸ் இன்னும் வரவில்லை என்று அர்த்தம்.

என்றாலும் வேகத்தைத் தளர்த்தாமல் நடந்தான் அன்வர்.

இன்று முதல் பாடவேளையே ஆங்கிலத்தில் டெஸ்ட். நேற்று இரவு வீட்டில் விருந்தினர்கள். எனவே, அவனால் சரியாகப் படிக்க முடியவில்லை. காலையில் எழுந்ததும் எப்படியாவது நேரம் ஒதுக்கிப் படிக்கலாம் என்றாலோ, ஐயோ!

ஊஹூம்.

பள்ளிக்குத் தயாராவதற்கே நேரம் சரியாகி விட்டது. பறக்க வேண்டிய நிலை!

நேற்று இரவு அரைகுறையாகப் படித்ததை, இப்பொழுதாவது ஒருமுறை சற்றுத் திருப்பிப் பார்க்க வேண்டும்.

ஆங்கில ஆசிரியரின் முகம் அவன் கண் முன்னே வந்து நின்றது.

சிறு தவறு என்றாலும் அவர் கண் சிவந்து விடும். மிகக் கண்டிப்பானவர்.

எப்படியாவது ஒருமுறையாவது திருப்பிப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று மனதில் நினைத்துக் கொண்டான்.

ஆனால் நேரம்தான் இல்லை.

நேரத்தை எங்கே திருடுவது?

என்ன செய்ய?

மனம் அலைபாய்ந்தது.

மூச்சிரைக்க பஸ் நிற்குமிடத்திற்கு வந்தான்.

பாலகுமாரனை இன்னும் காணவில்லையே? தனது நண்பன் வரும் பாதையை ஆவலோடு எதிர்நோக்கினான் அன்வர்.

இன்று உட்காருவதற்கு எப்படியாவது சீட் பிடித்துக் கொள்ள வேண்டும். படித்துக் கொண்டே செல்வதற்கு அது ஒன்றுதான் வழி.

அன்வரும் பாலகுமாரனும் இணைந்து பஸ்ஸில் ஏறுவதிலும், எவ்

முகமது ஹில்மி

வளவு கூட்டத்திலும் உட்கார இடம்பிடித்துக் கொள்வதிலும் மகாநிபுணர்கள்.

ஆங்கில நோட்டைக் கையில் விரித்து வைத்துக் கொண்டு கண்களைப் பாடத்திலும், பாலகுமாரன் வரக்கூடிய சாலையிலுமாக மாறி மாறி ஓட விட்டான்.

அன்வரின் கண்களில் திடீரென ஒரு மின்னல்! ஆமாம் பாலகுமாரன் வந்து விட்டான்.

'டேய் அன்வர்' என்று தூரத்திலேயே பாலகுமாரன் கூவிக் கொண்டு வருவதற்கும், 22-சியின் ஹாரன் ஓசை கேட்பதற்கும் சரியாக இருந்தது.

சாவகாசமாக விளையாடிக் கொண்டிருந்த மாணவர் கூட்டம் பைகளை முதுகில் மாட்டிக் கொண்டு வேகத்துடன் பஸ்ஸை நோக்கி ஓடி வந்தது.

இவ்வளவு கூட்டமும் இவ்வளவு நேரமாக எங்கே இருந்தது?

அன்வருக்கு ஆச்சரியம் ஒரு பக்கம் எரிச்சல் ஒரு பக்கம்.

ஒருசிலர் மட்டுமே இறங்கினர். அதைப் போல் மூன்று பங்குக் கூட்டம் ஏற முண்டியடித்தது.

மாணவர்களும் மற்றவர்களும் திமுதிமுவென ஏறினர்.

பஸ்ஸில் ஏறுவது என்பது கூடப் பெரிய பாடல்ல. பையைத் தூக்கிக் கொண்டு மற்ற மாணவர்களின் பைகளின் இடையே பக்குவமாக நுழைந்து பஸ்ஸில் ஏறுவது என்பதுதான் பெரிய போராட்டம். அதன் சிரமங்களை வர்ணிக்கவே முடியாது.

'தம்பி, என்னப்பா இவ்வளவு பெரிய பையைக் கொண்டு வர்றே! புத்தகங்களைக் கொறச்சிக் கொண்டு வரக் கூடாதா?' என்று ஒரு பெரியவர் எரிச்சல் பட்டார்.

'அவங்க என்ன செய்வாங்க? இப்ப உள்ள படிப்பு அப்படி' என்று இன்னொருவர்.

எப்படியோ பஸ்ஸில் இடித்துக் கொண்டு ஏறியாகி விட்டது.

பஸ்ஸில் ஏறியதும் நண்பர் இருவரின் கண்களும் சுறுசுறுப்பாக ஆராய்ந்தன.

அன்வரின் கண்களில் பளிச்சென்ற ஒரு நம்பிக்கைக் கீற்று. அதோ, ஒரு முதியவர். பாலகுமாரனை அழைத்து முதியவர் இருக்கும் இடத்தைக் கண்களால் சுட்டிக்காட்டினான்.

பாலகுமாரன் புரிந்து கொண்டான். இருவரும் திறமையாக நெளிந்து வளைந்து நகர்ந்து சென்றார்கள். அந்த முதியவரின் பக்கத்தில் வந்து நின்று கொண்டார்கள்.


அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த முதியவர் ஒவ்வொரு நாளும் சந்தையில் இறங்கி விடுவார் என்று.

இன்னும் சில நொடிகளில் சந்தை வந்து விடும்.

பாலகுமாரன் ஒரு பக்கத்தில் நின்று கொண்டான். அன்வர் இன்னொரு பக்கத்தில் நின்று கொண்டான். இருவரும் சேர்ந்து முதியவர் இருக்கும் சீட்டைச் சுற்றி ஒரு பலமான முற்றுகையை ஏற்படுத்தியிருந்தார்கள். முதியவர் எழுந்ததும் உடனே அமர்ந்து விட வேண்டும்.

இல்லை! இல்லை!

அமர்வதற்கு முன்பாகவே கையில்



தயாராக உள்ள பையினை முதியவர் காலி செய்த இடத்தில் வைத்து இடத்தை உறுதி செய்து கொள்ள வேண்டும். சில நேரங்களில், எட்ட நிற்கும் மாணவன் கூடத் தனது பையைத் தூக்கி எறிந்து இடத்தை ஆக்ரமித்துக் கொள்வான்.

எனவே, இருவரும் மிகவும் எச்சரிக்கையாக இருந்தார்கள்.

கண்டக்டர் இந்தக் கூட்டத்தின் நடுவே எதிர்நீச்சல் போட்டு வந்தார். அவர் வரும் போது இருபுறங்களிலும் ஆட்களையும் பைகளையும் ஒதுக்கிக் கொண்டு வந்ததால் கூட்டம் நீரலை போல் ஆடியது. அவர்களின் முற்றுகை அரணும் சிறிது ஆட்டம் கண்டது. என்றாலும், சீட்டின் மேல் உள்ள கம்பியை இருவரும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டனர். அப்பப்பா! பஸ்ஸில் நிற்பது போன்ற சிரமம் உலகில் வேறு எதுவுமே இல்லைடா சாமி!

அதோ சந்தை!


மாணவர்கள் பரபரப்பு அடைந்தார்கள். யார் இறங்கப் போகிறார்கள் என்று கணித்து அங்கங்கே மாணவர்கள தயாராக இருந்தார்கள்.

இடங்களைப் பிடிக்கத் தயாராக இசைநாற்காலிப் போட்டிகளே தான்!

மாணவர்களின் பைகளைத் தள்ளிக் கொண்டு ஒருசிலர் இறங்கினர். சிலர் ஏறினர்.

முதியவரும் சீட்டை விட்டு எழத் தயாராகிய போது இருவரும் சர்வ எச்சரிக்கையானார்கள்.

அவர் மெல்ல எழுந்து நின்று பேலன்ஸ் போய், சீட்டின் மீது பொத்தென்று விழுந்தார். நிதானித்து



மீண்டும் எழுந்தார். எழுந்த மறுநொடியே பாலகுமாரன் பையை வைத்தான்.

அன்று அவர்களுக்கு அதிர்ஷ்ட நாளோ?

பக்கத்தில் உள்ளவரும் எழுந்து விட்டார்.

அவர்களுக்கு ஏகக் குஷி!

அவசரமாக இடங்களில் அமர்ந்தார்கள். சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டார்கள். அன்வர் நோட்டை பிரித்துப் படிக்கத் தொடங்கினான். பின்பு நோட்டை மூடி பாடங்களை மனத்தில் ஓட விடுவதற்காக நிமிர்ந்த போது, -

எதிரே -

கைக் குழந்தையுடன் ஒரு பெண். கூடவே, உடல்நலமில்லாத அவளது கணவன். இருவரும் ஹைகிரவுண்ட் ஆஸ்பத்திரிக்குப் போகிறவர்கள் போலத் தோன்றியது. நிற்க முடியாது திணறினார்கள்.

நண்பர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர்களாக எழுந்து அவ்விருவரையும் அமரச் சொன்னார்கள்.

கணவனும் மனைவியும் கண்களில் நன்றி வழிய அமர்ந்தனர்.

அன்வரின் மனத்திரையில் ஆங்கில ஆசிரியரின் கடுமையான முகம் தோன்றித் தோன்றி மறைந்து கலங்க வைத்தது. இருந்தபோதிலும் அவன் மனத்தைத் தேற்றிக் கொண்டான். அந்த அளவுக்கு அவன் மனத்தில் தண்டனையைத் தாங்கிக் கொள்ளக்கூடிய சக்தி ஏற்பட்டிருந்தது! அந்த சக்தி எங்கிருந்து அவனுக்குக் கிடைத்தது?

இவர்கள் யார்? - போட்டி முடிவு

இந்தப் போட்டியில் எதிர்பார்த்த அளவுக்கு வாசகர்கள் பங்கு கொள்ளவில்லை என்பது சிறிது ஏமாற்றமாகத்தான் உள்ளது. காந்தியடிகள் நமது தேசத் தந்தை என்று வணங்கப்படுபவர். உலக நாடுகள் அனைத்தும் போற்றிடும் மாமனிதர். தேசத் தந்தை என்று போற்றப்படுபவரைப் பற்றி இந்தியராகிய நாம் நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டாமா? அடுத்த ஆண்டிலாவது இந்த மனக்குறை நீங்கும் அளவுக்கு அதிக எண்ணிக்கையிலான வாசகர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.


குலுக்கல் முறையில் சரியான விடையை எழுதிய பரிசு பெற்றவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

1. எஸ். சசீந்திரன், மண்ணிப்பாளையம் போஸ்ட்.
2. எஸ். கே. சரவணன், கூறைநாடு.
3. ஆர். சிவக்குமார், அவலாஞ்சி போஸ்ட்.
4. எஸ். நிரஞ்சனா, நீடாமங்கலம்.
5. ப. செண்பகமுருகன், சின்னாளப்பட்டி.
6. எஸ். அஸ்கர் அலி, நாகூர்.
7. எஸ். கௌரி, திருவண்ணாதபுரம்.
8. நா. சிவகந்தர், வீரபாண்டியன் பட்டணம்.
9. மு. ஆனந்த நடராஜன், சிதம்பரம்.
10. ஜி. புவனேஸ்வரி, அரக்கோணம்.
11. எஸ். சிந்துஜா, தஞ்சை.
12. எஸ். ஆர். செந்தில் ஆறுமுகராஜா, தூத்துக்குடி.
13. இ. அன்பழகன், புதுவை.

சரியான விடை :

1. கஸ்தூரிபா
2. ராஜாஜி
3. ரம்பா
4. ராஜ்கோட்
5. மதுரை
6. நரசிம்ம மேத்தா
7. ஜோஸப்டோக்
8. கோகலே
9. லியோ டால்ஸ்டாய்
10. இந்தியன் ஒபீனியன்
11. உகா என்ற தோட்டி
12. ரமணாஸ்ரமம்



ஆமை போட்ட நிபந்தனை!

சின்னபாபு

முல்லையூர் ராஜா மணிவர்மர் கவலையோடு காத்திருந்தார். அவர் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த செய்தி ஒருவழியாக வந்து விட்டது.

மகாராணிக்குக் குழந்தை பிறக்க வேண்டிய காலம் அது. எந்த நேரமும் குழந்தை பிறந்த செய்தி வரலாம். திருமணமாகிப் பல ஆண்டுகளுக்குப் பின்னர் இப்பொழுதுதான் தந்தையாகும் வாய்ப்பு மகாராஜாவுக்குக் கிடைக்கப் போகிறது.

"ஆண் குழந்தை பிறந்தால் ஐந்து முறை மணியடியுங்கள். பெண் குழந்தையாக இருந்தால் ஒரு முறை மணியடியுங்கள்" என்று ராஜா பணியாளர்களுக்கு உத்தரவிட்டுக் காத்திருந்தார். ஒருவழியாக அவரது பொறுமையைச் சோதித்துக் கொண்டு மணியோசை கேட்டது. ஒன்று, இரண்டு, மூன்று என்று மகாராஜா எண்ணினார்! ஐந்து முறை மணி ஒலித்தது. முல்லையூரை ஆள ஓர் இளவரசன் பிறந்து விட்டான். மகாராஜாவுக்கு எல்லையில்லாத மகிழ்ச்சி. ராணி இருந்த மாளிகைக்கு விரைந்தார்.

மணியோசை மூலமாக அரண்மனை முழுவதும் இளவரசன் பிறந்துள்ள தகவல் தெரிந்து போயிற்று. அரசரிடம் பரிசு வாங்க இதைவிடவா நல்ல வாய்ப்புக் கிடைக்கப் போகிறது? எல்லாப் பணியாளர்களும் ராஜா காத்திருந்த இடத்தில் கூடி "இளவரசன் வாழ்க!"

என்று மகிழ்ச்சி முழக்கம் இட்டனர்.

அமைச்சரும் அங்கே இருந்தார். அரசர் வந்து அமர்ந்ததும், "அரசே, எல்லோருக்கும் பரிசு வழங்க பொற்காசுப் பேழையை எடுத்து வரச் சொல்லியிருக்கிறேன்" என்றார்.

இதற்குள் புதிய இளவரசனையும், ராஜாவையும் புகழ்ந்து பாடிப் பரிசைப் பெற அரண்மனைப் புலவர்களும் வந்து கூடி விட்டனர். எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டது.

எங்கும் மகிழ்ச்சி நிறைந்த அந்த நேரத்தில் உள்ளேயிருந்து ஒரு விசும்பல் சத்தமும், தொடர்ந்து அழுகுரலும் கேட்டது.

"என்ன ஆயிற்று?" என்று கவலையோடு கேட்டார் மன்னர்.

துக்கம் தாளாது அழவும் முடியாது வாயில் கையைப் புதைத்துக் கொண்டு வெளியே வந்தாள்வயதான அரண்மனைத் தாதி.

"ஏன் இப்படி அழுகிறீர்கள்? இளவரசன் பிறந்த உடனேயே இறந்து விட்டானா?" என்று கேட்டார் மன்னர்.

"இல்லை மன்னவா? இளவரசர் உயிருடன்தான் இருக்கிறார். இன்னும் கூறப் போனால் முழு நலத்துடன்தான் இருக்கிறார்."


"பின் ஏன் இப்படி அழுகிறீர்கள்? என்ன நேர்ந்தது? குழந்தை பிறந்ததும் ராணியார் இறந்து விட்டாரா?"

"இல்லை மன்னா. ராணியாரும் நலமாகத்தான் இருக்கிறார்."

மன்னரால் ஆவலை அதற்குமேல் கட்டுப்படுத்த முடியவில்லை. அது ஆத்திரமாக வெடித்தது.

"என்னவாயிற்று என்பதை உடனே நீ கூறவில்லையென்றால் தலையைச் சீவி விடுவேன்" என்று வாளை உருவினார்.

"வேண்டாம் மன்னா, வேண்டாம்" என்று பதறிய தாதி, "மன்னவா, நம் இளவரசருக்கு இரு கைகளிலும் மணிக்



கட்டுக்கு மேல் கை விரல்களோ, உள்ளங்கையோ எதுவுமே இல்லை. மொட்டையாக இருக்கிறது" என்று விம்மினாள்.

மன்னர் அதிர்ந்துபோய் நின்றார். அதை விட அதிர்ந்தவர்களாகப் பரிசு வாங்க வந்தவர்கள் நின்றனர்.

"எதிர்காலத்தில் தனக்குப் பிறகு செங்கோல் ஏந்தி ஆட்சி புரிய வேண்டிய இளவரசன் இப்படி முன் கைகளே இல்லாதவனாக இருந்தால் எப்படி? உடல் உறுப்பில் குறை இருந்தால் மன்னனாகக் கூட முடியாதே? அதைவிடக் கொடுமை தன்னுடைய இன்றியமையாத தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக்கூட இளவரசன் மற்றவர்களை நம்பி இருக்க வேண்டுமே? இவன் எப்படி வாழப் போகிறான்?" என்று மன்னர் கலங்கிப் போய் நின்றார்.

அரண்மனை ஜோதிடர்கள் விரைந்தனர். கணிப்புகள், வாதங்கள், விவாதங்கள் எல்லாம் நடந்தன. யாராலும் ஒன்றும்



செய்ய முடியவில்லை. இளவரசன் முன் கைகள் இல்லாமலேயே நன்கு வளர்ந்தான். அறிவு, ஞானம், கல்வி, பணிவு எல்லாம் நிறைந்தவனாக இளவரசன் வளர்ந்தான். அவனுக்கே தனக்கு ஏற்பட்டுள்ள பரிதாப நிலை வியப்பாக இருந்தது.

ஒருநாள் இமயமலைச் சாரலில் இருந்து ஒரு முனிவர் ராமேஸ்வர யாத்திரைக்காக வந்தார். போகும் வழியில் முல்லையூருக்கு வந்தார். அரசர் இளவரசனையும் அழைத்துக் கொண்டு முனிவரை வணங்கி இளவரசனுக்கு ஏற்பட்டுள்ள குறையைக் கூறிக் கண்ணீர் விட்டார்.

தனது ஞானதிருஷ்டி மூலம் இளவரசனைப் பார்த்த மாமுனிவர், "அரசே, இளவரசருக்கு முன்கைகள் இல்லாமைக்கு அவர் முன் பிறப்பில் செய்த கொடுமைகள்தான். இந்தப் பிறவியில் அவர் குணவானாகத் திகழ்கிறார். ஆனால் முன் பிறப்பில் இவர் நல்லவராக இல்லை. முன் பிறப்பில் இவர் நாவல்பாக்கம் ஜமீன்தாரின் மூத்த மகனாகச் செல்வச் செழிப்புடன் இருந்தார். மற்றவர்களைத் துன்புறுத்தி மகிழ்ச்சி காண்பதில் இவருக்குத் தனியான ஈடுபாடு. குறிப்பாக விலங்குகளைக் கண்டுவிட்டால் இவர் விடவே மாட்டார். விதம்விதமாகக் கொடுமைப்படுத்தி இன்பமடைவார். ஒருநாள் வயது நிறைந்த கடல் ஆமை ஒன்று முட்டையிடக் கடற்கரைக்கு வந்தது. இவர் அதைப் பார்த்து விட்டார். அது கடற்கரை மணலில் இட்ட முட்டைகள் எல்லாவற்றையும் இவர் எடுத்து உடைத்து சேதப்படுத்தினார். அதோடு, அந்த ஆமையைத் தூக்கி வந்து ஒரு பாழுங்கிணற்றில் போட்டு விட்டார். துன்பம் தாங்காது அந்த வயதான ஆமை இட்ட சாபத்தால்தான் இளவரசர் முன்கைகள் இன்றிப் பிறந்திருக்கிறார். இறைவன் மனிதர்களுக்குக் கைகளைத் தந்திருப்பது, உழைத்துப் பிழைக்கவும், மற்றவர்களுக்குத் துன்பம் வரும் போது அவர்களது கண்ணீரைத் துடைத்துக் காக்கவும்தான். அதை மறந்து, பிறரைத் துன்பமடைய வைத்து மகிழ்ச்சி கண்டதால்தான் இளவரசருக்கு இக்கதி ஏற்பட்டுள்ளது" என்றார்.

"செயலுக்கு ஏற்ற தண்டனைதான் என்றாலும், எனக்கு மன்னிப்பே கிடையாதா?" என்று அழுதார் இளவரசர்.

"கண்டிப்பாக மன்னிப்பு உண்டு இளவரசே. அந்த ஆமை இன்னமும் அதே பாழுங்கிணற்றில் உயிர் வாழ்ந்து வருகிறது. அது செய்த நல்ல அறங்களின் காரணமாக, அதை நீங்கள் கிணற்றில் போட்டதும், அன்று இரவே நல்ல மழை பெய்தது. கிணற்றில் நீர் ஊறி விட்டது. அதனால் அது இன்னமும் உயிர் வாழ்ந்து வருகிறது. அதனிடம் சென்று மன்னிப்புக் கேளுங் கள். அதுவே உங்களுக்கு நல்வழி கூறும்" என்று முனிவர் விடைபெற்றார்.

முனிவர் கொடுத்த அடையாளங்களை வைத்துக் கொண்டு பாழுங்கிணற்றைக் கண்டுபிடித்து, ஆமையை அழைத்தார் இளவரசர்.

"ஓ! நீ பிறந்து விட்டாயா? உழைக்கவும், பிறர் துன்பங்களைக் களையவும் இறைவன் அளித்த கரங்களைக் கொண்டு மற்றவர்களைத் துன்பமடைய வைத்து மகிழ்ச்சி கண்ட உனக்கு ஏற்ற தண்டனை



குணத்தில் உயர்ந்தவர்!

ஏறக்குறைய ஒருநூற் றாண்டு
இருந்தவர் ராஜாஜி.
சாரம் நிறைந்த கருத்துக்கள் சொன்ன
சத்தியர் ராஜாஜி.

தோரப் பள்ளி என்கிற ஊரில்
தோன்றிய மனிதர் அவர்.
பாரத விடுதலைப் போரினில் பங்கு
பற்றிய புனிதர் அவர்.

பாமரர் கூடச் சுவையுணர்வோடு
படிக்கும் விதத்தினிலே
இராமா யணத்தையும் மாபாரதத்தையும்
எளிமைப் படுத்தியவர்.

அச்சம் விடுத்தே அகத்தில் பட்டதை
அழுந்தச் சொல்லியவர்.
மெச்சும்படிக்கே வாழ்வில் எளிமை
மிகுந்தே விளங்கியவர்.

அடிமை வாழ்வின் கொடுமை அழித்த
அன்பின் வடிவம் அவர்.
குடியைக் கெடுக்கும் மதுவை ஒழித்த
குணத்தின் உருவம் அவர்.

சாதியில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்றே
கருதப் பட்டவரை,
சாதிக் கொடுமைகள் தவறென உணர்த்தி
சரிசமம் ஆக்கியவர்.

தமிழக ஆட்சியின் தலைமைப் பதவி
தன்னைத் தேடிவர,
சுமையாய் வாட்டிய உழவரின் கடனைத்
தூசாய் நீக்கியவர்.

சுவரில்லாமல் சித்திரம் உண்டெனச்
சொல்லுதல் முறையில்லை.
அவரில்லாமல் மூதறிவுக்கே
அவனியில் இடமில்லை.

- பூவிழிவண்ணன்

கிடைத்து விட்டதா? என் கண்ணீர் வீண் போகவில்லை" என்றது ஆமை.

"என் கொடுமைகளை நான் உணர்ந்து விட்டேன். அதற்காக நான் வருந்தவும் செய்கிறேன். எனக்கு மன்னிப்பே கிடையாதா?" என்று கண்ணீர் விட்டார் இளவரசர்.

"கண்டிப்பாக உண்டு. என்னை வெளியில் எடுக்க வேண்டும். கடலில் விட வேண்டும்."

"இதோ, என் பணியாளர்களை வைத்து உடனே செய்கிறேன்" என்றான் இளவரசன்.

"அதுதான் முடியாது. என்னை யாரும் கையால் தூக்கக் கூடாது. யானையைக் கொண்டு வந்து எடுக்கக் கூடாது. மரக் கிளைகளைப் போட்டு எடுக்கக் கூடாது. கயிறை விட்டு இழுக்கக் கூடாது."

"உண்மையாகவே இது நடக்கக்கூடிய காரியமா? இதைவிட எனக்கு மன்னிப்பே இல்லை என்று கூறி விடலாமே?" என்று அழுதான் இளவரசன்.

"நம்பிக்கை இழக்காதீர்கள் இளவரசே. நான் போட்ட நிபந்தனைகளை தண்டோரா போட்டு மக்களுக்கு அறிவியுங்கள்" என்றது ஆமை.

நம்பிக்கையை முற்றிலும் இழந்துவிட்ட நிலையில், இளவரசன் ஆமை போட்ட நிபந்தனைகளை தண்டோரா போடச் செய்தான்.

"கை, கயிறு, மரக்கிளை, யானையைப் பயன்படுத்தாது வேறு எதைப் பயன்படுத்துவது? நடக்கக்கூடிய காரியமா?" என்று மக்கள் பேசிக் கொண்டனர்.

நாட்கள் ஓடின. ஒருநாள் இளவரசனைத் தேடி ஒரு கிராமத்துப் பெண் வந்தாள். அவள் பெயர் சொக்கி. முல்லையூரைச் சேர்ந்த குக்கிராமத்தில் வசித்து வந்த ஏழை விவசாயியின் மகள். அறிவுமிக்கவள்.

"இளவரசே! என்னை அழைத்துப் போங்கள். ஆமையை நான் எடுக்கிறேன்" என்றாள் சொக்கி.

"நிபந்தனை தெரியுமா? யானை, கைகள், மரக்கிளை, கயிறு இவைகளில் எதை



யும் பயன்படுத்தக் கூடாது."

"தெரியும் இளவரசே" என்று சிரித்தாள் சொக்கி.

எல்லோரும் ஆமை இருந்த கிணற்றுக்குச் சென்றனர்.

"ஆமையாரே, நான் இப்பொழுது ஒரு பொருளைக் கிணற்றுக்குள் விடப் போகிறேன். இது யானையின் துதிக்கையோ, மனிதரின் கைகளோ, மரக்கிளையோ, கயிறோ அல்ல. அதனால், மறுக்காது; பிடிவாதம் பிடிக்காது இதைப் பிடித்துக் கொண்டு மேலே வாருங்கள். இதைப் பிடித்துக் கொண்டே உங்களைக் கடலில் கொண்டு போய் விட்டு விடுகிறேன். குணக்குன்றான எங்கள் இளவரசர், முன்கைகளைப் பெறுவதற்கு உதவிடுரியுங்கள்" என்று கூறிய சொக்கி, கிணற்றுக்குள் இறங்கி தன் அடர்ந்த நீண்ட கூந்தலைத் தொங்க விட்டாள்.

"புத்திசாலிப் பெண்," என்று பாராட்டிய ஆமை, சொக்கியின் கூந்தலைப் பற்றிக் கொண்டது. வலியையும் பொருட்படுத்தாது, பொறுமையாக இருந்து சொக்கி, ஆமையை வெளியே இழுத்தாள். அப்படியே நீண்ட தெருக்கள் வழியாக நடந்து சென்று ஆமையைக் கடலில் விட்டாள்.

இளவரசனுக்கு முன்கைகள் வளர்ந்தன. சொக்கியையே மணந்து ராணியாக்கிக் கொண்டு இளவரசன் நீதிவழுவாது ஆட்சி செய்தான்.



"திருவள்ளுவர் எந்த வழியா தினம் நடந்து போவார் தாத்தா?"

"ஏன்டா" அந்த ரோட்டுக்கு வள்ளுவர் சாலைன்னு பெயர் வைக்கப் போறாங்களா?"


"இல்லை தாத்தா, எங்க வகுப்பாசிரியர் 'வள்ளுவர் வழியில் நடக்கணும்'னு சொன்னாரு!"

- மேலப்பாதி நாகராஜ்

வெளியே வாயேன்!

நகரத்தின் புதிய காலனிப் பகுதி ஒன்றில் ஒரு பெரிய குப்பைமேடு இருந்தது. அந்தக் குப்பை மேட்டிற்கு அருகே ஒரு குட்டிச் சுவர். அதன் அடிப்பாகத்தில் ஒரு சின்னக் குழி இருந்தது. அந்தக் குழி, சுவருக்குக் கீழே பூமியில் நீண்டு இருந்தது. அந்தக் குழிக்குள் எப்பொழுதும் அழுக்கு நீர் சொதசொதவென்றிருக்கும். அதில் ஒரு புழுக் குடும்பம் வாழ்ந்து வந்தது. அப்பாப் புழு, அம்மாப் புழு, எட்டுக் குட்டிப் புழுக்கள்.

"குழந்தைகளே, இந்தக் குழிக்குள் நீங்கள் எங்கே வேண்டுமானாலும் தாராளமாகப் போகலாம். ஆபத்து ஏதும் இல்லை. ஆனால், தப்பித் தவறிக் கூட குழிக்கு மேலே போய் விடாதீர்கள்," என்று எச்சரித்தது அப்பா புழு.



"ஏன்? போனால் என்னவாகும்? நாங்கள் எத்தனை நாட்களுக்குத்தான் இந்த இருட்டுக் குழிக்குள்ளேயே புரண்டு கொண்டு இருப்போம்?"

"அண்ணன் கேட்பது சரிதானே? எதற்காக மேலே போகக் கூடாது என்று பயப்படுத்துகிறீர்கள்? வெளியுலகைப் பார்க்க வேண்டும் என்று எங்களுக்கு ஆசை இருக்காதா?"

குட்டிப் புழுக்கள் எல்லாம் அப்பாவை மாறி மாறிக் காரணம் கேட்டன.

"சரி காரணத்தை நான் சொல்றேன். அங்கே கோழி என்று ஒரு பிரும்ம ராட்சசன் இருக்கிறான். அவன் உங்களைக் கண்டால் சும்மா விட மாட்டான். மூக்கால் கொத்தி, விழுங்கி விடுவான்," என்றது அம்மாப் புழு.

"சரிப்பா" என்று தலையாட்டின எல்லாக் குட்டிப் புழுக்களும்.

பெற்றோர்கள் கவனிக்காத நேரம் பார்த்து எல்லாக் குட்டிப் புழுக்களும் மெதுவாகக் குழியின் வாய்க்கு அருகே வந்து சேர்ந்தன.

"கொக்கரக்கோ!" என்று வெளிப் பக்கம் சேவலின் குரல் கம்பீரமாகக் கேட்டது.

"எத்தனை அழகான வெண்கலக் குரல்! இதுவரை நாம் இதைக் கேட்டதே இல்லையே!"

புழுக்கள் வாய் விட்டுத் தங்கள் வியப்பை வெளிப்படுத்தின.

"கொக்கரக்கோ என்றது யார்?" என்று துணிவாகக் கேட்டது மூத்த புழு.

"நான்தான் கோழி ராஜா. நீங்களெல்லாம் யார்? எங்கேயிருந்து கேட்கறீங்க?" என்று கேட்டது சேவல்.

"நாங்களெல்லாம் புழுக்கள். இந்தக் குழிக்குள் இருக்கிறோம்."

"நீங்கள் எத்தனை பேர்?" என்று ஆவலாகக் கேட்டது சேவல்.

"நாங்கள் அண்ணந் தம்பியாக எட்டுப் பேர்."

"வெளியேதான் வந்து பாருங்களேன். என் தலையில் அழகான கொண்டை இருக்கிறது. நான் ஆடுவேன், கூவுவேன், உங்களுக்கு இந்தக் காலனியைச் சுற்றிக் காண்பிப்பேன். வெளியே வாங்க" என்று இனிமையான குரலில் ஆசைகாட்டி அழைத்தது சேவல்.

அம்மா சொல்லைக் கேட்காத எட்டுப் புழுக்களும் சேவலின் அழைப்பில் மயங்கி ஒன்றன்பின் ஒன்றாக வெளியே வந்தன. எல்லாம் வெளியே வரும் வரை பொறுமையாகக் காத்திருந்த சேவல், தன் உறுதியான அலகால் ஒவ்வொரு புழுவாகக் கொத்திக் கொத்தி உள்ளே தள்ளியது.

அம்மா சொல்லைத் தட்டினால் இந்தக் கதிதான்.

— சி. பூ. இனியவன், மேலவாசல்.

"என்னடா, சும்மா ஏன் உட்கார்ந்திருக்கே? படிக்கிற நேரம் இன்னும் வரலியா?" - குமாரிடம் அப்பா கேட்டார்.


நாற்காலியில் உட்கார்ந்திருந்த அவன் நிமிர்ந்து பார்த்தான். உயரே மின்விசிறி சுழலவில்லை. சாதாரணமாக அவனுக்கு எப்போதும் தலைக்கு மேலாக மின்விசிறி சுழன்று கொண்டிருக்க வேண்டும். மேஜை விளக்கைக் கூட எரிய விடாமல், உட்கார்ந்திருந்தான்.

"என்ன சமாச்சாரம்? சொல்" அவன் எதிரே அப்பா அமர்ந்தார்.

"ஒண்ணும் இல்லே, அப்பா!"

"அப்படிச் சொன்னால் நான் நம்பிடுவேனா? உனக்கு ஏதோ பிரச்னை இருக்கு. அதான் யோசிச்சிட்டு உட்கார்ந்திருக்கறே. புரியறது சொல்?"

குமார் நிதானித்தான்.



அடிக்கலையே!

அவன் பக்கத்து மிஷன் பள்ளியில் நான்காவது வகுப்பு படிக்கிறவன். சுருள் சுருளான அவனுடைய தலைமுடி இடையே மின் விளக்கின் ஒளி புகுந்த போது, சில முடிகள் பொன்மயமாக மின்னின.

"அப்பா, நான் இன்னிக்கு ஒரு பையனைப் பள்ளிக்கூடத்துலே அடிச்சிட்டேன்."

"அடிச்சியா?"

"ஆமா, அப்பா!"

"எதுக்கு?"

"ரொம்ப நாளா அவன் என் கூட சும்மாவானும் தகராறு பண்ணிட்டே இருந்தான். நாலு பேரோட இருக்கற போது கிண்டல் பண்ணுவான். புஸ்தகப் பையிலே மண்ணை அள்ளிப் போடுவான். மேலே வந்து திடீர்னு இடிப்பான். நான் கீழே விழுவேன். வேண்டாண்டா, இது நல்லா இல்லே. நாம ஃபிரெண்ட்ஸ். அப்படிச் செய்யக் கூடாதுன்னு சொல்லிப் பார்த்தேன். கேட்கல்லே. இன்னிக்கு என் பையிலேருந்து பென்சிலைப் எடுக்கப் பார்த்தான். சண்டை வந்தது. அடிச்சிட்டேன்."

"நீ அடிக்கற வரைக்கும் அவன் சும்மா இருந்தானா?"

"உம்?"

"நீ அடிப்பதை பொறுமையா ஏத்துக்கிட்டு அவன் சும்மா இருந்தானான்னு கேட்கறேன். அவன் திருப்பி அடிக்கலியா?"

"இல்லே."

"இல்லையா? ஏன்?"

"என்னை விட அவன் பெரியவன் அப்பா. நான் அப்படி பதிலடி அடிப்பேன்னு அவனுக்குத் தெரியாது போலிருக்கு. அவன் என்ன தொல்லைப்படுத்தினாலும் நான் பொறுத்திட்டுப் போவேன்னு நினைச்சிட்டு இருக்கறான். நான் அடிச்சதும் ஸ்டன்னாயிட்டான். நாளைக்கு வா உன்னைக் கவனிச்சுக்கறேன்னு சொல்லிட்டுப் போயிட்டான்."

"ஓ! அப்படியா? நாளைக்குப் பள்ளிக்கூடம் போனால், அடிப்பானேன்னு பயப்படுறாயா?"

திருவாழத்தான்

"இல்லே. நாளைக்கும் அவன் அடிக்க மாட்டான். அடிக்கறதா இருந்தால், கோபத்துலே இன்னிக்கே என்னை அடிச்சிருக்கணும். நான் அடிச்சது அப்படியே அவனுக்கு அவமானமாப் போயிடுத்து."

"சரி. என்கிட்ட சமாச்சாரத்தைச் சொல்லிட்டே இல்லே? பாடங்களைப் படி. நாளைக்கு மத்த விஷயத்தை எல்லாம் யோசிக்கலாம்" - அப்பா எழுந்தார்.

குமார் மேஜை விளக்கைப் போட்டுக் கொண்டு படிக்க ஆயத்தமானான்.


தினமும் காலையில் அப்பா குமாரைத் தன்னுடைய ஸ்கூட்டரில் கூட்டிச் சென்று பள்ளி வாயிலில் இறக்கி விட்டு, அலுவலகம் செல்வது வழக்கம். மறுநாள் அப்படி இறக்கி விட்டு விட்டுப் போய் விடவில்லை. பள்ளிக்குள்ளேயே ஸ்கூட்டரை ஓர் ஓரமாக நிறுத்திப் பூட்டி விட்டு, அவனுடன் நடந்தார்.

குமாருக்குப் புரியவில்லை. நிமிர்ந்து அவரைப் பார்த்து, "ஏம்பா கூட வரீங்க? போகலே?"

"உன் ஆசிரியரைப் பார்த்துச் சொல்லப் போறேன். எதுக்கும் ஒரு எச்சரிக்கையா இருக்கட்டுமே."

"வேணாம், அப்பா! அப்பா! ஏதாவது இருந்தா நானே சமாளிச்சுக்குவேன். கண்டிப்பா அவன் என்னை ஒண்ணும் பண்ண மாட்டான்."

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. ஒருத்தரைக் கை



நீட்டி அடிக்கறது தப்பு. வன்முறை எப்போதுமே கூடாது. மிஷன் ஸ்கூல்லே படிக்கிறே. ஏசுவைப் பற்றிச் சொல்லிக் கொடுத்திருப்பாங்களே! ஒரு கன்னத்தில் ஒருவன் அடித்தால், மறு கன்னத்தைக் காட்டு'னு அவர் சொல்லி இருக்கார்."



"வேணாம், அப்பா!" - குமார் கெஞ்சினான்.

அப்பா மசியவில்லை. நடந்தார். குமாரும் பலி ஆடு போல அவரைத் தொடர்ந்தான்.

மணி அடித்தது. மாணவர்கள் கூடினர். இறை வணக்கம். குமாரைக் கலந்து கொள்ள விட்டு விட்டு, அப்பா ஓர் ஓரமாகக் காத்திருந்தார். முடிந்ததும், மாணவர்கள் வரிசையாக அவரவர் வகுப்புகளுக்குச் சென்றனர்.

குமாரும் கவலை தோய்ந்த பார்வையுடன் அப்பாவைப் பார்த்து விட்டுத் தன் வகுப்புக்குச் சென்றான். அப்பா அவனுடைய வகுப்பை நோக்கி நடந்தார்.

வகுப்பு ஆசிரியரே எதிரே வந்தார். வகுப்புக்கு வெளியே அப்பா ஆசிரியருடன் பேசினார்.

"குமார், வா இங்கே" என்று - ஆசிரியர் குமாரை வகுப்புக்கு வெளியே அழைத்தார்.

"குமார், யாரோ வகுப்பு மாணவன் ஒருவனை அடித்து விட்டாயாமே?" ஆசிரியர் கேட்டார்.

"ஆமாம், சார்!"

"எதுக்கு அடிச்சே? அடிக்கறது தப்பு இல்லையா?"

"அவன் எனக்கு ரொம்பத் தொல்லை கொடுத்தான் சார்! பொறுக்க முடியாமல் கடைசியா வேறு வழி இல்லாம அடிச்சுட்டேன். அவன் என்னை விடப் பெரியவன் சார்! அப்படிப் பட்டவனை நான் சும்மா அடிப்பேனா? அவன் என்னைத் திருப்பி அடி அடின்னு அடிச்சான்னா என்ன பண்றதுங்கறதைக் கூட நினைச்சுப் பார்க்காமல் துணிந்து அடிச்சிட்டேன். ஏன்னா, அந்த அளவுக்கு அவன் எனக்குத் தொல்லை கொடுத்திருக்கான்."

"யார் அவன்?"

"சேகர், சார்!"

"கூப்பிடு அவனை" ஆசிரியர் சொன்னார்.

குமார் வகுப்பில் நுழைந்து, சிறிது நேரத்தில் அவனை விட நான்கு சென்டி மீட்டர் உயரமான ஒரு பையனுடன் வெளியே வந்தான்.

"சேகர், இங்கே வா" ஆசிரியர்தான் அழைத்தார்.



கார்த்திகைத் திருநாள்!

கார்த்திகை மாதம் பிறந்தது
கருகரு மேகங்கள் திரண்டன!
நீர்த்துளி மழையாய்ப் பொழிந்தது
நிலத்தினில் குளுமை நிறைந்தது!

சீர்மிகு முருகனின் பிறந்தநாள்
திருக்கார்த் திகையாய் மலர்ந்தது!
ஊரினர் ஏற்றிய தீபங்கள்
ஒளியினில் பாவங்கள் கரைந்தன!

மக்களின் நெஞ்சினில் இந்தநாள்
மகிழ்ச்சியைக் கொடுக்கும் புனிதநாள்!
நற்கதி பெற்றிட அனைவரும்
நாயகன் குமரனை வணங்குவார்!

வெடிகள் வெடித்தே குழந்தைகள்
விழாவின் சிறப்பை உணர்த்துவர்!
அடிதடி சண்டை இன்றியே
அமைதி நிலைத்திட வேண்டுவர்!

கார்த்திகை நாளில் ஓர்உறுதி
கனிவாய் ஏற்போம் குழந்தைகளே!
சேர்த்தே அணைத்து எளியவரை,
செய்வோம் உதவிகள் முடிந்தவரை!

— வெற்றியூர் கப.திருஞானம்.

"குமார் உன்னை நேற்று அடித்தானா?" ஆசிரியர் கேட்டார்.

"இல்லையே, சார்!"

"இல்லையா! உன்னை அடிச்சிட்டதா குமார் எங்கிட்ட சொல்றானே! நீயானா, அடிக்கவே இல்லைங்கற? உங்க ரெண்டு பேர்ல யாரோ ஒருத்தர் எதுக்கோ பொய் சொல்றீங்க. குமார் உன்னை அடிச்சதா சொல்றது பொய்யா? இல்லே, அடிக்கவேயில்லைன்னு நீ சொல்றது பொய்யா? எனக்கு அவசியம் உண்மை தெரிஞ்சாவணும்."

ஆசிரியர் முகத்தில் கடுமையும் பேச்சில் உறுதியும் இருந்தது.

சேகர் குமாரை ஒருமுறை குழம்பிப் போனவனாக உற்றுப் பார்த்தான். அவன் முகத்தில் எப்படி, என்ன பதில் சொல்லி ஆசிரியரை மன நிறைவுகொள்ள வைக்கப் போகிறோமோ என்ற கலக்கம் நன்கு தெரிந்தது.

"சார்! நாங்க ரெண்டு பேரும் சிநேகிதர்கள் ஆச்சே! இவன் ஏன் என்னை அடிக்கணும்?"

"குமாருக்கு நீ ரொம்பத் தொல்லை கொடுக்கிறாயாமே?"

"இல்லை, சார்!" என்றான் சேகர்.

குமார் நிதானித்தான். ஆசிரியர் முகத்தையும், அப்பாவின் முகத்தையும் பார்த்தான்.

"நேத்து நீ குமாரை அடிக்கலே?"

"அது விளையாட்டுக்காக, உண்மையில் நாங்க ரெண்டு பேரும் சிநேகிதர்கள்."

அப்பாவுக்குப் புரிந்தது. தன்னை விடச் சின்னவனான குமார் தன்னை அடித்தான் என்று கூறிக் கொள்ள சேகர் வெட்கப்படுகிறான்!

இதுவும் ஒரு விதத்தில் நல்லதுதான். இனிமேல் சேகர் குமாருக்குத் தொல்லை தர மாட்டான். இருவரும் நண்பர்களாக இருப்பார்கள். உளவியல் அடிப்படையில் இந்த உண்மை தனக்குத் தோன்றவில்லை! ஆனால் குமாருக்குத் தோன்றியிருக்கிறதே! சேகரால் கண்டிப்பாகத் தனக்குப் பிரச்னை ஏதும் இருக்காது என்று எத்தனை அழுத்தமாக உறுதியாகக் கூறினான்! அப்பா வியந்து நின்றார்.



காலையில் மணி புத்தகப் பையைத் தோளில் போட்டுக் கொண்டு பள்ளி நோக்கி நடக்கத்தான் செய்தான். அவன் சிற்றூருக்கும் பள்ளி இருந்த நகருக்கும் இடையில் சாலை நீளமானதாச்சே.

வழியில் ஓர் அடர்த்தியான புளியமரம். அதன் அடியில் நின்று சற்று யோசித்தவன், புத்தகப் பையோடு மரத்தில் ஏறி வசதியான, மறைவான இடம் உள்ள கிளையில் உட்கார்ந்து கொண்டான். நேற்றும் இப்படித்தான்.

இதற்குக் காரணமும் இருந்தது. கணித ஆசிரியர் அவனை, மூன்றாம் நாள் வீட்டில் வைத்துவிட்டு வந்து விட்டதாகச் சொன்ன கணக்கு நோட்டை இன்றும் கேட்பார். அதுதான் வீட்டிலும் இல்லையே? அது எங்கே போயிற்றென்று இரண்டு நாட்களாக மூளையைக் குடையாத குறையாக நினைவு படுத்திப் பார்த்தான். வீட்டின் எல்லா இடங்களிலும் தேடினான். எல்லாமே வீண். அது கிடைக்கவே இல்லை.

ஆசிரியர் குட்டினால் இடி இடித்தது மாதிரி இருக்கும். அதை அவன் மண்டை நேற்று எப்படியோ தாங்கிக் கொண்டு விட்டதால் மணி தப்பித்தான். இன்று? ஆசிரியரின் சினத்தீ உச்சத்தைக் காட்டும். அவனுக்கு என்ன ஆகுமோ? என்ன செய்வது என்று மணிக்குத் தெரியவில்லை.

அதனால், வந்தது வரட்டும் என்று பள்ளிக்கு மட்டம் போட்டுவிட்டு மரத்தில் ஏறிப் பொழுதைக் கழித்து வருகிறான். பள்ளிக்குச் செல்லாமல் இப்படிச் செய்வது தவறு என்று அவன் உள் மனம் இடித்துக் காட்டினாலும் ஆசிரியரின் குட்டு தண்டனையை எண்ணிய போது, அதிலிருந்து எப்படியாவது தப்பினால் அதுவே போதும் என்று மனம் நீதி வழங்கியது.

சட்டென்று திரும்பிச் சாலையைப் பார்க்க, மணி அரண்டு போனான். அவனுடைய அப்பா சைக்கிளில் வந்து கொண்டிருந்தார்! இவர் எங்கே இந்தப் பக்கம் வருகிறார் என்று மனதிற்குள் கேட்டுக் கொண்டான்.

அப்பா மரத்தைக் கடந்து செல்லும் வரை இருமி விடக் கூடாது, தும்மி விடக் கூடாது என்ற நினைப்பில் மூச்சைப் பிடித்துக் கொண்டிருந்தான் மணி.

அட! இது என்ன?

சொல்லி வைத்தது போல அவனிருந்த அதே மரத்தடியில் வந்து கீழே இறங்கினார் அப்பா. மணிக்கோ திருடனுக்குத் தேள் கொட்டியது போல் இருந்தது.

சைக்கிளை விட்டு இறங்கிய அப்பா, சாவதானமாக ஸ்டாண்டைப் போட்டு விட்டு சைக்கிளில் ஏதோ செய்யத் துவங்கினார்.

சைக்கிள் செயின் பல்சக்கரத்திலிருந்து நழுவி விட்டிருக்க வேண்டும் என்று நினைத்தான் மணி. அவர் சைக்கிளுடன் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். இரண்டு கை விரல்களிலும் 'கொள கொள' என்று மசி ஒட்டியிருந்தது. 'சீ' என்று வாய் விட்டே அருவருப்பைக் கொட்டினார்.

அழகி

எழுந்து நின்று கையைப் பார்த்தபடி என்ன செய்ய என்று யோசித்தார் அப்பா. புளியமரத்தருகிலேயே கண்மாய் மடை ஓரமாக மெதுவாக வழுக்கி விடாமல் இறங்கித் தண்ணீர் அருகே போய்க் குத்துக் காலிட்டு உட்கார்ந்தார். கையைக் கழுவிப் பார்த்தார். மசி போகவில்லை. களி மண்ணைக் கை நிறைய அள்ளித் தேய்த்துத் தேய்த்துக் கழுவினார். பெரும் பகுதி எண்ணெய்ப் பிசுக்கும் மசியும் போய் விட்டது. மேலும் மசியை அகற்றி விடப் பாடுபட்டுக் கொண்டிருந்த அவரை ஒரு குரல் திரும்பிப் பார்க்கச் செய்தது:

"என்ன சிவஞானம், சைக்கிளை இங்கே நிறுத்திட்டு அங்கே என்ன செய்றே?"

கேட்டவர் மணியின் ஊர்க்காரர்தான். ராமநாதன் என்று பெயர். ஓய்வு பெற்ற அரசு ஊழியர்.

"டவுன்ல இருந்து வர்றீங்களா?" என்றார் அப்பா.

"ஆமா. பேங்குக்குப் போனேன். பஸ் இல்லே. நடந்தே வர்றேன்" என்றார் சைக்கிள் அருகே நின்றவர்.

"நானும் டவுனுக்குத்தான் கிளம்பினேன் ஸார். இங்க வந்து செயின் கழன்று போச்சு. மசியைக் கழுவிப் பார்க்கிறேன், போறவரைக்கும் போகட்டும்னு" என்றார் மணியின் அப்பா.

ராமநாதன் கேட்டார், "வாடகை சைக்கிளா?"

"ஆமா ஸார்."

"உன் சைக்கிள் என்ன ஆச்சு?"

"ஓவராலுக்கு போட்டிருக்கு. அது வீட்ல இருந்தாலும் எம்பையன் மணி தான் எடுத்துட்டுப் போவான். சமயத்தில் கை கொடுக்கிறது வாடகை சைக்கிள் தான். ஆனாலும், நல்ல சைக்கிள் கிடைக்காம இப்படித் தொல்லை."

"இதென்ன பெரிய பை தொங்குது சைக்கிள்ல?"

"பருத்திக்கு அடிக்க பூச்சி மருந்து வாங்கணும், அப்படியே பள்ளிக் கூடத்திலே பையனைப் பார்த்து கொஞ்சம் பணத்தையும் கொடுத்துட்டு வரலாம்னு போறேன். காலையிலே சீக்கிரமா வயலுக்குப் போயிட்டேன். அவங்கம்மா சொன்னா என்னமோ நோட்டு வாங்கணும்னு பையன் கேட்டானாம்.

'பகீர்' என்றது மணிக்கு!


"சரிதான் சரிதான், பள்ளிப் பையன்களுக்கு இதெல்லாம் உடனுக்குடனே செய்யணும்" என்றார் ராமநாதன்.

மணிக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது.

அப்பா மேலும் சொன்னார் : "இப்படிப்பட்ட சமயங்கள்லயாவது ஸ்கூலுக்குப் போயி 'பையன் எப்படி இருக்கான், நல்லா படிக்கிறானா'ன்னு அவங்க ஆசிரியர்களைக் கேட்டுக்கிடலாம் இல்லையா?"

"நீங்க சொல்றது சரிதான். என் பையன் நல்லாத்தான் மார்க் வாங்குறான். நல்லாப் படிக்கிறான்னு அதுலேயே தெரிஞ்சிக்கிடலாம் இல்லையா? நான் அவசியமில்லாம ஸ்கூலுக்குப் போறதில்லே" என்று சொன்ன அப்பா கழுவிய கைகளை உதறியவாறே மேலே ஏறி சைக்கிள் அருகே வந்தார்.

"நான் அதுக்குச் சொல்லல சிவ





ஞானம். உன் பையன் நல்லவனா இருக்க மாட்டான்னு சொல்லலே. எதுக்கும் அவனப் பத்தித் தெரிஞ்சிக்கிடணும் அடிக்கடி - இப்படித்தான் எனக்குத் தெரிஞ்சவர் பையன், பள்ளியில என்னவோ சொன்னாங்க, கண்டிச்சாங்கன்னு ஊர விட்டே ஓடிட்டான். செய்தது சின்னத் தவறு. ஆனா திருச்சி போயி சாப்பாட்டுக்கில்லை, ரவுடிப் பசங்க அவனப் பாத்திருக்காங்க. "பஸ் ஸ்டாண்டு, ரயில்வே ஸ்டேஷன்ல நாங்க காட்டுற ஆளுகளுக்கு இந்தப் பொட்டலங்களைக் கொண்டு போயிக் கொடு. உனக்கு சாப்பாடு வாங்கித் தருவோம் தினம்னு இவனை போதைப் பொருள் விற்கப் பயன்படுத்தி இருக்காங்க. இவனும் அது போதைப் பொருள்னு தெரியாம வித்திருக்கான்."

"ஊரை விட்டு ஓடி வந்த ஒரு தவறைச் செய்தவன், வேறு வழியில்லாம மேலும் மேலும் குற்றங்களைச் செய்ய வேண்டியதாயிடிச்சி. போலீஸ் இந்தப் பையனைப் பிடிச்சி விசாரிச்சிருக்காங்க. அவங்க வீட்டு அட்ரஸ் தெரிஞ்சி நல்ல வேளையா நல்ல விதமா அனுப்பி வச்சிட்டாங்க. சரி. நீ டவுனுக்குப் போ. என்னமோ வாங்கப் போயிட்டிருந்தே. உன்னைப் பிடிச்சி நிறுத்திப் பேசிட்டிருக்கேனே!" என்றார் ராமநாதன்.

அப்பா சைக்கிளை உருட்டினார். "அடடா!" என்றார்.

"என்ன சிவஞானம்?"



''ரிசல்ட், நேற்றைய பேப்பர்லயே வந்துடிச்சு தம்பீ... இன்னைய பேப்பர் எதுக்கு கேக்கறே?''

''விடுபட்ட நம்பர், இன்னைய பேப்பர்ல ஏதாச்சும் வந்திருக்கான்னு பார்க்கணும்!''


— சீர்காழி வி. ரேவதி

''எங்க தாத்தாவிடம் கரும்பைக் கொடுத்து, அதைத் தின்னக் கூலியும் கொடுத்தாலும் வாங்கிக்க மாட்டார்...''

''எதுவும் ஓசியில் வாங்க மாட்டாருன்னு சொல்லு!''

''இல்லை. அவருக்கு 'சர்க்கரை வியாதி'!''

— கி. சிவா



''பஸ், லாரி, ஆட்டோ, கார், ஸைக்கிள் இதெல்லாம் ஓடாத சாலை ஒண்ணு சொல்லேன்?''

''தெரியல்லையே!''

''வாசக சாலை!''

— [illegible]



"இங்க பாருங்க! சைக்கிள்ல காத்துப் போயிடிச்சி. நல்ல வண்டி கொடுத்தான் போங்க! இனிமே போன மாதிரிதான்!"

"அடடா, என்ன செய்யப் போறே?"

"ஊருக்குத் திரும்ப வேண்டியதுதான். டவுனுக்கு இனிமே போக முடியுமா? நாளைக்குத்தான் போகணும். இப்போ வயலுக்குப் போயி பம்ப் செட் திறந்து விடணும். இல்லாட்டி கரண்ட் போயிடுமே" என்றார் அப்பா.

"சரி சரி, வா உருட்டிட்டே போகலாம்" என்று நடந்தார் ராமநாதன்.

அவர்கள் பேசிக் கொண்டே போனார்கள் :

"சின்னப் பையங்க தவறு செய்திடுவாங்க. அதை மறுபடி செய்யாம இருக்கத்தான் தண்டனை தருவாங்க. ஆனால், தண்டனையைப் பெரிய கொடுமை மாதிரி நினைச்சு, கலங்கிப் போய், ஊரை விட்டே ஓடிப் போயிடுறதா? தவறு செய்தவனைக் குற்றவாளின்னு மற்றவங்க நினைக்கிறதோ, தண்டிக்கிறதோ சரியில்லேன்னு முடிவு பண்ணிட்டா என்ன ஆகும்?

"தண்டனைக்குப் பயந்து பொய் சொல்லுவான். தப்பி ஓடுவான். சாப்பிட வழியில்லாம குற்றம் செய்றதுக்கு மத்தவங்க தூண்டுவங்க. அவங்க பிடியில அகப்பட்டுக்கிடுவான்...."

ராமநாதன் சொன்னார்.

"நோட்டைக் கோட்டை விட்டது தவறு. அந்தக் கவனக் குறைவுக்குத்தானே ஆசிரியர் தண்டனை தருகிறார்? செய்யாத குற்றத்திற்கு இல்லையே? அதுக்குப் பயந்துகிட்டு இப்படிப் பள்ளிக்கு மட்டம் போடும் அளவுக்கு குற்றத்தைச் செய்கிறேனே! இது தவறு இல்லையா?" என்று மணியின் மனம் இடித்துரைத்தது. அவன் ஒரு முடிவுக்கு வந்தான்.

மாலையே மணி அம்மாவிடம் எல்லாவற்றையும் சொன்னான். அம்மா, அப்பாவிடம் சொல்லி புதிய நோட்டு ஒன்றுடன் மறுநாள் அவனை ஆசிரியரிடம் அழைத்துச் சென்று இனி 'கவனக்குறைவாக இருக்க மாட்டான்; தவறு செய்யமாட்டான்' என்று உறுதி அளித்து விட்டு வரச் சொன்னான்.

ஆமாம். தவறு பின்னால் குற்றங்களுக்கு விதையாகி விடக்கூடாதே.

வேலப்பனின் சபதம்!

குறிஞ்சிப்பாடி கணேசன்

வேலப்பன் தும்பிபாடியின் முக்கிய புள்ளிகளில் ஒருவன். சொத்து சேர்க்கும் ஆசை அதிகம். அவ்வூரில் யார் சொத்து விற்பதாகத் தெரிந்தாலும் அதை அவனே வாங்கி விட முன்நிற்பான். அதையும் மலிவாக வாங்கப் பல தந்திரங்கள் செய்வான். அது அவனுக்குக் கிட்டவில்லையெனில் அவர்களுக்குப் பல துன்பங்கள் செய்யவும் தயங்க மாட்டான்.

அதே கிராமத்தைச் சேர்ந்தவன் இளையப்பன். மழை பொய்த்து விட்டதால், விவசாயம் செய்யக் கடன் வாங்கி தன் நிலத்தில் இரு இடங்களில் ஆழ்துளைக் கிணறுகளைத் தோண்டினான். இரண்டுமே பாறையாய்ப் போகவே ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்பட்டுப் பெருத்த கவலையுடன் இருந்தான். கடன் கொடுத்தவர்கள் கடனுக்காக நெருக்கினர். தனது வீட்டை வந்த விலைக்கு விற்று, கடன்களை அடைக்க இளையப்பன் முடிவு செய்தான்.

இதை அறிந்த வேலப்பன் நாற்பதாயிரம் பெறுமானமுள்ள இளையப்பனின் வீட்டைப் பத்தாயிரம் ரூபாய்க்குக் கேட்டான். இளையப்பன் மறுத்து விட்டான்.

"அந்த வீட்டைப் பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் யார் வாங்கி விடப் போகிறார்கள் பார்ப்போமே" என்று வேலப்பன் சபதம் செய்தான்.

அதே கிராமத்தில் இருந்த சீராளன் அவ்வீட்டை இருபதாயிரத்துக்கு விலை கேட்ட போது இளையப்பன் கொடுத்து விடுவதாக மகிழ்ச்சியாக வாக்களித் தான்.

இதை அறிந்த வேலப்பன் சீராளனிடம் சென்று 'இளையப்பன் வீடு ராசி இல்லாதது' என்றும் 'அவ்வீட்டில் பில்லி சூன்யம் வைத்திருக்கிறார்கள்' என்றும் கூறி 'அதை வாங்காதே' என எச்சரிக்கை செய்தான்.


வேலப்பனைப் பற்றிய உண்மை சீராளனுக்குத் தெரியும். "நீ வாங்கியிருந்தால் வீடு ராசியுள்ளதாகியிருக்கும். சூன்யம் அற்றதாகியிருக்கும். நான் வாங்க எண்ணுவதால் அதில் கோளாறு கூறுகிறாய்! ஒன்று மட்டும் கூறுவேன். இதனை மனதில் வைத்துக் கொள். நான் வீட்டை வாங்குவது உறுதி. அடுத்த மாதம் ஐந்தாம் நாள் வெள்ளிக் கிழமை பால் காய்ச்சிக் குடிபுகவும் போகிறேன்" என்று மிகத் தெளிவாகக் கூறினான் சீராளன்.

எந்த வகையிலாவது சீராளனை அவ் வீட்டில் குடிபுகாது தடுத்து விட வேலப்பன் திட்டமிட்டான்.

அவ்வூரில் பாம்பாட்டி ஒருவன் வந்து தங்கியிருந்தான். வேலப்பன் அவனுக்குப் பணம் தந்து சதித் திட்டம் ஒன்றைத் தீட்டினான்.

சீராளன் புது வீட்டில் குடிபுகும் நாள் வந்தது. விடியற்காலையில் வெளிச்சம் வராத நேரத்தில் எழுந்த வேலப்பன் பாம்புக் கூடையைத் தன் மேல் துண்டால் மூடி மறைத்து எடுத்துக் கொண்டான். புது வீட்டில் மக்கள் கூடுவதற்கு முன்பாகச் சென்று பூஜை அறையில் ஜன்னல் வழியே வீசி வீட்டு வீடு வந்து சேர்ந்தான்.

வேலப்பன் தன் வீட்டிற்குள் நுழைந்ததும் பாம்பாட்டி அவசர அவசரமாக ஓடி வந்து, "ஐயோ ஒரு தப்பு நடந்துட்டுதுங்க! ஒரு பாம்புக் குப் பதிலா இரண்டு பாம்பு வந்துட்டுதுங்க! பாம்புக் கூடையின் மூடியில் ஒரு பாம்புக்



குட்டி ஓட்டிக் கொண்டு வந்துட்டுதுங்க" என்று பதற்றத் துடன் கூறினான்.

"ஏன் கவலைப்படறே? ஒரு பாம்புக் குப் பதில் இரண்டு இருந்தால் நல்லது தானே? அதுக்கும் நான் பணம் தரேன்" என்றான் வேலப்பன்.

மணி எட்டரை ஆகி விட்டதால் குடிபுகும் வீட்டில் ஏதேனும் விபரீதம் நடந்திருக்கும் என்று எண்ணிய வேலப் பன் பாம்பாட்டியுடன் அவ் வீட்டுக்கு விரைந்தான்.

சீராளனின் வீட்டில் எவ்விதப் பர பரப்பும் காணப்படவில்லை. வெளியே நின்றிருந்த ஒருவரிடம், 'என் பாம்புக் கூடையிலிருந்து ஒரு பாம்பு தன் குட்டி யோட நழுவி ஓடி வந்து விட்டது. இந் தப் பக்கம் யாராவது அதைப் பார்த்திங் களா?' என்று ஒன்றுமே தெரியாதவன் போல் கேட்டான் பாம்பாட்டி.

"அட அதுங்க ரெண்டும் உன்னுடை யதுதானா? நல்ல நேரத்துக்கு வந்ததுப்பா. சாமிக்கு படையல் படைக்கும் போது அதுங்க படம் எடுத்துக் கொண்டு பூசை அறைக்குள் வந்ததுங்க. வெள்ளிக் கிழமை யும் அதுவுமா தங்கள் குலதெய்வம் மக மாயியே இந்தப் பூசையை ஏற்றுக் கொண்டு, தங்களை வாழ்த்த வந்திருப்ப தாக எல்லோரும் மகிழ்ந்து கும்பிட்டாங்க! கூடம் அணைந்ததும் தன் போக்கில் பாம்புகள் போய் விட்டன. அந்தக் கெட்ட மனம் படைத்த கல் நெஞ்சன் வேலப்பன் வேற கருவிக்கிட்டு இருந்த தாலே, சீராளன் ரொம்பவும் கவலைப்பட் டுக் கொண்டிருந்தார். இப்போ, எது வந் தாலும் சரி, நான் இருக்கிறேன் என்று சாமியே வந்து அபயம் தந்த மாதிரி ஆயி டுத்துன்னு அவருக்கு ஒரே மகிழ்ச்சி" என்றார் அவர்.

வேலப்பனின் முகத்தில் ஈயாட வில்லை!

இரண்டு சூட்கேஸ்



புதுக்கோட்டையிலிருந்து திருச்சி சென்று, அங்கிருந்து சென்னைக்குப் புறப் படும் திருவள்ளுவர் எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்தனர் முரளியும் அப்பாவும். அது இரவு நேரப் பேருந்து. சரியாக பத்து மணிக்குப் புறப் பட்டது. சென்னைக்குப் போகும் உற்சாக மிகுதியிலிருந்த முரளி தூங்காது கண் விழித்தபடி வழித்தடத்தைப் பார்த்துக் கொண்டே வந்தான். ஆனால் அவனது அப்பா மற்ற பயணிகளைப் போல இருக்கையில் அமர்ந்ததுமே தூங்கி விழத் தொடங்கினார்.

இடையில் நள்ளிரவில் ஏதோ ஒரு இடத்தில் பேருந்து நின்றது. ஒரு தாடிக் கார ஆசாமி பஸ்ஸில் புதிதாக ஏறினான். அவன் கையில் ஒரு சின்னத் துணிப் பை மட்டுமே. முன் பக்கத்து இருக்கையில் அமர்ந்த அவன் சென்னைக்கு பயணச் சீட்டு வாங்கினான்.

முரளி அவனைப் பார்த்தும் பார்க்காதவன் போல மறுபுறம் திரும்பிக் கொண்டான். பேருந்து புறப்பட்டதும், அந்த தாடிக்காரன் சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்தான். பேருந்தில் 'புகை பிடிக்கக் கூடாது' என்ற அறிவிப்பு இருந்தது. அதைப் பார்த்தும் அவன் புகை பிடித்ததால் அவன் நல்லவனில்லை. ஒரு போக்கிரியாகத்தான் இருக்க வேண்டுமென்று முடிவு செய்து கொண்ட முரளி, அவன் மீது கண்ணாக இருந்தான்.

பேருந்து திண்டிவனம் போய் நின்றது. கண்டக்டர், "பேருந்து ஒரு பத்து நிமிடம் நிற்கும்" என்று கூறிக் கீழே இறங்கிச் சென்றார்.

பேருந்திலிருந்தவர்கள் எல்லோருமே இறங்கினார்கள். முரளி அப்பாவை எழுப்பி திண்டிவனம் வந்து விட்டது என்று விவரம் சொன்னான்.

"காப்பி, டீ சாப்பிடுகிறாயா...?" என்று அப்பா கேட்க, 'வேண்டாம்' என்று சொல்லி விட்டான். இருவரும் கீழே இறங்கி நின்றனர். அப்பா, தான் போய் டீ சாப்பிட்டு விட்டு வருவதாகச் சொல்லி விட்டுச் சென்றார்.

பேருந்து நின்றதும் முதல் ஆளாக இறங்கிச் சென்ற அந்த தாடிக்காரன் இப்பொழுது 'விடுவிடு'வென ஓடி வந்து பேருந்தில் ஏறினான்! பின்னர் இரண்டு சூட்கேசுகளுடன் இறங்கினான். முரளிக்கு 'திக்'கென்றது. இவை யாருடையவை? ஏறும் போது ஒரு துணிப் பையை மட்டும் தானே கொண்டு வந்தான்? இப்போ இரண்டு சூட்கேசுடன் இறங்குகிறானே! இவை எப்படி இவனுக்குக்

சிற்பி சோமு



கிடைத்தன? திருடனாக இருப்பானோ? முரளிக்குச் சந்தேகம் தோன்றியது. ஓடிப் போய் அப்பாவிடம் விவரம் கூறினான்.

"மேற்கொண்டு அவன் என்ன செய்கிறான் என்பதைக் கவனமாகப் பார்த்துக்கோ... ஆளை மட்டும் பார்வையிலிருந்து தப்ப விட்டுடாதே. இதோ நான் பின்னாலேயே வரேன்" என்றவர் டிரைவரையும் கண்டக்டரையும் தேடி அழைத்துக் கொண்டு வந்தார்.

"முரளி! அவன் எங்கே?" என்று கேட்டார் அப்பா.

"அப்பா! அதோ... அந்த கடலூர் செல்லும் பேருந்தில் ஏறி இருக்கிறான்!" என்றான் முரளி.

கண் இமைக்கும் நேரத்தில் மூவரும் ஓடிச் சென்று கடலூர் பேருந்து ஓட்டுனரிடம் அந்தத் தாடிக்காரனைப் பற்றிக் கூறினார்கள்.

"பேருந்து புறப்படும் நேரத்தை நான் சற்றுத் தாமதப்படுத்துகிறேன். அவனையும் தப்பிச் செல்லாமல் பார்த்துக் கொள்கிறேன். போய் உங்களோடு பிரயாணம் செய்பவர்களின் பெட்டிகள் எல்லாம் சரியாக உள்ளதா என்று பார்த்து வாங்க..." என்றார் அந்த ஓட்டுனர்.

அதற்குள், அங்கே பெரியவர் ஒருவரை அழைத்து வந்த முரளி, "அப்பா... அப்பா... இந்த மாமாவோட ரெண்டு சூட்கேசைக் காணோமாம்..." என்று பதறினான்.

இதையெல்லாம் கவனித்து விட்ட தாடிக்காரன் மெதுவாக இறங்கி நழுவித் தப்பிச் செல்ல முயற்சிக்க... ஓட்டுனர் தாவிச் சென்று அவனைப் பிடித்தார்.

முரளியுடன் வந்த பெரியவர், "இது தானுங்க என் சூட்கேஸ்" என்று அடையாளம் காட்டியதோடு, "நல்லவேளை உங்க பையன் மட்டும் இதைப் பார்க்காமல் இருந்தால், இந்த அயோக்கியன் சூட்கேசுடன் கடலூர் போய் இருப்பான். சென்னை சென்று பெட்டியைக் காணாது தவித்துப் போயிருப்பேன். அந்த வெங்கடாசலபதிதான் உங்க மகன் உருவில் வந்து என்னைக் காப்பாற்றி இருக்கிறார்!" என்று நன்றிப்பெருக்குடன் கூறினார்.

முரளிக்கு ஓரே பாராட்டு மழை தான்!



2 வது

சாவி

5. அன்பிற்கு வலிமை உண்டு

ஏதோ யோசனையில் ஆழ்ந்த படியே டிபன் சாப்பிடுவதற்காக சண் முகத்தின் கடையை நோக்கி வந்து கொண் டிருந்தான் ராஜா.

"வணக்கம் அண்ணே!"

கோரசாக ஐந்து குரல்களும் ஒலிப் பதைக் கேட்டு ராஜா நிமிர்ந்தான். எதிரே...!

வழக்கம் போல சந்திப்பும் அவன் நண்பர்களும்தான் சைக்கிளில் மெது வாக வந்து கொண்டிருந்தனர்.

"நாங்க வருவதைக் கூட கவனிக்காம அப்படி என்ன யோசனை செஞ்சுக்கிட் டிருக்கீங்க?"

"ஒண்ணுமில்லே மைலு. தினமும் நீங்க ஜோரா டிரஸ் செஞ்சுக்கிட்டு பள்ளிக் கூடம் போறீங்க. நல்லா படிக்கிறீங்க. எனக்குப் படிப்பு வாசனையே கொஞ் சம் கூட இல்லையேன்னு நினைச்சேன். மனசுக்கு வருத்தமா இருந்துச்சு... அதனாலதான் ஏதேதோ யோசனை செஞ்சுக்கிட் டிருந்தேன்!" - டக்கென்று வாயில் வந்ததைச் சொன் னான் ராஜா.

"அண்ணே! நீங்க கவலைப்படாதீங்க. அறி வொளி இயக்கத்திலே நாங்க சேர்ந்திருக்கோம். முதல்லே, உங்க பேரை எழுதக் கத்துத் தர்றோம். அப்புறம் படிக்க... எழுத..." என்றான் சந்திப்.

"அண்ணே! நேத்திக்கி ராத்திரி நீங்க விராலி மலைக்குப் போய் யாருக்காவது போன் போட்டுப் பேசினீங்களா?" மனத்தை அரித்துக் கொண்டிருந்த சந்தே கத்தைக் கேட்டுவிட்டான் அகமது.

"யார் சொன்னாங்க?"

"எங்க அப்பா."

த. ஜானகி

பெரிய நகைச்சுவையைக் கேட்டு விட்டது போல் கடகடவென்று சிரித் தான் ராஜா.

"நானா.. நானா.. எனக்கு 'அனா, ஆவன் னா'வே தெரியாது. எப்படி போன்லே பேசியிருப்பேன்? உங்கப்பா என்னை மாதிரி யாரையாவது பார்த்திருப்பாரு. சோத்தைத் தின்னுப்புட்டு வழக்கம் போல கம்முனு படுத்துக் கிடந்தேன்... நானாவது... போனிலே பேசறதாவது... ஹ...ஹ்...ஹ...ஹ்ஹா..."

"சும்மா தமாஷுக்குக் கேட்டோம். நாங்க வரோம் அண்ணே! டாட்டா..."

கிளம்பி விட்டனர்.

ஐந்து பேரும் பார்வையை விட்டு மறைந்ததும் ராஜா தனக்குள் பொருமி



னான்.

"யாருக்கும் தெரியாம எவ்வளவு ஜாக் கிரதையா போய் போன் செஞ்சேன்! எமகாதகப் பசங்க! எப்படியோ... கண்டு பிடிச்சுட்டாங்களே...! இனிமே ரொம்ப ரொம்ப ஜாக்கிரதையாகத்தான் இருக்க ணும்..."

யோசித்தபடியே நடந்து கொண் டிருக்கும்பொழுது திடீரென்று தன் காலை யாரோ தொடுவது போன்ற உணர்ச்சி.

தன்னைச் சமாளித்தபடி பார்த்தான். டைகர்தான் செல்லமாக அவனுடைய காலை நக்கிக் கொண்டிருந்தது. "டைகர், உன்னை முதல்லே ஒழிச்சுக் கட்டினாத் தான் எனக்கு நிம்மதி. பார்த்துக்கிட்டே இரு. யாருக்கும் என் மீது சந்தேகம் வராத படி ஒரு நாளைக்கு உனக்குச் சாப்பாட் டிலே விஷத்தை வைத்துக் கொல்லப் போறேன்" என்று மனத்திற்குள் கோபத் தோடு சொல்லிக் கொண்டான்.

ஆனால்... மறுவினாடியே... தன்னை மாற்றிக் கொண்டு விட்டான்.

"டைகரு... வா... வா... நான் நாஸ்தா திங்கப் போறேன். நீயும் வா... உனக்கும் வாங்கித் தாரேன்" என்று கூறியபடி அதைத் தடவிக் கொடுத்தான்.

பகல் மணி இரண்டு இருக்கும். சாப் பிட்டுவிட்டுத் தனக்கு என்று கொடுக்கப் பட்டுள்ள கோயிலை ஒட்டியிருந்த அந்தச் சிறிய ஓட்டு வீட்டின் வாசல் திண்ணையில் அமர்ந்திருந்தான் ராஜா.

"இவ்வளவு நல்ல திறமை இருந்தும் ஏண்டா உன்னைப் பெட்ரோல் பங்க் வேலைக்கு வேண் டாம்னு சொல்லிட்டாங்க?"

"நான் ஒரு அறிவுச் 'சுடர்'னு யாரோ சொன் னதை வைச்சி முன்னெச்சரிக்கை நடவடிக்கையா வேண்டாம்னுட்டாங்களாம்!"

- ஆர். சண்முகசுந்தரம்,
சண்முகம்பாளையம்.

தூக்கம் கண்களை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

"அண்ணே! சாப்பாடு ஆயிடுச்சுங் களா?"

குரல் வந்த திசையை நோக்கிப் பார்வை ஓடிய போது - தாங்கள் வந்த சைக்கிள்களை நிறுத்திவிட்டு சந்திப்பும் அவன் நண்பர்களும் இறங்கிக் கொண் டிருந்தனர்.

"என்ன தம்பி! இன்னிக்கி இம்புட்டு சீக்கிரம் வந்துட்டீங்க?"

"எங்களுக்கு இன்னிக்கு ஐந்து பீரியட் வைத்து விட்டுட்டாங்க" என்று கூறிய படி சந்திப் அவன் முன்னால் உட் கார்ந்து கொண்டான். மற்ற நான்கு பேரும் அவர்கள் பக்கத்தில் உட்கார்ந் தனர்.

"அண்ணே! கிரிக்கெட் போட்டி





கோலி ஆட்டம்

குழியை நோக்கிக் கவனமாய்
குறியை வைத்து விரல்களால்
குழிக்குள் காயைப் போட்டிடும்
கோலிக் குண்டு ஆடலாம்.

கோலிக் குண்டு ஆடியே
குறியை வைத்துப் பழகினால்
நாளைக் கொருநாள் கடுவதில்
நல்ல திறமை காட்டலாம்.

எதையும் எண்ணி எண்ணியே
எண்ணம் விலகி டாமலே
அதையே நாடிச் செய்திடும்
ஆர்வத் தாலே வெற்றிதான்

கோலிக் குண்டு ஆடிடும்
குறும்புக் காரச் சிறுவனே
வேலி இல்லா வானிலே
விரையும் ராக்கெட் ஓட்டுவான்.

— செல்ல கணபதி

யிலே மாநில அளவிலே எங்க ஸ்கூல் ஜெயிச்சுட்டது. அதைக் கொண்டாட எங்களுக்கு அரை நாள் லீவு விட்டுட்டாங்க."

"இன்னிக்கு ஆறாவது பீரியட் கணக்கு. நான் ஹோம் ஒர்க் பண்ணலை. வாத்தியாரிடம் மாட்டிக் கொண்டிருந்தால் செம்மையா வெளுத்திருப்பாரு. நல்ல காலம் லீவு விட்டுட்டாங்க வாழ்க நம்ம கிரிக்கெட் டீம்" என்றான் டேவிட்.

"இல்லாவிட்டா என்ன செய்வே? என் நோட்டைப் பார்த்துக் காப்பி அடிச்சிருப்பே?" என்றான் மயிலு.

"ஆசிரியர் அடிப்பார்னு பயந்து கொண்டு காப்பி அடிச்சுக் கணக்குப் போடறே! நம்மோட நன்மைக்குத்தான் ஆசிரியர் வீட்டுக் கணக்குப் போட்டுக் கொண்டு வரச் சொல்கிறார் என்ற உண்மையை நீ உணரணும்" என்றான் சந்தீப்.

அந்த நேரத்தில், "ஐயோ... என்னை அடிக்காதீங்கப்பா. அடிக்காதீங்கப்பா... நான் இனிமே திருட மாட்டேன்" என்ற அலறல் கேட்கவே அனைவரின் கவனமும் ஒலி வந்த திசையில் சென்றது.

அங்கே -

சலவைத் தொழிலாளி பெரியசாமி தன்னுடைய எட்டு வயது மகன் வீரமலையைத் தன் கையில் உள்ள குச்சியால் துரத்தித் துரத்தி அடித்துக் கொண்டிருந்தார். வீரமலை அடியை வாங்கிக் கொண்டும், அடிக்குப் பயந்து கொண்டும் ஓடிக் கொண்டிருந்தான்.

"பெரியசாமி... புள்ளையை அடிக்கறதை நிப்பாட்டு... என்ன விஷயம்?" என்று ராஜா கேட்டான்.

"பாரு தம்பி. வூட்டுலே யாருக்கும் தெரியாம ஒரு ரூபாயைத் திருடி வாங்கித் தின்னுப்புட்டான். இந்தத் திருட்டுப் புத்திதானே நாளைக்குப் பெரிய ஆளா மாறினாலும் வரும்? வாடா இங்கே... இந்தக் கைதானே திருடிச்சு?" - மீண்டும் அடிக்கக் கையை ஓங்கினான் பெரியசாமி.

சந்தீப் வேகமாக ஓடிச் சென்று வீரமலையைத் தன்னுடன் அணைத்துக்



கொண்டான்.

"வீரமலை... நீ செஞ்சது தப்புத் தானே...?"

"......"

"என்ன பதில் பேச மாட்டேங்கறே? அப்ப நீ திருடினது சரின்னா சொல்றே? அப்படித்தான் ஸ்கூல்லே உனக்குச் சொல்லித் தராங்களா?"

"இல்லே... திருடக் கூடாது... அது பாவம்னு எங்க வாத்தியாரு சொல்லி யிருக்காரு" என்றான் வீரமலை விம்மிய படி.

"அப்ப நீ திருடினது தப்புத்தானே?"

"ஆமாம்."

"உனக்கு வாங்கித் திங்க உங்க அப்பா எட்டணா காசு கொடுக்கறார்னு வெச்சிப்போம். அந்தக் காசை யாராவது உனக்குத் தெரியாம எடுத்துக்கிட்டா உனக்கு எப்படி இருக்கும்?"

தன் குற்றத்தை உணர்ந்த வீரமலை தலையைக் குனிந்து கொண்டான்.

"இனிமே இந்த மாதிரிச் செய்ய மாட்டியே?"

"மாட்டேன்" என்று தலையை ஆட்டி னான் வீரமலை.

"காக வேணும்னா வீட்டிலே அம்மா கிட்டேயோ அப்பாகிட்டேயோ கேட்டு வாங்கிக்கோ. நீ இனிமே நல்ல பையனா ஆயிட்டே இல்லே?"

"ஆமாண்ணா..."

பெரியசாமியின் கோபம் தணிந்தது. வீரமலையை அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

நடைபெற்றதைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான் ராஜா.

"எப்படியோ, அன்பாச் சொல்லி அவன் மனசை மாத்திட்டியே! நீ பெரிய ஆள்தான்!" என்றான் முருகன்.

"என்னோட பிறந்த நாள் அன் னைக்குச் சிதம்பரம் தாத்தா சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. அதன்படி முயற்சி பண்ணிப் பார்த்தேன்."

"சிதம்பரம் தாத்தாவா! அவரு யாரு?" என்று ராஜா வினவினான்.

அவரைப் பற்றியும் சந்திப்பின் பிறந்த

நான் அன்று அவர் கூறிய கருத்துகளைப் பற்றியும் மயிலு சொன்னான்.

"அண்ணே! சிதம்பரம் தாத்தா சொன்ன கருத்து இருக்கட்டும். நீங்க என்ன நினைக்கிறீங்க? திருடனையோ, பகைவனையோ அன்பால திருத்த முடியுமா? இல்லே தண்டனையால மட்டும் தான் திருத்த முடியுமா?" - டேவிட் கேட்டான்.

"திருடனோட மனசுலே திருட்டுப் புத்திதான் இருக்கும். தண்டனைக்குத் தான் பயப்படுவான். அடி உதவுறா மாதிரி அண்ணன் தம்பி கூட உதவ மாட்டாங்கன்னு சொல்லுவாங்க இல்லே...? அடி, உதைக்குக் கூடத் திருந்தாதவன் அன்புக்கா திருந்தப் போறான்! கட்டாயம் அந்த ஆளு திருந்த மாட்டான்."

"அண்ணே! உங்களுக்கு நான் எதிர்க் கட்சி. அன்பால மனசை மாற்றிவிடலாம் என்று நான் நினைக்கிறேன். ஒரு நாளைக்கு என்னோட இந்தக் கருத்தை நீங்க ஒப்புக் கொள்ளத்தான் போறீங்க. அப்ப வெற்றி எனக்குத்தான் கிடைக்கப் போகுது."

"மன்னிச்சிடு சந்திப் தம்பி! என்னால நீ சொல்றதை ஏத்துக்க முடியாது."

அப்பொழுது யாரோ சீட்டி அடிக்கும் ஒலி மெதுவாகக் கேட்கவே ராஜா திடுக்கிட்டான். மற்ற ஐவரும் அந்த ஒலியைக் கவனிக்கவில்லை.

"சரி தம்பிங்களா... உங்களுக்குப் பரீட்சை சமயம்... போய்ப் படிங்க... இன்னொரு நாளு இதைப் பத்தி விரிவாப் பேசிக்கலாம்."

"சீக்கிரமா வீட்டுக்குப் போங்கன்னு மறைமுகமாச் சொல்றீங்க! அதானே அண்ணே? நாங்க வரோம்..."


எல்லோரும் சிரித்தனர்.

மயிலு சைக்கிளில் ஏறிக் கொண்டான். மற்ற நான்கு பேரும் அவனைப் பின்தொடர்ந்தனர்.

ஐவரும் சென்று விட்டனர் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு வீட்டின் பின்பக்கம் வேகமாகச் சென்றான் ராஜா.

அங்கே -

(தொடரும்)



எருமை மாடு

தடித்த தோலை உடையது.
குடிக்கப் பாலும் தருவது.
அடிக்கும் வெயிலும் வாடையும்
எருமை மாட்டுக் கொன்றுதான்.

பெருமை மிக்க பூமிபோல்
பொறுமை மிக்க ஜீவனாம்
எருமை மாட்டின் அருமையை
அறிய வேண்டும் தம்பி நீ!


மாடு போடும் சாணமும்
வயலுக் குதவும் உரமென.
வீடு மெழுக உதவுமே.
எருவும் தட்டி எரிக்கலாம்.


ஒன்று சூடு போட்டதும்
உறைக்கும் நல்ல மாட்டுக்கு.
கன்று போலக் கொஞ்சினால்
கொம்பு பாய்வ தில்லையே!

கால தேவன் தூதனாம்
கால னுக்கு வாகனம்
வாலும் உள்ள எருமைதான்
விளக்கிச் சொல்லும் புராணங்கள்.


— சி.விநாயகமூர்த்தி


அழகி குல்னாராவும் அதிசயங்கள் மூன்றும்!





வரம் கிடைச்சா சமையல் காரரையும் ரொட்டிக்காரரையும் கல்யாணம் செய்துப்பானேன்? ராஜாவையே கல்யாணம் பண்ணிக்கிறது!
மன்னர் மூவர் விருப்பங்களையும் நிறைவேற்ற தீர்மானித்தார். அரண்மனைக்கு அழைத்து...
அடுத்த மூன்று நாட்களில் உங்க மூவருக்கும் அவரவர் விருப்பப்படி அடுத்தடுத்து கல்யாணம்.
மூவரின் தகுதிக்கு ஏற்ற செலவில் திருமணங்கள் நடந்தன. ராஜாவின் கல்யாணம்!
கோலாகல வைபவம்! வாழ்க! வாழ்க!
ராணி அனைவருக்கு நாளடைவில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. ஆனால்...
செத்துப் போய் பிறந்ததாகச் சொல்லிடு-வோம்!
இரு சகோதரிகளுக்கும் பொறாமை. இரவின் அமைதியில்...
குழந்தையைக் கூடையில் வைச்சு ஆற்றில் எறிஞ்சுடலாம்.


அரண்மனையை யொட்டி ஒரு ஆறு ஓடியது. ... விடியும் நேரம்...
உடலைப் புதைச்சுட்டதாகச் சொல்லிடலாம்!
அரண்மனையின் தலைமைத் தோட்டக்காரன் சற்றுத்தள்ளி ஆற்றோரம் வசித்தான்...
குளிக்க வந்தா கூடை கிடைக்குதே!
மூடியைத் திறக்க...
அட!
வீட்டுக்கு எடுத்துப் போனான்.
நமக்கோ குழந்தை இல்லை. கடவுள் கொடுத்ததா நினைச்சுப்போம்.
அடுத்த ஆண்டு ராணிக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன.
இவற்றுக்கும் முதல் குழந்தையின் கதியே தான்... ஹி ஹி!
உஷ்!


இந்தத் தடவையும் கூடை தோட்டக்காரன் வசம் சிக்க...
ஆணும் பெண்ணுமா ரெண்டு!
குடிசையில் மகிழ்ச்சி.
குல்னாரா! உன் தம்பி, தங்கச்சி பாரு!
மன்னருக்கு ஏமாற்றம்...
மூன்று குழந்தைகளும் செத்துப் பிறந்தன! சாமானியப் பெண்ணை ராணியாக்கியதே தப்பு! அவளை விரட்டி விடுங்கள்!
தலைநகர் எல்லையில் ஒரு குடிசையில் வாழ்ந்தாள் ராணி. மக்கள் அனுதாபப்பட்டு வர...
எல்லாம் நன்மைக்கே. நாடு நலம் பெற பிரார்த்தனை செய்வோம்.
ராணியின் பெருமை பரவ...
என்ன கம்பீரம்!
ரொம்ப அமைதி!
அபரிமித பக்தி


இதற்கிடையில் குழந்தைகள் நன்கு வளர...
உங்களுக்கு ஒரு குரு ஏற்பாடு செய்திருக்கேன்.
குல்நாரா மற்ற இருவரையும் விட எதிலும் முன் நின்றாள்.
படிப்பில தான் கெட்டிக்காரின்னா வாட்போரிலுமா! பலே!
தலைமைத் தோட்டக்காரர் ஓய்வு பெற்று தமது கிராமத்தில் குடியேறினார்...
அம்மாவுக்கும் எனக்கும் வயசாயிடுத்து...
குழந்தைகள் கண்டெடுக்கப்பட்ட விதத்தைக் கூறாமலே...
அப்பா காலமான துக்கத்தை தாங்காம அம்மாவும் இறந்துட்டாங்க.
இனி நாம் தான் ஒருவருக்கு ஒருவர் துணை.
ஒரு நாள் குல்நாரா வீட்டில் தனித்திருக்க...
ஒரு பாய் இருக்குமா? பிரார்த்தனை முடிந்ததும் திருப்பித் தந்துடறேன்.



கிழவிக்குப் பாய் மட்டுமின்றி பிரார்த்தனை முடிந்ததும்...
சாப்பிடுங்க
நீ ரொம்ப நல்ல பெண்.
உனக்கு மூன்று அதிசயங்களைப் பற்றி சொல்றேன். இந்தியா நோக்கிச் செல்லும் சாலையில் இருபது நாள் பயணத்தில்...
...ஒரு பேசும் பறவை உண்டு. அது பாட ஆரம்பித்தால் சுற்று வட்டாரத்தில் எல்லா பட்சிகளும் பாடும். பாடும் மரம் ஒன்றிருக்கு. அதன் இலைகள் பருவ காலத்துக்கு ஏற்ப கோஷ்டி கானம் இசைக்கும்!
மூணாவது?
பொன்னான தண்ணீர். அதை கிண்ணத்தில் ஒரு சொட்டு விட்டதும் பாத்திரம் நிரம்பி விடும். ஆனால் வழியவே செய்யாது!
கிழவி போய் விட்டாள். மாலையில் சகோதரர்கள் வீடு திரும்ப...
என்ன துல்நாரா? ஒரு மாதிரி இருக்கே?



குல்நாரா விவரம் கூற...
கவலைப்படாதே! நான் அந்த அதிசயங்களைக் கொண்டு வரேன்.
மறுநாள் பஹ்ர்மான் ஒரு கத்தியைத் தந்தான்.
உறையிலிருந்து உருவும் போது சிவந்திருந்தால் எனக்கு ஆபத்து என்று அர்த்தம்.
பஹ்ர்மான் விரைந்து போய் இருபதாவது நாள்...
அந்த கிழவனை விசாரிப்போம்.
என் தப்பரையை எடுத்து உருட்டு. அது வழி காட்டிச் செல்லும். மலை அடிவாரத்தில் குதிரை விட்டிறங்கி நடந்து வா.
ஆனால் ஒன்று... யார் என்ன சொல்லி உன்னைத் திட்டினாலும் திரும்பிப் பார்க்காதே! கல்லாயிடுவே!
நன்றி பெரியவரே!




பஹ்ரமான் கப்பரையை உருட்டிவிட்டுத் தொடர...
அசடு! இவனைப் போல நூற்றுக் கணக்கானவர்கள் அந்த மலைகளில் கல்லா சமைந்து கிடக்காங்க! ஹி... ஹி... ஹீ...
பஹ்ரமான் மலை அடிவாரத்தை அடைய...
அதிசயம்தான்! உருண்டு சொந்தக்காரனிடம் திரும்பிப் போகுது!
மலைமேல் பஹ்ரமான் ஏற...
முட்டாள்! மேலே போகாதே!
அசடே!
திருடா!
மடையா!
கொலைகாரா!
பஹ்ரமான் பொறுமை இழந்து திரும்பிப் பார்க்க...
யார் என்னைத் திட்டுவது? என்ன தைரியம்!
அந்தக் கணமே கற்சிலையானான்!


ஒவ்வொரு நாளும் கத்தியை ஆராய்ந்தாள் குல்நாரா. அன்று...
ஆ! அண்ணனுக்கு ஆபத்து!
சகோதரன் பெர்விஸ்...
கவலைப்படாதே! நான் போய் அண்ணனை மீட்டு வரேன். இந்தா ஜெபமாலை...
...ஜெபம் பண்ண மணிகளை நகர்த்த முடியலை என்றால் எனக்கு ஆபத்து என்று அர்த்தம்.
புஹ்மானுக்கு நேர்ந்த கதியே பெர்விஸூக்கும் ஏற்பட...
ஆ! மணிகள் நகர மறுக்கின்றன!
குல்நாரா தானே புறப்பட்டாள்...
அண்ணன்களை மீட்பேன்; அதிசயப் பொருள்களையும் அடைவேன்!


கிழவனை சந்திக்க...
உன் அண்ணன் மார்களுக்கு நேர்ந்த கதி உனக்கும் நேரணுமா?
சமாளிப்பேன். வெற்றி பெறுவேன்!
மலை ஏறும் போது...
அசடே!
பைத்தியம்! திரும்பிப் போ!
உன் அண்ணன்கள் மகா முட்டாள்கள்!
குல்நாரா திரும்பிப் பார்க்காமல் முன்னேற...
கூக்குரல்கள் தேய்ந்து அடங்குகின்றன. மன உறுதியுடன் நடப்பேன்.
மலை உச்சியில்...
ஆகா! நான் தேடி வந்த அதிசயம் இதோ.
குல்நாரா, நான் இனி உனக்குச் சொந்தம்.
பாடும் மரம்? பொன்னிற நீர்?


என் கூண்டிலே ஒரு சிறு குடுவை இருக்கு பார். அருகில் ஓடும் நதியிலிருந்து அதில் நீர் நிரப்பு. பக்கத்தில் உள்ள மரத்திலிருந்து சிறு கிளை ஒடித்து குடுவையில் செருகு.
குல்நாரா அவ்வாறே செய்தாள். திரும்பும் வழியில்...
என் அண்ணன்களை உயிர்ப்பிக்க வேண்டுமே...
பொன்னிற நீரைப் பாறைகள் மீது தெளி.
நூற்றுக் கணக்கானவர்கள் உயிர் பெற்றனர்...
நன்றி, சகோதரி!
மீண்ட சகோதரர்களுடன் திரும்பி வர...
குல்நாரா... உன் அழகு போலவே உன் அறிவும் பிரகாசிக்கிறது.
வீடு திரும்பி...
மரத்தை இங்கு நட்டு... அருகில் ஒரு கிண்ணத்தில் மந்திர நீர் ஊற்றி வைக்கிறேன்.




மரம் வேகமாக வளர, அதன் உச்சியில் பாடும் பறவை!
சுற்று வட்டாரத்தில் எல்லா பறவைகளும் இதனோடு சேர்ந்து ஆனந்தமாய்ப் பாடுகின்றன!
மரத்தின் இலைகள் கோஷ்டி கானம் இசைக்கின்றன.
கிண்ணத்திலிருந்து பொங்கு புனல் பீறிட்டாலும் ஒரு சொட்டு சிந்தவில்லையே!
இந்த அதிசயங்களைக்காண மக்கள் கூடினர்...
ஆச்சரியம்!
ஆஹா!
செய்தி அரசர் குஸ்ரூ காதுகளுக்கு எட்ட...
அந்த அற்புதங்களை நேரில் போய்ப் பார்க்க வேண்டும்.
அரசரை குல்நாரா வரவேற்று...
என் எளிய தோட்டம்...
ஆனாலும் விலை மதிப்பற்ற அதிசயங்கள்!


அப்போது பேசும் பறவை...
மன்னரே! உங்கள் கண்கள் அற்புதங்களைப் பார்க்கின்றன; ஆனால் காதுகள் பொய்யில் ஏமாறுகின்றன!
மன்னர் திடுக்கிட்டு...
என்னது!
ராணிக்கு இறந்து போன குழந்தைகள் தான் பிறந்தன என்று எப்படி நம்பினீர்கள்?
அவள் சகோதரிகள் இருவரும் சொன்னார்களே...!
அவர்கள் பொறாமையால் பேசியதை நீங்கள் உணரவில்லை!
குல்நாராவும் அவளது இரு சகோதரர்களும் உங்கள் குழந்தைகளே!
உங்களுடைய தலைமைத் தோட்டக்காரனால் காப்பாற்றி, வளர்க்கப்பட்டு இங்கு குடியேறி, வாழ்கிறார்கள்.




மன்னர் பரவசமாக...
என் கண்மணிகளா! உங்கள் தாயாரின் சாயலை உங்களிடம் கண்ட போதே நினைத் தேன்...என்னை மன்னியுங்கள்.
உங்களை மன்னிக்க வேண்டியது எங்கள் தாயாரே, நாங்கள் அல்ல.
மூன்று நாட்களில் புறப்பட்டு நிலநகர் வந்துவிடுங்கள். நான் முன்னால் போகிறேன்.
மன்னர் குஹா தலைவருடன் திரும்பி...
ராணி! என்னை மன்னித்து விடு. நம் குழந்தைகள் உயிரோடு இருக்கிறார்கள்! வந்து கொண்டிருக்கிறார் கள்.
உங்கள் மீது தப்பில்லை! என் சகோதரிகள் செய்த துரோகம்.


அரண்மனை திரும்பி...
இனி எந்நாளும் உன்னைவிட்டுப் பிரியமாட்டேன்.
என் சகோதரிகளை மன்னியுங்கள்.
அது மட்டும் முடியாது. குற்றம் புரிந்தவர்கள் தண்டனை பெறுவதே ராஜநீதி. உனக்கு வருத்தம் தந்தாலும் நான் கடமையாற்ற வேண்டும்.
சகோதரிகள் சிறையில் அடைக்கப்பட்டனர்.
ஐயோ, பத்தாண்டு தண்டனையாம்!
நல்லொழுக்கமும் பிரார்த்தனையும் தண்டனையைக் குறைக்கும். மன்னர் கருணை உள்ளவர்.
மூன்று நாட்கள் சென்று ராஜகுமாரர்களும் ராஜகுமாரியும் பட்டணப் பிரவேசம் செய்ய
வாழ்க!
வாழ்க!
அரண்மனையில்...
என் கண்மணிகளா!
அம்மா!



பேசும் பறவையோடு சேர்ந்து தலைநகரில் எல்லா பட்சிகளும் பாடவே
பாடும் மரத்தின் இலைகள் கோஷ்டி கானம் இசைக்க...
பொன்னிற நீர் சிதறாமல் பொங்கு புனலாய் அழகு செய்ய...
மக்கள் ஆனந்தமாய் வாழ்ந்தார்கள்!
இந்தக் கதையை இன்றைக்கும் பெர்ஷியாவில்...
...அதாவது ஈரானில் மக்கள் ஒருவருக்கொருவர் சொல்லி, மகிழ்கிறார்கள்...
கதையும் முடிஞ்சுது; கத்திரிக்காயும் காய்ச்சுது!

சிரிப்பு...



''பாட்டி! நீ முதியோர் கல்வியில நிறைய மார்க்கு வாங்கி பாஸ் பண்ணிட் டியாமே?''

''ஆமாண்டா பேரா... தோழிகளுக்கு 'பார்ட்டி' கொடுக்கலாம்னு இருக்கேன்!''

— இ. சிவா



''காலை 12 மணிக்கும் இரவு 12 மணிக்கும் என்ன வித்தியாசம்?''

''காலை 12 மணிக்கு வகுப்புல தூங்குவேன். இரவு 12 மணிக்கு வீட்டில தூங்குவேன்!''

— ச.வே. முருகராம்



'''கம்'பியூட்டருக்கு எதிர்பதம் என்ன?''

'''கோ'பியூட்டர்!''


— சீர்காழி வி. ரேவதி



''உங்க பாட்டி கிட்ட வெடி இருக் கறதா சொன்னாயே, என்ன வெடி?''

''ஹி... ஹி... அவங்க காலிலே இருக்கிற பித்த வெடிதான்!''

— சீர்காழி சாமா



''என்னது! உன் பேரு டைம்மா?''

''மணிங்கற பேரை இங்கிலீஷில் வெச்சிக்கிட் டேன்!''

— சோமசேகர்

கேட்கட்டுமா டாக்டர்?

★ வி. கௌரி, சீர்காழி.

? இரத்தம் என்ன காரணத்தால் சிவப்பாக இருக்கிறது?


! இரத்தத்தில் 'ஹீமோகுளோபின்' (Haemoglobin) என்ற நிறமிப் பொருள் உள்ளது. இதன் நிறம் சிவப்பு. இதனால்தான் இரத்தமும் சிவப்பாக இருக்கிறது.

★ எஸ். குமார், காரைக்குடி.

? தேள் கடித்து மனிதர்கள் இறப்பார்களா?

! தேள் கடித்தால் மனிதர்கள் இறப்பதற்கும் வாய்ப்பு உண்டு என்றாலும், பெரியவர்களை விட குழந்தைகள் தேள்கடியால் இறப்பது சகஜம். எப்படியெனில், குழந்தையின் உடம்புக்குள் தேளின் விஷம் குறைந்த அளவு சென்றாலே போதும்; ஆபத்து நிச்சயம். அது மட்டுமின்றி பெரியவர்களுக்கு உள்ளதுபோல் விஷ எதிர்ப்பு சக்தி குழந்தைகளுக்கு அதிகம் இருப்பதில்லை. மேலும், பல சமயங்களில் குழந்தைக்கு 'என்ன கடித்தது' என்பதே தெரிவதில்லை. இதனால் சிகிச்சை பெறுவதற்குக் காலதாமதம் ஆகும். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் குழந்தையின் உடம்புக்குள் சென்ற தேளின் விஷம் இரத்த ஓட்டத்தைத் தடை செய்யும். இதனை 'Peripheral Circulatory Failure' என்பார்கள், மருத்துவர்கள். இதனால் இதயத்திற்கு இரத்தம் செல்வது தடைபடும். இதயத்துடிப்பும், நாடித் துடிப்பும் குறையும். இரத்த அழுத்தம் கீழிறங்கும். இவற்றின் விளைவாகக் கல்லீரல், சிறுநீரகம், நுரையீரல், மூளை போன்ற உறுப்புகளுக்கு இரத்தம் செல்வதில்லை. இதனால் குழந்தையின் உயிருக்கு ஆபத்து நேரும். தேள் கடித்து உடனேயே தேவையான மருத்துவச் சிகிச்சையை மேற்கொண்டால் உயிருக்கு ஆபத்து வருவதில்லை.





★ இரா. புவனேஷ்வரி, பெண்ணாகரம்.

? 'Pathology' என்பது எதனைப் பற்றிய படிப்பு?

! 'பெத்தாலஜி' (Pathology) என்பது நோய்க் குறியியல் படிப்பைக் குறிக்கும். மனிதர்களுக்கோ அல்லது விலங்குகளுக்கோ நோய் உண்டாகும் போது உடம்பிலும் திசுக்களிலும் நிகழ்கின்ற மாறுதல்களை விரிவாக எடுத்துக் கூறுகிறது இந்தப் படிப்பு.

★ எஸ். நாகராஜன், மேலப்பாதி.

? இரத்த வங்கியிலிருந்து உடலுக்குச் செலுத்தப்படும் இரத்தத்தில் சிவப்பணுக்களும், வெள்ளையணுக்களும் உயிருடன் இருக்குமா? அல்லது உடம்பினுள் சென்ற பிறகுதான் உற்பத்தி செய்து கொள்ளுமா?

! இரத்த சேமிப்பு வங்கிகளில் (Blood Bank) இரத்தம் முறைப்படி பாதுகாக்கப்படும் போது சுமார் 20 நாட்களுக்கு இரத்தத்தில் உள்ள சிவப்பணுக்களும், வெள்ளையணுக்களும் உயிருடன் இருக்கும். 20 நாட்களுக்கு மேற்பட்ட இரத்தத்தில் அவை அழிந்து விடும். அப்போது அந்த இரத்தத்தை மற்றொருவருக்குச் செலுத்த முடியாது; செலுத்துவதில்லை.

★ ஆர். வெங்கடேஷ், இரும்புலியூர்.


? ஒரு சராசரி மனிதன் ஒரு சுவாசச் சுற்றின் போது எவ்வளவு காற்றை உள்ளிழுத்து, எவ்வளவு காற்றை வெளியேற்றுகிறான், டாக்டர்?


! சாதாரணமாக சுவாசிக்கும் போது 500 மி.லி. காற்றை உள்ளிழுக்கிறோம்; 500 மி.லி. காற்றை வெளிவிடுகிறோம்.

? மனித உடலில் எந்த ஹார்மோன் கல்லீரலில்

தேள் கடித்து இறப்பார்களா?

டாக்டர் கு. கணேசன்





குளுக்கோஸ் உற்பத்தியை அதிகரிக்கிறது, டாக்டர்?

! 'இன்சுலின் (Insulin) என்ற ஹார்மோன்தான் கல்லீரலில் குளுக்கோஸ் உற்பத்தியையும் சேமிப்பையும் அதிகரிக்கிறது.

★ அ. கலீல் ரஹிமான், பள்ளிப்பட்டு.


? டாக்டர், சிறுநீர் கற்கள் எதனால், எப்படி உருவாகிறது? கொஞ்சம் விவரியுங்கள், ப்ளீஸ்?



! சிறுநீர் கற்கள் உருவாவதற்கு முதல் காரணம் நம்முடைய உணவுப் பழக்கம். கால்சியம், மெக்னீசியம், பாஸ்பேட், ஆக்ஸலேட் போன்ற தாதுக்கள் நிறைந்த உணவுகளை மிகையாக உட்கொள்கிறவர்களுக்கு சிறுநீரகக் கற்கள் தோன்றுகின்றன. இரண்டாவது காரணம், சிறுநீரகப் பாதையில் சிறுநீர் செல்வதற்குத் தடை ஏற்பட்டால், சிறுநீர் சிறுநீரகப் பாதையில் தேங்கும். அப்போது சிறுநீரில் உள்ள தாதுக்கள் படிகங்கங்களாக மாறி சிறுநீரகக் கற்களை உருவாக்கும். மூன்றாவது காரணம், சிறுநீர்ப் பாதையில் அடிக்கடி நோய்த் தொற்று ஏற்படும் போது அவ்விடத்தில் சிறு சிறு குழிகள் தோன்றும். அந்தக் குழிகளில் சிறுநீர் தங்கும். இதனால் சிறுநீரகக் கற்கள் உருவாகும். வேலை காரணமாகவோ அல்லது வெயில் காரணமாகவோ கூடுதலாக வியர்வை வெளியேறும் போது, சிறுநீரின் அடர்த்தி அதிகமாகும். அதில் தாதுக்களின் அளவு அதிகரிக்கும். இதன் மூலமும் சிறுநீரகக் கற்கள் தோன்றும். இவை தவிர, வைட்டமின் D மற்றும் தைராக்சின் ஹார்மோன் மிகையாக இருந்தாலும் சிறுநீரகக் கற்கள் தோன்றுவதற்கு வாய்ப்பு உண்டு.


★ ஜி. ஜி. கிருஷ்ணன், விசலூர் -1.

? நாம் சாதாரணமாக பயன்படுத்தும் உப்பில் அயோடின் உள்ளதா? அல்லது அயோடின் கலந்த உப்பு என்று தனியாக உள்ளதா?


! உப்பளங்களிலிருந்து எடுக்கப்படும் உப்பில் அயோடின் இல்லை. அந்த உப்பில் அயோடினைக் கலந்து 'அயோடின் கலந்த உப்பு' (Iodised Salt) என்ற முத்திரையுடன் தனியாகக் கடைகளில் விற்கிறார்கள். வரும் புத்தாண்டிலிருந்து தமிழகத்தில் அயோடின் கலந்த உப்பு மட்டுமே விற்க வேண்டும் என்று தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. எனவே, இனிமேல் உப்பு என்றாலே அது அயோடின் கலந்ததாகத்தான் இருக்கும்.












ஒற்றுமை என்ன? – போட்டி

இங்கே மொத்தம் பன்னிரண்டு படங்கள் இருக்கின்றன. இவைகளில் இரண்டு ஒற்றுமைகள் உள்ளன. இவை என்ன என்பதைக் கண்டு பிடித்து எழுதி அனுப்புங்கள். கூப்பனில்லாது வருபவற்றை ஏற்க முடியாது. அயல் நாட்டு வாசகர்கள் இந்தியாவில் உள்ள யாராவது ஒரு உறவினர் அல்லது நண்பர் முகவரியைக் கண்டிப்பாகத் தரவேண்டும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.



ஒற்றுமை என்ன – போட்டி

பெயர்: ....

வயது: ....

முகவரி: ....

....

....

பின்கோடு: ....

முடிவு தேதி : 31.12.94



அழகு கொஞ்சும்

இயற்கையன்னை நம் நாட்டிற்கு சிறிய மற்றும் பெரிய எழிலும் வளமும் கொழிக்கும் பல மலைத் தொடர்களை அளித்துள்ளாள். அவைகளில் பச்சைப் பசேலென்ற மரங்கள், பழவகைகள், விலங்குகள் மற்றும் தாதுப் பொருட்களை நமது நலனுக்காக வழங்கியுள்ளாள். இமயமலைத் தொடருக்கு அடுத்த படியாக பெரிய மலைத் தொடர்கள் என்று பார்க்கையில் தெற்கே விந்திய மலைத் தொடர், கிழக்கு மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடர்கள் வருகின்றன. ஆனால் இவைகளை விட வடக்கே இடம்பெற்றுள்ள ஆரவல்லி மலைத் தொடர்தான் நீளமானதும் பிரபலமானதும்.

ஆரவல்லி மலைத் தொடரின் தகவல்கள் அதிலிருந்து கிடைக்கும் ருசியான கனிகளைப் போலவே மிகவும் சுவையானவை.

இத் தொடரின் வயது எத்தனையோ ஆயிரக்கணக்கான வருடங்கள்! தொடக்கத்தில் மிக மிக உயரமாக இருந்த இவை, காலப்போக்கில் இயற்கையின் சீற்றங்கள் மற்றும் மாற்றங்களின் காரணமாகக் குன்றி விட்டன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஆரவல்லி மலைத் தொடர் குஜராத் மாநிலத்தின் இதார் எனும் பகுதியிலிருந்து ராஜஸ்தான் வழியாக டெல்லி வரை சுமார் 900 கி.மீ. வரை நீண்டு பரந்து காணப்படுகிறது.

'மௌன்ட் ஆபு' எனும் இடம் ஆரவல்லி மலைத் தொடரில் உலகப் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமாகும். இதன் அருகிலுள்ள குருஷிகர் எனும் சிகரம்தான் ஆரவல்லித் தொடரிலேயே மிகவும் உயர்ந்தது. இதன் உயரம் 1700 மீட்டர்களுக்கும் மேல். இம் மலைத் தொடரானது ராஜஸ்தானுக்குள் நுழையும் பொழுது 400 மைல் சதுர பரப்பிற்குப் பரந்து விரிந்து காணப்படுகிறது.

ஒருமுறை முகலாய மன்னர் அக்பர் தனது மதியூகி மந்திரி பீர்பாலுடன் முக்கியமானதோர் ஆலோசனையில் ஈடுபட்டிருந்தார். அப்போது அக்பர், "நாம் பல இடங்களில் வெற்றிவாகை சூடி விட்டோம். ஆனால் ராஜஸ்தான் பகுதியில் மட்டும் இது எளிதாகவில்லையே! என்ன காரணம்



ஆரவல்லி

இதற்கு?" என்று கவலையுடன் கேட்டார்.


பீர்பால் ஓர் அப்பத்தை எடுத்து நெருப்பில் காட்ட அது மேடுபள்ளமாகச் சுருண்டு கொண்டது. அதை எடுத்துச் சுட்டிக்காட்டிய பீர்பால், "அரசே, நீங்கள் வெற்றி கொண்ட இடங்கள் எல்லாமே சுடப்படாத பச்சை அப்பளம் போன்ற சமவெளிப் பகுதிகள். ஆனால் ராஜஸ்தான் பகுதிகளோ இந்தச் சுட்ட அப்பளத்தின் மேடுபள்ளங்கள் போன்றவை. மலை, மடு, பாலைவனம் எல்லாம் நிறைந்த பகுதியாகும் ராஜஸ்தான். அதனால் தான் உங்களால் எளிதாக வெற்றி கொள்ள முடியவில்லை" என்றார்.

இப்படிப் பாதுகாப்பு அரணாகவும் ஆரவல்லி மலைத் தொடர் விளங்கிக் கொண்டிருக்கிறது. இங்குள்ள வனப்பகுதிகளில் புலி, சிறுத்தை, காட்டுப் பன்றி, முதலை உட்பட பல்வேறு விலங்குகள் வசிக்கின்றன.

ஆரவல்லி மலையின் மீது 30 செ.மீ. லிருந்து 100 செ.மீ. வரையிலான தடிமன் கொண்ட மண் பரப்பு காணப்படுகிறது. இதில் ஏராளமான தாதுப் பொருட்கள். இது தவிர டூங்ராபூர் பகுதியில் கிடைக்கும் சிவப்பு நிற மண்ணிலிருந்து சுண்ணாம்பு மற்றும் பொட்டாஷ் அதிகமாகப் பிரித்தெடுக்கப்படுகிறது. இது மட்டுமல்லாது இங்கு லெட், டங்ஸ்டன் பொலஸ்டோனைட், கண்ணாடி, ஜிங்க், காபர் கார்னெட், பேராய்ட், கோபால்ட், கிரேபைட், மாங்கனீசு, யுரேனியம் மற்றும் கிரேனைட்டும் வெட்டியெடுக்கப்படுகின்றன.

வருடம் ஒன்றிற்கு சராசரி 75 செ.மீ. லிருந்து 125 செ.மீ. வரையிலான மழை இந்த மலைத் தொடரில் பெய்கிறது. ஆரவல்லியின் மீது சபர் மதி, பனாஸ், சம்பல் மற்றும் லூனி நதிகள் பாய்கின்றன. இயற்கை இலவசமாக வருடந்தோறும் அள்ளித் தரும் மலைச் செல்வத்தை 'பொன் முட்டையிடும் வாத்தை அறுத்த பேராசைக் காரனைப் போல மனித இனமானது தொழிற்சாலைகள் அமைக்க, வீடுகள் கட்ட என்று ஒரேயடியாகச் சுரண்டிக் கொண்டிருக்கிறது. போதாக்குறைக்கு விலங்குகளை வேட்டையாடும் கூட்டமும் சேர்ந்து கொண்டுள்ளது. இந்த அழிவுகளில் இருந்து ஆரவல்லி மலைத் தொடரைப் பாதுகாக்க அரசு தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

- சக்தி. ஏ.ஜே. ஜப்பார்.



எனக்கு மேல் திருடனா?

இரா. வசந்தராசன்

அன்றைய நாள் ஒரு அதிர்ச்சிகரமான நாளாக இருக்கப் போகிறது என்ற உண்மை அப்பொழுது முரளிக்குத் தெரியாது.

அலமாரியில் இருந்த பத்தாம் வகுப்புப் பாடப் புத்தகங்களையும், நோட்டுகளையும், ஜாமென்ட்ரி பாக்ஸையும் புத்தகப் பையில் போட்டு மேஜை மேல் வைத்தான்.

"அப்பா... நான் ஸ்கூலுக்குப் போயிட்டு வரேன். அம்மா எங்கே?"

பேப்பரில் மூழ்கி இருந்த ராமலிங்கம் மகனின் குரலில் கலைந்து நிமிர்ந்தார்.

"அம்மா சமையலறைல இருக்கா. உள்ள போய்ச் சொல்லிட்டுப் போ."

அம்மாவிடம் சொல்லி விட்டு, புத்தகப் பையை எடுத்துக் கொண்டான். காத்திருக்கும் அதிர்ச்சி பற்றித் தெரியாமல் பள்ளிக்கு நடக்க ஆரம்பித்தான்.

பள்ளிக்கூடம்.

பிரேயர் மணி அடிக்காததால் மாணவர்கள் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தனர்.

"முரளி..."

திரும்பிப் பார்த்தான் முரளி.

இளங்கோ, முரளியின் உயிர் நண்பன்!

"அடுத்த வாரம் கிரிக்கெட் மேட்ச் விளையாட ஊத்தங் கரை ஸ்கூலுக்குப் போறோம் இல்லையா? அது சம்பந்தமா சில விதிமுறைகளை ப்ரேயருக்கு முன்னமேயே நம்ப பி.டி. சார் சொல்லப் போறாராம். அதனால நம்மை உடனே அவர் அறைக்கு வரச் சொன்னார். புத்தகப் பையைக் கிளாஸ்ல வச்சிட்டு, பி.டி.சார் அறைக்கு சீக்கிரம் வா."

புத்தகப் பையை வகுப்பறையில் வைத்து விட்டு பி.டி. சார் அறைக்கு விரைந்தான் முரளி.

முதல் வகுப்பு. வகுப்பாசிரியர் வருகைப் பதிவேட்டை எடுத்து முடித்து விட்டு, தமிழ்ப் பாடத்தை நடத்த ஆரம்பித்தார். கடின சொற்களைக் குறித்துக் கொண்டு, அவைகளுக்குப் பொருளை எழுதிக் கொள்ள ஆரம்பித்தனர் மாணவர்கள்.

பேனாவை எடுக்க ஜாமென்ட்ரி பாக்ஸைத் திறந்த முரளி பெரிதாக அதிர்ந்



தான்.

இருபது நாட்களுக்கு முன் அப்பா வாங்கிக் கொடுத்திருந்த விலையுயர்ந்த ஹீரோ பேனாவைக் காணோம்! பதற்றமாக சட்டைப் பையிலும் டிராயர் பாக்கெட்டிலும், புத்தகப் பையிலும் பேனாவைத் தேட ஆரம்பித்தான். பேனாவைக் காணவே காணோம்!

'வழக்கமாக நான்தான் மற்றவர்களின் பொருள்களைத் திருடியிருக்கிறேன். இன்று என்னுடைய பேனாவையே யாரோ திருடி விட்டிருக்கிறார்களே!' எனக்கு மேலே இல்லாடித் திருடனா, என்று முரளி அதிர்ந்தான்.

நினைக்க நினைக்க முரளிக்கு அதிர்ச்சியாக இருந்தது.

பேனாவை யார் எடுத்திருப்பார்கள்? காலையில் பேனாவை ஜாமென்ட்ரி பாக்ஸில் வைத்தது அவனுக்கு நன்றாக நினைவிருந்தது.

"சார்! என் பேனாவைக் காணோம்."

ஆசிரியரின் முகம் கோபத்தால் சிவந்தது.

"பேனாவைத் திருடிட்டாங்களா! வர வர நானும் பாக்கறேன். இந்த வகுப்புல அடிக்கடி ஏதாவது ஒன்னு திருடு போகுது. புகார் சொல்லவே வெட்கமா இருக்கு. வரவர இதைத் திருட்டு வகுப்புன்னே எல்லோரும் மறைமுகமாச் சொல்லிக் கிண்டலடிக்கிற அளவுக்கு வந்திட்டது! மத்தவங்க பொருளைத் திருடறதுங்கறது எவ்வளவு கேவலமான செயல் தெரியுமா? வெளில இருந்து இங்க வந்து யாரும் திருட முடியாது. உங்களில் ஒருத்தன் தான் திருடன். அந்தத் திருடன் மட்டும் என்னைக்காவது என் கைல மாட்டினான்னா, பிச்சி எடுத்துடுவேன்..."

ஒரு நொடி பேச்சை நிறுத்திய ஆசிரியர் மீண்டும் தொடர்ந்தார்.

"முரளி... நான் சொல்றதைக் கேளு. இந்தப் பாடவேளை விரயம் ஆனாக் கூடப் பரவாயில்லை. எல்லோருடைய பைகளையும் சோதனை போடு. பாக்கெட்ல பாரு. ஒருத்தரையும் விடாம கவனமா சோதனை போடு."

இருபது நிமிடத் தேடலுக்குப் பின்னும் முரளி



யின் பேனா கிடைக்கவே இல்லை.

"சார்... பேனா திருடு போனது தெரிஞ்சா அப்பா பயங்கரமா அடிச்சிடுவார். பேனா வாங்கிக் கொடுத்து முழுசா ஒரு மாதம் கூட ஆகலை. நினைச்சாலே எனக்கு பயமா இருக்கு," என்ற முரளியின் குரல் பயத்தில் கலங்கி இருந்தது.

என்ன பதில் சொல்வது, அவனை எப்படித் தேற்றுவது என்று தெரியாமல் ஆசிரியர் திகைப்போடு முரளியைப் பார்த்தார்.

ஒரு வாரம் ஓடி விட்டது.

எவ்வளவு தேடியும் முரளியின் பேனா கிடைக்கவே இல்லை.

தன்னுடைய பேனாவை யார் எடுத்திருப்பார்கள்? தனக்கு மேல் பலே திருடன் ஒருவன் அந்த வகுப்பில் இருக்கிறானா? அவன் யாராக இருக்கக் கூடும்? யாரைச் சந்தேகிப்பது? வகுப்பு மாணவர்கள் எல்லோருமே ஒன்றும் தெரியாதவர்கள் போலத்தானே பேசுகிறார்கள்! இவர்களில் பேனாவை யார் எடுத்திருப்பார்கள்? யோசிக்க யோசிக்கக் குழப்பம் தான் மிஞ்சியது.

அப்பா திடீரென்று என்றாவது ஒரு நாள் பேனாவைக் கேட்டால் என்ன செய்வது? அவரிடம் பொய் சொல்ல முடியாதே? ஒவ்வொரு நாளையும் பயத்தோடு கழிக்க ஆரம்பித்தான் முரளி.

'இந்த ஒரு பேனா போனதற்கே இத்தனை கலங்கித் தவிக்கிறோமே, இதுவரை டிபன் பாக்ஸ், புத்தகம் என்று எத்தனை பொருள்களை நாமே திருடியிருக்கிறோம்? அவைகளைப் பறி கொடுத்தவர்கள் எத்தனை தவித்திருப்



பார்கள்' என்று அவன் மனம் எண்ணாமல் இல்லை.

அன்று வெள்ளிக்கிழமை மாலை.

அம்மா, அருகில் உள்ள மாரியம்மன் கோயிலுக்குச் சென்றிருந்தாள். அப்பா மட்டும் தனது அறையில் உட்கார்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தார்.

திடீரென்று....

"முரளி... என் பேனா சரியா எழுத மாட்டேங்குது. உன் பேனாவைக் கொண்டு வா."

முரளியின் இதயம் பயத்தில் சடுகுடு விளையாட ஆரம்பித்தது. தயக்கத்தோடு அப்பாவின் அறைக்குள் நுழைந்தான்.

"பேனா எங்கடா?"

"அப்பா... அது வந்து..."

"ஏண்டா தயங்கறே? வாங்கிக் கொடுத்த பேனா என்ன ஆச்சு?"

"அதை என் கூடப் படிக்கிறவங்க யாரோ போன வாரம் திருடிட்டாங்க."

விலுக்கென எழுந்தார் அப்பா. அவர் முகத்தில் கோப மின்னல்கள்.

"உன் பேனாவே திருடு போயிடுச்சா! யார் திருடினது? யார் மேல சந்தேகம்?"

"யாரைச் சந்தேகிக்கிறதுன்னே எனக்குத் தெரியலப்பா. நானும் எல்லா இடத்துலயும் தேடிப் பார்த்துட்டேன். கிடைக்கவே இல்லை. இந்த ஒரு வாரமா பேனா திருடு போயிட்ட கவலையில சரியா சாப்பிடவே இல்லை. சரியா தூங்கவே இல்லை," என்ற முரளியின் குரலில் வருத்தம் பெரிதாக ஒட்டிக் கொண்டிருந்தது.

வருத்தத்தின் மொத்த உருவமாகத் தெரிந்த முரளியை ஒருகணம் கூர்ந்து கவனித்தார் அப்பா.

பிறகு.....

மெதுவாகத் தன்னுடைய மேஜை அறையைத் திறந்து ஒரு பேனாவை வெளியே எடுத்தார்.

"இதோ... இந்தப் பேனா காணாமல் போன உன் பேனாவான்னு பார்?"

முரளி பெரிதாக அதிர்ந்தான்.

காணாமல் போன அவனுடைய பேனாவேதான் அது!

"அப்பா... இது திருட்டுப் போன என் பேனாவேதான்! இது எப்படி உங்ககிட்ட.....?"

"இந்தப் பேனாவை உனக்குத் தெரியாம எடுத்து வச்சதே நான்தான்."

தலையில் இடியே விழுந்திருந்தால் கூட அவ்வளவு அதிர்ந்திருக்க மாட்டான் முரளி.

"அப்பா... நீங்க ஏன் இப்படி...?"

"புரியலையா! சொல்றேன் கேளு. பதினைஞ்சு நாளுக்கு முன்னால உன் வகுப்பாசிரியர் என்னைத் தனியா சந்திச்சு உன்னைப் பற்றிய சில விவரங்களைச் சொன்னார். மற்ற மாணவர்களுடைய பொருள்களைத் திருடறதாகவும், அதை ஒரு மாணவன் கண்கூடாப் பாத்துட்டு அவர்கிட்ட புகார் சொன்னதாகவும் அவர் சொன்னார். மறுபடியும் உங்க மகன் இந்த மாதிரி செஞ்சி கையும் களவுமா பிடிபட்டா டி.சி. கொடுத்து அனுப்பிடுவோம்னு எச்சரிக்கை செஞ்சார்."

லேசான இருமலுக்குப்பின் தொடர்ந்தார் அப்பா.

"உடனே உன் சார்பா அவர்கிட்ட மன்னிப்புக் கேட்டுக்கிட்டேன். என் பையனை நானே திருத்திடறேன்னு சொல்லி இந்தப் பேனா எடுத்து வைக்கிற ஐடியாவை அவர்கிட்ட சொன்னேன். அவரும் என் யோசனைக்குச் சரின்னு சொல்லிட்டார். அதனாலதான் அன்னைக்கு நீ பள்ளிக்குப் போறப்ப, உன் அம்மாகிட்ட சொல்லிட்டு வர சமையல் அறைக்குப் போனப்ப, நான்தான் உன் பேனாவை ஜாமென்ட்ரி பாக்ஸ்ல இருந்து எடுத்து வச்சிகிட்டேன்.

ஒரு கணம் நிறுதிய அப்பா மீண்டும் தொடர்ந்தார்.

"இப்ப உன் மனசாட்சியைத் தொட்டுச் சொல்லு. பேனா திருடு போனதுல இருந்து உன் மனசு எவ்வளவு அல்லல் பட்டுக் கலங்கிப் போனது! பேனா திருடு போனதுல இருந்து சாப்பிட முடியலை தூங்க முடியலன்னு நீயே சொல்றே. நீ திருடினப்ப உன்னால பாதிக்கப்பட்ட மாணவர்களும் இதே கஷ்டத்தைத்தானே பட்டிருப்பாங்க? இப்ப சொல்லு. நீ இனியும் திருடுவியா?"

முரளியின் கண்களில் கண்ணீர்க் கசிவுகள்.


"என்னை மன்னிச்சிடுங்க. இனி யார் பொருளையும் சத்தியமாத் திருட மாட்டேன். திருடு போனவங்க மனசு எவ்வளவு கஷ்டப்படும்கறதை நல்லா அனுபவிச்சிட்டேன். இனி மத்தவங்க பொருளைக் கண்டிப்பாத் திருடமாட்டேன்" என்று முரளி அழுத கண்ணீர்த் துளிகளைக் கைகளால் துடைத்து விட்டார் அப்பா ராமலிங்கம்!

காமிரா

ஆழி


'காமிரா' என்னும் ரோமன் மொழிச் சொல்லுக்குத் 'தனியான இருட்டு அறை' என்பது பொருள். காமிராவும் ஓர் இருட்டு அறை மாதிரித்தானே! புகைப்படம் என்பதற்கு 'போட்டோகிராப்' என்று சொல்லுவார்கள். அந்த 'கிரீக்' மொழிச் சொல்லுக்கு 'வெளிச்சத்தால் எழுதுதல்' என்பது பொருள்.






ஒரு சாதாரண 'பாக்ஸ் காமிராவின் பாகங்கள்:
1. வியூ பைண்டர், 2. லென்ஸ், 3. டயாஃப்ரம், 4. பிலிம் சுற்றி, 5. ஷட்டர் (திறந்து மூட உதவுவது)

நம் கண்ணில் அதிக வெளிச்சம் படும்போது சுருங்கவும், குறைந்த வெளிச்சம் படும்போது விரியவும் கூடியது கண்மணி. அதே மாதிரி, காமிராவில் இருக்கிறது டயாஃப்ரம் என்னும் துவாரம். வெளிச்சத்துக்குத் தகுந்தபடி இதைச் சரிசெய்து கொள்ள வேண்டும். வெளிச்சம் உள்ளே சென்றதும் சட்டென்று மூடிக்கொள்ள உதவுவது ஷட்டர்.





பிலிம் என்பது செலுலாயிட் என்னும் பொருளால் ஆனது. பிலிமின் மீது ஜெலட்டின் என்னும் ரசாயனப் பொருள் பூசப்பட்டிருக்கும். ஜெலட்டினில் சில்வர் புரோமைடு என்னும் ரசாயனப் பொருளின் நுண்ணிய அணுத் தொகுதிகள் இருக்கின்றன. அவற்றின் மீது ஒரு காட்சியைப் படம் பிடிக்கும் போது, ஒளியின் அளவுக்குத் தகுந்தாற்போல் ரசாயன மாறுதல் நிகழ்கிறது. சில்வர் புரோமைடு பிரிந்து, சில்வர் புரோமைன் அணுக்களாக மாறுகிறது.

இப்படி படம் பிடிக்கப்பட்ட பிலிம்,'நெகடிவ்' எனப்படும். இந்த நெகடிவ்வை 'டெவலப்பிங்' திரவத்தில் நனைக்கப்பட்டால், பிலிமில் உள்ள வெள்ளி (சில்வர்) அணுக்கள் நிரந்தரமாகப் பதிவு செய்யப்படுகிறது. பின்பு,'ஹைப்போ' என்னும் ரசாயனக் கரைசலில் அலம்பப்பட்டு, சுத்தமான நீரில் கழுவப்பட்டு உலர்த்தப்படுகிறது. இந்த நெகடிவ்வில், உண்மையில் கறுப்பான பகுதிகள் வெளுப்பாகவும், வெளுப்பான பகுதிகள் கறுப்பாகவும் இருக்கும்.



நெகடிவ் பிலிமில் என்ன பொருள் பூசப்பட்டிருக்குமோ அதே பொருள் போட்டோ பதிவுத் தாளிலும் பூசப்பட்டிருக்கும். இருட்டு அறையில், நெகட்டிவ்வின் கீழ், போட்டோ பதிவுத்தாள் வைக்கப்பட்டு, அதன் மீது ஒரு குறிப்பிட்ட அளவுப்படி ஒளி பாய்ச்சப்படும்போது, கறுப்பான இடம் வெளுப்பாகவும், வெளுப்பான இடம் கறுப்பாகவும் உண்மையான தோற்றத்தில் தெரியும்.





'ஜோசப் நீப்ஸ்' என்பவர் 1826-இல், முதல் புகைப் படப் பதிவைச் செய்தார். அவருடன் சேர்ந்து லூயிஸ் டாகரே என்பவரும் முயற்சி செய்தார். நீப்ஸின் மரணத்திற்குப் பிறகும் அத்துறையில் டாகரே முயற்சி செய்தார். வெள்ளித் தகட்டில் அயோடினைத் தடவினார். பிம்பம் அதில் பதிந்ததும் தகட்டைப் பாதரசக் கலவையில் கழுவினார். காட்சிகள் நிரந்தரமாகப் பதிந்திருக்க, ஹைபோ - ஸல்பேட் ஆஃப் சோடாவைப் பயன்படுத்தினார்.


ஃபாக்ஸ் டால்பாட் என்பவர், 1839-ஆம் ஆண்டு, சிறிய நெகடிவ் பிலிம்களைக் கண்டுபிடித்தார். அவர்தான் ரசாயனக் காகிதத்தில் பாஸிடிவ் வாகப் பல பிரதிகளாகப் பதிவு செய்யும் முறையைக் கண்டு பிடித்தார்.

'சோடியம் டயோ சல்பேட்' என்ற பொருளின் கரைசலில் புகைப் படத் தகட்டை அமிழ்த்தினால், வெளிச்சம் படாத இடத்திலுள்ள வெள்ளி குளோரைடு கரைந்து விடுகிறது என்பதை 'ஜான் ஹர்ஷர்' என்பவர் கண்டுபிடித்தார். இதன் மூலம் நெகடிவ் படத்தை நிரந்தரமாகப் பதிக்க முடிந்தது.







செலுலாயிட் புகைப்படச் சுருள் பிலிமை 1884-இல் கண்டு பிடித்தவர் ஜார்ஜ் ஈஸ்ட்மன் என்னும் அமெரிக்கர். 'கோடக்' என்னும் நிறுவனத்தின் பெயரை அவர்தான் தமது அடையாளமாக வைத்துக் கொண்டார். (1928-இல், படத்தை இயற்கை வண்ணத்திலேயே எடுக்கலாம் என்பதையும் அவர்தான் கண்டுபிடித்தார். ஆனால், இது நடைமுறைக்கு வந்தது 1940-இல்.)





1920-ஆம் ஆண்டு ஃபிளாஷ் பல்புகள் கண்டுபிடிக்கப் பட்டன. அதன் மூலம் குறைந்த வெளிச்சத்திலும் தெளிவாகப் படம் எடுக்க முடிந்தது.

காமிராவில் சிலவகைகள்
















1925 ஆம் ஆண்டு 'வாக்கில் லெய்க்கா' என்ற காமிரா மிகவும் பிரபலமாயிற்று. இதில் 35 எம்.எம். பிலிமைப் பயன்படுத்தி, கறுப்பு வெள்ளை படங்கள் எடுக்கப் பட்டன. அந்தக் காலத்தில் அதிகமாக விற்பனையான காமிரா இதுதான்.



1889-இல் முதல் சினிமாப் படங்களை எடுக்கும் சலனப்பட மூவி காமிராவைக் கண்டுபிடித்தார் பிரிஸ் கிரீன் என்னும் பிரிட்டிஷ் புகைப்படக்காரர்.




ஆனால், 1891-இல், தாமஸ் ஆல்வா எடிஸன், திருத்தமான முறையில் படமும் பேச்சும் இணைந்து வரக்கூடிய சினிமா மூவி காமிராவைக் கண்டுபிடித்தார்.




வினாடிக்கு 24 படங்கள் எடுக்கக் கூடிய இந்த மூவி காமிரா கண்டு பிடிக்கப்பட்ட பிறகு, சினிமாத் துறை முன்னேற்றமடையத் தொடங்கியது.

ஒரு முறை பயன்படுத்தி விட்டு, இந்தக் காமிராவையே தூக்கிப் போட்டுவிடலாம். 24 படங்கள் எடுக்கலாம். விலை சுமார் ரூ.100. இதன் உள்ளேயே பிலிம் ரோல் பொருத்தப்பட்டிருக்கிறது. பிலிமைப் பிரிண்ட் போடக் கொடுத்துவிட்டுக் காமிராவையே தூக்கி யெறிந்து விடலாம். பிறகு பயன்படாது. ஈஸ்ட் மென் கோடக், பியூஜி போட்டோ பிலிம் ஆகியவற்றின் தயாரிப்பு இது.







நம் நாட்டில் சண்டிகரைச் சேர்ந்த ஜோகீந்தர் சிங்கித், சரண்ஜித் கவுர் என்னும் தம்பதிகள், உலகிலேயே மிகச் சிறிய புகைப்படக் காமிராவைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். விரல் நகம் அளவே உள்ள அதைத் தயாரிக்க அவர்களுக்கு ஆன செலவு ரூ.4000.



ஸ்வீடனைச் சேர்ந்த லார்ஸ் புருஸ் என்னும் புகைப்படக்காரர் இந்த பிரம்மாண்டமான காமிராவைக் கண்டுபிடித்திருக்கிறார். எவ்வளவு பெரிய படம் தேவையோ அவ்வளவு பெரிய நெகடிவ் இதில் இருக்கிறது. படம் மிகவும் துல்லியமாக இருக்கும்.

இது ஸ்டில் வீடியோ காமிரா. இதில் பிலிம் கிடையாது. காமிராவை இயக்கியதும் 'சிலிகான் சிப்' என்ற பகுதியில் உருவம் பதிவாகி, பிளாப்பி டிஸ்க் என்ற பகுதிக்கு மாற்றப்படுகிறது. இந்தப் படம் ஒரு டிரான்ஸ் மீட்டர் மூலம், செயற்கைக் கோளுக்கு அனுப்பப் படுகிறது. அங்கிருந்து 18 நிமிடங்களில் சுமார் 3850 கி.மீ. தூரத்துக்கு அப்பால்கூட டிரான்ஸீவர் கருவியின் மூலம் கிடைத்து விடுகிறது.





ஸ்காட்லாந்தில் உள்ள எடின்பர்க் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள், இந்த சிறிய வீடியோ காமிராவைத் தயாரித்திருக்கிறார்கள். இதில் சாதாரண வீடியோ காமிராவில் உள்ள எலக்ட்ரானிக் சாதனங்கள் அனைத்தும் ஒரு சிறிய சிலிகான் சில்லில்உள் அடக்கித் தயாரித்திருக்கிறார்கள். இது பாதுகாப்பு அதிகாரிகளுக்காகவும் ரோபாட்களுக்காகவும் தயாரிக்கப்பட்டிருக்கிறது.



மனிதன் செய்த உதவி!

காட்டில் ஒரு குதிரையும், மானும் மிகவும் நெருங்கிய நண்பர்களாய் இருந்தன. திடீரென்று அவைகளுக்குள் வேற்றுமை வந்து பிரிந்தன.

மான் பகைமை பாராட்டாமல் ஒதுங்கிச் சென்று விட்டது. ஆனால் குதிரையின் நெஞ்சில் மட்டும் வஞ்சகம் குடிபுகுந்தது. எப்படியாவது மானை ஒழித்து விட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டது.

மானை ஒழிக்க என்ன வழி என்று குதிரை யோசித்துக் கொண்டேயிருந்தது. ஆனால் அதற்கு வழி ஒன்றும் புலப்படவில்லை. யோசனை செய்தபடியே நடந்து நடந்து காட்டை விட்டு நாட்டுக்கு வந்து விட்டது.

அங்கு ஒரு மனிதன் நின்று கொண்டிருந்தான். குதிரை அவனிடம் சென்றது.

"எனக்கு ஒரு உதவி தேவை. உன்னால் செய்து தர முடியுமா?" என்று கேட்டது.

"என்ன செய்ய வேண்டும்? சொல்?" என்றான் மனிதன்.

"என் எதிரியான மானை நீ ஒழிக்க வேண்டும்."

"எதற்கு?"

"எனக்கு மிகுந்த தொல்லை அளிக்கிறது. அதோடு என்னை மதிப்பதே கிடையாது" என்றது குதிரை.

"சரி! நான் வந்து பார்க்கிறேன்" என்று மனிதன் குதிரையுடன் நடக்க ஆரம்பித்தான்.

சிறிது தூரம் இருவரும் நடந்து சென்றனர். திடீரென்று குதிரை மனிதனைப் பார்த்து "இன்னும் நாம் நெடுந்தொலைவு செல்ல வேண்டியிருக்கிறது. இப்படிப் போனால் எந்தக் காலத்தில் நாம் போய்ச் சேருவது? நீ என் மீது அமர்ந்து கொள். நான் உன்னைச் சுமந்து செல்கிறேன்," என்று யோசனை சொன்னது.

மனிதனும், மிகவும் நல்லது என்று மகிழ்ந்தபடி குதிரையின் மீதேறி அமர்ந்தான். குதிரை சிட்டாய்ப் பறந்தது. விரைவிலேயே காட்டை அடைந்தது.

காட்டில் மானை அடையாளம் காட்டியது குதிரை.

மனிதன், தான் கொண்டு வந்த வில்லில் விஷ அம்பைப் பொருத்தி மானைக் குறி பார்த்து எய்தான். குறி தப்பவில்லை. மான் கீழே விழுந்து உயிரை விட்டது.

மான் ஒழிந்தது என்று மகிழ்ச்சிப் பெருக்கில் குதிரை காடே அதிரும்படி கனைத்தது.

மனிதனுக்கு நன்றி சொல்லிய குதிரை, அவனை மீண்டும் தன் முதுகில் உட்காரச் சொல்லி அவனது இடத்திற்குக் கூட்டிச் செல்ல விரைந்தது.

மனிதனைக் குதிரை சந்தித்த பழைய இடம் வந்தது. "உனக்கு மீண்டும் ஒரு முறை நன்றி! கீழே இறங்கு. நான் காட்டிற்குச் செல்ல வேண்டும்" என்றது குதிரை.

குதிரை மீதேறி மின்னலாகத் தொலைவைக் கடந்து சவாரி செய்து சுகங்கண்டு விட்ட மனிதனுக்கு, அதை விட்டிறங்க மனம் வரவில்லை.

"இனிமேல் நீ எங்கே காட்டிற்குப் போவது? என்னிடம் அடிமைப்பட்டுக் கிடக்க வேண்டியதுதான்" என்று சிரித்தான் பொல்லாத மனிதன்.

அன்று முதல் மனிதன் சவாரி செய்ய குதிரையைத் தனக்கு அடிமையாக்கிக் கொண்டான்.

குதிரை மானுக்குத் தீங்கு செய்தது. அந்தத் தீங்கே குதிரைக்கும் தீங்காய் வந்து முடிந்தது.


கெடுவான் கேடு நினைப்பான்!

— பாளை பசும்பொன்



◆ ஆலிஸ் இன் வொண்டர் லாண்ட் என்ற சிறுவர் கதை திரைப்படமாக வந்திருக்கிறதா? இதை என்னைப் போன்ற சிறுவர்கள் பார்க்க முடியுமா? - முத்து தியாகராஜன், முத்து பவானி மற்றும் நண்பர்கள், திருவாரூர்.

லூயி கெராலின் (Lewis Carroll) இறவாத வரம் பெற்ற இந்த சிறுவர் கதை, ஆங்கிலத்தில் நான்கு முறை திரைப்படமாக்கப்பட்டுள்ளது. முதலில் 1933 ஆம் ஆண்டு பேரமௌண்ட் பிக்சர்ஸ் நிறுவனத்தால், 1951 ல் வால்ட் டிஸ்னியால், 1972 ல் TODD-AO என்ற லண்டன் நிறுவனத்தால், 1988 ல் லண்டன் SRG பிலிம் நிறுவனத்தால் மொத்தம் நான்கு முறை படமாக்கப்பட்டுள்ளது. வால்ட் டிஸ்னியின் தயாரிப்பும், எஸ்.ஆர்.ஜி தயாரிப்பும் வீடியோக்களாகவும் வெளி வந்துள்ளன. சென்னையில் உள்ள அமெரிக்க அரசின் தகவல் நிலையம் USIS அண்ணா சாலை சென்னை - 2, என்ற முகவரிக்கு எழுதிக் கேட்டுப் பாருங்கள்.



◆ சந்திரனில் ஒரு நாள் என்பது எத்தனை மணி நேரம்? - வெ. மல்லி, வெ. ருக்குமணி, ஊஞ்சலூர்.

பூமியில்தான் ஒரு நாள் என்பது 24 மணி நேரம் என்று மணிக் கணக்கில் கணக்கிடுகிறோம். சந்திரனில் இது சரிப்பட்டு வராது. காரணம், சந்திரனில் ஒரு நாள் என்பது சுமார் 14 நாட்கள் நீடிக்கக் கூடியது!

◆ எங்கள் பாட்டி, நகைகளைப் பற்றிக் கூறும் போது குண்டுமணி எடை என்று குறிப்பிடுகிறாள். இந்தக் குண்டுமணி என்பது என்ன? இதன் எடை என்ன? - மா. சித் சபேசன், லால்குடி.

தங்கம் ஒரு நிறுத்தல் அளவைப் பொருள். இதை சவரன் என்றும் பவுன் என்றும் கூறுவார்கள். இந்த சவரன் என்பது 12 குண்டுமணி எடைக்குச் சமம். குண்டு

மணி ஒரு செடி. இதன் காய்ந்த காய்களே குண்டு மணி. சிவப்பும் கறுப்புமாக இருக்கும். சென்னையில், மண் பிள்ளையார் கண்களில் இதை அமுக்கி வைப்பார்கள்.

12 குண்டு மணி எடை ஒரு சவரன் என்பது மிக மிகத் துல்லியமாக இராது. காரணம் குண்டுமணியின் கனம், குண்டு மணிக்குக் குண்டுமணி மாறுபடும். இந்தக் குறைபாடுகள் எல்லாம் மெட்ரிக் முறையில் களையப்பட்டு விட்டது. மெட்ரிக் முறையில் ஒரு சவரன் அல்லது பவுன் என்பது துல்லியமாக எட்டு கிராம். குண்டுமணிக் காலம் எல்லாம் போய்விட்டது.

◆ **ஆண் மான்களுக்கு மட்டுமே கொம்பு உண்டு என்று புத்தகத்தில் படித்தேன். அப்படியானால், கொம்புள்ள மான்கள் எல்லாமே ஆண்மான்கள் என்று எடுத்துக் கொள்ளலாமா? - மு. சுபேதா, பத்தமடை.**

அப்படித்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால், எதிலும் ஒரு விதிவிலக்கு இருக்கக்கூடும் அல்லவா? அப்படி இதற்கும் ஒரு விதிவிலக்கு உண்டு. ரெயின் டீர் (Rein Deer) வகை மான்களில் ஆண், பெண் இரண்டுக்குமே கொம்புகள் உண்டு.

◆ **கோகுலத்தில் வரும் கதைகளில் அப்பா அம்மா பெயர்களைக் காண முடிவதில்லையே! ஏன்? - வா. அர்ஜுனன், எலவனூர்.**

சிறுவர் இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்து முன்னோடியாகத் திகழ்ந்த குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள், குழந்தைகளின் மனோபாவத்திற்கு ஏற்ற படியே அவர்களுக்கான கதைகள் இருக்க வேண்டும் என்று, தானே முன்னுதாரணமாகத் திகழ்ந்தார். சிறுகதைகளில் அம்மா, அப்பா பெயர் தேவை இல்லை. பெயர் இருந்தால் படிக்கும் சிறுவர்களால் கதையில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள (involvement) முடியாது என்று அவர் எண்ணினார்! ஆனால், சிறுவர் நாவலில் இது தவிர்க்க முடியாது என்றும் அவரே எண்ணினார். இது உளவியல் ஆய்வின்படி; அனுபவ அடிப்படையில் உணரப்படும் உண்மை. இவரிடம் தயாரானவர்கள் இதை இன்னமும் கடைப்பிடித்து வருகிறார்கள். கோகுலத்தின் கௌரவ ஆசிரியரும் இவரிடம் தயாரானவர் என்பதால் இந்த அடிப்படை இன்னமும் செயல் படுத்தப்படுகிறது.



கொம்பு உள்ளவை ஆண்மானா?

சேரநம்பி



◆ டெலஸ்கோப்பைக் கண்டுபிடித்தவர் கலிலியோதானே? ஒரு வினாடி வினாவில் சர் ஐசர் நியூட்டன் என்று கூறினார்களே? அது தவறுதானே? - வா. இக்னேஷியஸ், வேலூர்.

டெலஸ்கோப் என்ற தொலை நோக்கியை முதன் முதலாகக் கண்டு பிடித்தவர் லிப்பர்ஷே என்பவரே. இவர் ஒரு டச்சுக் காரர். இவரது கண்டு பிடிப்பின் அடிப்படையை வைத்து சில மாறுதல்களைச் செய்து சரியான டெலஸ்கோப்பை அமைத்து, சந்திரனில் மலைகள் இருக்கின்றன என்பதைக் கண்டு கூறினார் கலிலியோ. இதில் சில மாற்றங்களைச் செய்து எதிர் ஒளிக்கும் (Reflecting) டெலஸ்கோப் என்ற ஒன்றைக் கண்டு பிடித்தவர் சர் ஐசக் நியூட்டன்.

எனவே டெலஸ்கோப் என்றால் இந்த மூவரின் பெயருமே வந்தாக வேண்டும். அப்பொழுதுதான் முழுமை பெறும்.

◆ பெரிய திருமண விருந்துகளிலும், டின்னர்களிலும் RSVP என்று அச்சடிக்கிறார்களே, இதன் பொருள் என்ன? - த. விஸ்வநாதன், சாத்தூர்.

RSVP என்பது ரெஸ்பான்டிங் சில்வஸ் ப்ளெயிட் (RESPONDING SILVOUS PLAIT) என்பதன் சுருக்கம். வருவதைத் தெரிவியுங்கள் என்பது இதற்குப் பொருள்.

◆ பொய்ப்பல்லைக் கட்டிக் கொள்ளும் வழக்கம் எப்பொழுது ஏற்பட்டது? - வெ. ராஜாத்தி, காங்கயம்.

எட்ருஸ்கன்ஸ் (Etruscans) என்ற இனத்தவர்கள் 3000 ஆண்டுகளுக்கு முன்பே தங்கத்தால் பல் செட் கட்டிக் கொண்டதைப் பற்றியே தகவல் இருக்கிறது.

◆ தொழிலாளர் என்பது தமிழ்ச் சொல்லா? இல்லையேல் இதற்குரிய தமிழ்ச் சொல் என்ன? - சு. நாகப்பன், திண்டிவனம்.

தொழில்+ஆளர் (ஆள்பவர்) தொழிலாளர் ஆயிற்று. இது சமீபகாலத்தில் உருவான சொல்லே. தமிழ்ச் சொல்தான் என்றாலும் சங்க காலத்தில் "தொழுவர்" என்ற சொல் தொழிலாளர்களைக் குறிக்க பழக்கத்தில் இருந்ததை புறநானூறு அறிவிக்கிறது.

◆ தீர்க்க ரேகை (Longitude) யில் ஒவ்வொரு டிகிரிக்கும் எவ்வளவு மணி நேரம் வித்தியாசப்படும்? - து. செல்வமணி, விக்கிரவாண்டி.

மணிக் கணக்கில் அல்ல. நிமிஷக்கணக்கில்தான். ஒவ்வொரு டிகிரிக்கும் நான்கு நிமிஷங்கள் வித்தியாசப்படும்.

◆ பிரிட்டிஷ் பிரதமர்களில் யாராவது ராஜிவ் காந்தி மாதிரிக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்களா? - வா. பொன்னுவேல், திருமங்கலம்.

ஸ்பென்சர் பெர்சிவல் (Spencer




Perceval) என்ற பிரிட்டிஷ் பிரதமர் House of Commons என்ற பிரிட்டிஷ் பாராளு மன்றத்தின் வராந்தாவிலேயே சுடப்பட்டுள் ளார்.


◆ **சிறுவர் கதைகளில் அதிக அளவில் பயன்பட்டு வரும் கதை மையம் எதைப் பற்றி யது? - வெ. தனபால், சுவாமிமலை.**

கதைக் களத்தைப் பற்றிக் கேட்கிறீர்கள் என்று நினைக்கிறேன். சிறுவர் கதைகளில் அதிக அளவில் பயன்பட்டு வரும் கதைக் களம், அன்று தொடங்கி இன்று வரை பேனாவை மையமாக வைத்து எழுதப்பட்ட வையே. இன்னமும் கூட பேனாதான் சிறு வர்கதைகளில் தனி இடம் வகிக்கிறது. எத் தனை பேனாக்கதைகள்! பேனாவை வைத்து சிறுவர் கதை எழுதாத எழுத்தாளர்களே கிடையாது என்று கூடக் கூறலாம்.

◆ **கடலின் ஆழப்பகுதிகளில் ஆக்டோ பஸ் இருக்கும் என்கிறது தகவல்கள். இவை எப்படி அங்குள்ள அதிக அழுத்தத்தைத் தாங்கி இருக்கின்றன? - மா. ஆனந்தவல்லி, நாட்டரசம்பேட்டை.**

ஆக்டோபஸின் கரங்களில், நெடுக உறிஞ்சிகள் எனப்படும் "சக்சர்கள்" உள் ளன. இவை சின்னக் கிண்ணங்கள் போன் றவை. இவைகளைக் கொண்டு கடலின் அடியில் இவை நகராது கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கடலழுத்தத்தைத் தாக் குப் பிடிக்கின்றன.





◆ **எல்லா நாய்வகைகளுமே குரைக்கத் தான் செய்யுமா? குரைக்காத நாய் வகை உண்டா? - மா. தேவயானை, திருப்பரங்குன்றம்.**

நாய் என்றாலே குரைக்கும் என்பது தான் நம் நினைவுக்கு வரும். ஆனால் இதற் கும் கூட விதிவிலக்கு உள்ளது. பாசஞ்சி என்ற இனம், குரைப்பதில்லை. ஊளை மட்டுமே இடும்.

◆ **பைலட்டுகளால் பயன்படுத்தப்படும் அல்டிமீட்டரும் (Aptimeter) ஏர் ஸ்பீட் இன்டி கேட்டரும் ஒன்றுதானா? - து. ராவிக்குமார், குடந்தை.**

இல்லை. இரண்டும் வெவ்வேறானவை. அல்டி மீட்டர் எத்தனை உயரத்தில் விமா னம் பறந்து கொண்டிருக்கிறது என்பதை அறிய. ஏர் ஸ்பீட் இண்டிகேட்டர் எத்தனை வேகத்தில் விமானம் பறக்கிறது என்பதை அறிய.

கேள்வி கேட்போர் கவனித்திற்கு:

தினமும் கேள்வி கேட்போர் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே வருகிறது. ஒரு கடிதத்தில் ஒரே ஓர் கேள்வியை மட்டுமே கேளுங்கள். பதில் அளிக்க இது மிகவும் வசதியாக இருக்கும். முழு முகவரியையும் தர வேண்டும். இது பற்றி எந்தக் கடிதப் போக்கு வரத்தும் வைத்துக் கொள்ள இயலாது.



எப்படிக் கிடைச்சது?

முகிலனுக்கு வியர்த்துக் கொட்டியது. பயத்தால் முகம் சிவந்தது. உள்ளம் படைபடைத்தது. கண்கள் கலங்கின. வெளிநாட்டுக்குச் சென்று வந்திருந்த அவனுடைய மாமா அன்புப் பரிசாகக் கொடுத்திருந்த விலை மதிப்புமிக்க ஹீரோ பேனாவைக் காணவில்லை.

அப்பா, அதை எடுத்துக் கொண்டு அவன் பள்ளிக்குப் போகும்போதே பல முறை எச்சரித்தார். "உனக்கு ஞாபகமறதி அதிகம்! எங்காவது தொலைச்சிடுவே! போன வாரம் கூட டிபன் பாக்ஸைத் தொலைச்சிட்டே! இப்போ இதை எடுத்துக் கொண்டு போக வேணாம்! பரீட்சைக்குக் கொண்டு போகலாம்" என்று தடுத்தார்.

ஆனால், ஆசை யாரைத்தான் விட்டது! அப்பாவின் எச்சரிக்கையை அவன் காதில் போட்டுக் கொள்ளவில்லை! நண்பர்களிடம் காண்பித்துப் பெருமையடித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே பேனாவை எடுத்துச் சென்றான். இப் பொழுது அது தொலைந்து விட்டது!

என்ன செய்வதென்றே முகிலனுக்குத் தெரியவில்லை. ஒன்று மட்டும் உறுதி.



பேனா தொலைஞ்சது தெரிந்தால் அப்பா செம்மையாகப் பூசை நடத்துவார்.

பேனா தொலைந்து போனது தனது கவனக்குறைவால் என்பதையோ, அந்தத் தவறுக்காகத்தான் அப்பா அடிக்கப் போகிறார் என்பதையோ அவன் எண்ணிப் பார்க்கவில்லை. அப்பாவின் அடியிலிருந்து எப்படித் தப்புவது என்று ஓர் உபாயத்தைக் கண்டு பிடிப்பதிலேயே அவன் குறியாக இருந்தான். சட்டென்று நினைவு வந்தது.

பக்கத்துப் பெஞ்சில் உள்ள முருகனிடம், அவனுடையதைப் போலவே அதே மாதிரியான பச்சைக் கலரில் ஒரு ஹீரோ பேனா இருந்தது. அது அவன் முதல் ரேங்க் எடுத்ததற்காக அவனுடைய அப்பா வாங்கித் தந்ததாக முருகன் முகிலனிடம் கூறியிருந்தான்.

அந்தப் பேனாவையே முருகனுக்குத் தெரியாமல் எடுத்து விடலாமா என்று நினைத்தான் முகிலன். அதற்கு அவன் மனசாட்சி இடம் கொடுக்கவில்லை.

முகிலன் நன்றாகப் படிப்பவன்தான். நேர்மையானவன்தான். ஆனால் அவனுக்குப் பயங்கரமான ஞாபகமறதி. அவனைத் திருத்த அவனது பெற்றோரும் ஆசிரியர்களும் நண்பர்களும் எத்தனையோ முயற்சிகள் செய்தனர். ஆனால், எதுவும் பலனளிக்கவில்லை. ஆனால், அப்பாவின் அடியை நினைத்த போது முகிலனுக்கு திருடுவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. துணிந்து விட்டான். அடி காரணமாக ஏற்பட்ட பயம், மனசாட்சியை விழுங்கி விட்டது.


மதிய இடைவேளை. எல்லா மாணவர்களும் உணவுப் பொட்டலத்தோடு மரத் தடிக்கு விரைந்தனர். வகுப்பறை காலி. இதுதான் தக்க சமயம் என்று முகிலன் மட்டும் போகவில்லை. முருகனின் ஸ்கூல் பேக்கைத் திறந்தான். ஹீரோ பேனா மேலாகவே இருந்தது. அதை எடுத்துத் தனது பைக்குள் பத்திரப்படுத்திக் கொண்டு

தென்னமரி சுப. சிவராஜா




"நீ கொம்பு வானம் கொளுத் தறதை நான் எப்படி அண்ணா வேடிக்கை பார்ப்பது?"

"எரியாத பட்டாசெல்லாம்தான் இதற்கு தீபாவளி டிபனாம்!"



"ரெண்டு லட்டு குறையுதே! நீ எடுத்தியா?"

"ஊஹூம்ம்..."



ஒன்றுமே அறியாதவன் போலச் சென்று விட்டான் முகிலன்.

அன்று இரவு!

அப்பா ஏதோ எழுதுவதற்காக, முகில னிடம் பேனாவைக் கேட்டார். திருடிய பேனாவை எடுத்துக் கொடுத்தான் முகிலன். அப்பாவுக்கு ஒரே அதிர்ச்சி!

"முகில்! உண்மையைச் சொல்லு! இது யார் பேனா?" - அப்பா கனைக் கக்கினார். முகிலன் வெலவெலத்துப் போனான். எச் சிலை விழுங்கிக் கொண்டு பதிலளித்தான்.

"என்னுடையதுதாம்பா! மாமா கொடுத்த அதே பேனாதான் டாடி!"

"நீதான் இன்னிக்கி பேனாவை வீட்டிலே மறந்து விட்டுட்டுப் போயிட்டியே! நான் தானே அதை எடுத்து வச்சிருக்கேன்? அதுக் காகத்தானே உன்னிடம் பேனாவைக் கேட் டேன்? எப்படிடா இது கிடைத்தது?" என்று கோபத்தோடு கத்தினார் அப்பா.

முகிலன் தேள் கொட்டிய கள்வனைப் போல் "பேந்த பேந்த" விழித்தான். பயத்தால் அழுகையே வந்து விட்டது.

"என்னை மன்னிச்சுடுங்க டாடி! ஸ்கூலில் என் பேனாவைத் தேடிப் பார்த்தேன். காண வில்லை. நீங்கள் அடிப்பீர்களோ என்ற பயத்தில் பக்கத்து பெஞ்சு முருகனுடைய பேனாவை அவனுக்குத் தெரியாம...!"

அதற்கு மேல் அவனால் பேச முடிய வில்லை.

"முகிலா! ஞாபகமறதியால் திருடக் கூடத் துணிஞ்சுட்டே! ஞாபகமறதியால் பேனா வைத் தொலைச்சே. அது ஒரு தப்பு. அதை மறைக்கத் திருடினாய். அது ஒரு தப்பு. திருட்டை மறைக்கப் பொய் சொன்னே, மூனாவது தப்பு. ஒரு தவறை மறைக்க எத் தனை தவறுகளைச் செய்து விட்டே? ஆனால் உண்மை எப்படியோ வெளிவந்து விட்டது பார்த்தாயா? அடிவாங்காமல் தப்பிக்க முருகனின் பேனாவைத் திருடினே. ஆனால், இந் நேரம் அவன் கதி என்னவா யிருக்கும் என்பதை நினைத்துப் பார்த் தாயா? அவன் தந்தையிடம் அடி வாங்கி, அழுது கொண்டிருப்பான்!"

"டாடி! இனிமேல் திருடவோ, பொய் சொல்லவோ மாட்டேன். எனக்குப் புத்தி வந்து விட்டது. நாளைக் காலையில் முருக னிடம் பேனாவைக் கொடுத்து விட்டு, மன்னிப்புக் கேட்பேன், டாடி! அதோட இனிமே கண்டிப்பா எதையும் மறக்க மாட்டேன்" என்று உறுதி கூறிய மகனைப் பெருமையோடு நோக்கினார் அப்பா.

ஏரிக்குப் போவானா?



அந்த ஆண்டு நிறைய மழை பெய்தது. செம்பரம்பாக்கம் ஏரியில் நீர் நிரம்பி கலங்கல் போய்க் கொண்டிருந்தது. அது பெரிய ஏரி. தண்ணீர் நிறைய இருந்தால், கரையில் நின்று பார்க்கும் போது அது ஒரு கடல் போலவே தெரியும். கண்ணுக்கெட்டிய தூரத்துக்கு நீர்ப் பரப்பு தான். அடுத்த கரையே தெரியாது.

அப்படியெல்லாம் பெரியவர்கள் பேசிக் கொண்டதை எத்தனையோ முறை கேட்டிருக்கிறான் ஏகாம்பரம். அந்தக் காட்சியைக் காண வேண்டுமென்று அவனுக்கு ஆசை ஆசையாக இருந்தது. எப்போதோ சிறிய வயதிலே அவன் தந்தை அந்த ஏரிக்கு அவனை அழைத்துப் போயிருக்கிறாராம். ஏகாம்பரத்துக்குச் சரியாக புத்தி தெரியாத வயதாயிருக்கும்.

செம்பரம்பாக்கம் ஏரி ஐந்தாறு வருடங்களுக்கு ஒருமுறைதான் அபூர்வமாக நிரம்பி வழியும். ஏகாம்பரத்தின் தாத்தா பாட்டியெல்லாரும் குன்றத்தூரில் இருக்கிறார்கள். அவன் ஆண்டுக்கு ஒருமுறையாவது குன்றத்தூருக்குப் போய், தாத்தா பாட்டியோடு ஒரு வாரமாவது தங்கி விட்டு வருவான். அப்போதெல்லாம் அந்த ஏரி நிரம்பியிருப்பதில்லை. கோடை விடுமுறையில் தானே அவன் குன்றத்தூருக்குப் போவான்! மழைக் காலத்தில்தானே ஏரி நிறையும்! அப்போதுதான் பள்ளிக் கூடம் இருக்குமே!

ஏகாம்பரத்தின் அப்பாவுக்குத் திண்டிவனத்திலே வேலை. அடிக்கடி குன்றத்தூர் போக முடிவதில்லை. அந்த முறை எப்படியும் செம்பரம் பாக்கம் ஏரியின் கலங்கலைப் பார்த்து விட வேண்டும் என்னும் ஆசை அவனுக்குள் அதிகமாக வளர்ந்திருந்தது.

அதற்கேற்றாற்போல், பலத்த மழையைக் காரணமாகச் சொல்லி அவன் பள்ளியிலே ஒரு வாரத்துக்கு விடுமுறை விட்டிருந்தார்கள். ஏகாம்பரம் அப்பாவை நச்சரித்தான்.

''அப்பா...! சென்னையிலிருந்தெல்லாம் கூட்டம் கூட்டமாக, ஏரி

பூவை அமுதன்

நிரம்பி வழிவதைப் பார்க்க வருவார்கள். அந்தக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும் என்று நீங்க அடிக்கடி சொல்வீங்களே அப்பா! நானும் ஏரியைப் பார்ப்பேனே? இந்த முறை நாம் எல்லோரும் போய் வருவோமே! தாத்தா பாட்டியையும் பார்த்து விட்டு வந்த மாதிரியிருக்கும்" என்று கெஞ்சினான் ஏகாம்பரம்.

"உன் தாத்தா பாட்டிதான் இங்கே போன வாரம் வந்து விட்டுப் போனார்களே?" என்றார் அப்பா.

"அது மாதிரி நம்ம ஊர் ஏரியும் வந்து விட்டுப் போனால் நான் இங்கேயே பார்த்து விடலாம்... இல்லே...?" என்று சிரித்துக் கொண்டே சொன்னான் ஏகாம்பரம்.

அவன் பேச்சை ரசித்தார் அப்பா. அவன் முகத்தையே சிறிது நேரம் மௌனமாகப் பார்த்தார். ஆசையும் ஆர்வமும் அவன் உள்ளத்திலே அடங்காமல் போட்டி போட்டுக் கொண்டு, முகத்திலே முத்திரை குத்திக் கொண்டிருந்ததைக் கண்டார்.

"ஏரியைப் பார்க்கப் போக வேண்டுமென்கிறாய்? அதானே?" என்று புன்முறுவலோடு கேட்டார்.

"ஏரி நீர் வெள்ளமாக உயரத்திலிருந்து கலங்கல் மடை வழியாகப் பெருத்த ஓசையோடு விழுவதைக் குன்றத்தூரிலிருந்தே கேட்கலாம் என்று நீங்களே எத்தனையோ தரம் சொல்லியிருக்கீங்களே? அதை உங்க மகனான நான் பார்க்க வேண்டாமா? அந்தச் சப்தத்தை நான் கேட்டு மகிழ வேண்டாமா?" என்று கொஞ்சலாகவும் கெஞ்சலாகவும் கேட்டான் ஏகாம்பரம்.

"சரி... போகலாம். ஆனால், நீ குன்றத்தூருக்குப் போனதும் ஒழுங்கா, வீட்டை விட்டு வெளியே போகாமே இருக்கணும்" என்று கண்டிப்பான குரலில் சொன்னார் அப்பா.

அப்பா, ஏன் அப்படிச் சொன்னார் என்பது அவனுக்குப் புரிந்தது. போன வருடம் போயிருந்த போது, ஏகாம்பரம் கண்ணாயிரத்தோடு சேர்ந்து விளையாட வயல்வெளிக்குப் போனான். அங்கே ஓரிடத்திலே தரைக் கிணறு இருந்தது. சுற்றிலும் செடி கொடிகள் மேலே வளர்ந்து, அங்கே கிணறு இருக்கிறது



என்று ஊருக்குப் புதிதாக வருகிறவர்களுக்குத் தெரியாதபடி மறைத்து இருந்தன. எப்படியோ தெரியாமல் போய் விழுந்து விடப் பார்த்தான். நல்லவேளை... கண்ணாயிரம்தான் அவனைக் காப்பாற்றினான்.

ஏகாம்பரத்துக்கு நீச்சல் கூடத் தெரியாது. கண்ணாயிரம் குன்றத்தூரிலே பிறந்து வளர்ந்தவன். அவனுக்கு நன்றாக நீந்தத் தெரியும். விழுந்திருந்தாலும் காப்பாற்றியிருப்பான். ஆனால் கிணற்றிலே தண்ணீர் இல்லையே! ஆழம் அதிகமான பாழும் கிணறாக இருந்த அதிலே, பாதாளத்திலே கொஞ்சம் தண்ணீர்தான் தெரிந்தது. நல்லவேளை, தப்பினான்!

கண்ணாயிரத்துக்கு ஒரு கால் வளைந்திருந்தது. சாய்ந்து சாய்ந்துதான் நடப்பான். இருந்தாலும் வேகமாக ஓடி வந்து ஏகாம்பரத்தைப் பிடித்துக் கொண்டான். அந்த விஷயத்தை ஏகாம்பரம்தான் அவன் பெற்றோர்களிடம் சொன்னான். கண்ணாயிரத்தை அவர்கள் பாராட்டுவார்கள் என்று எதிர்பார்த்தான். ஆனால், பெரியவர்கள் அப்படிச் செய்யவில்லை. இருவரையும் நன்றாகத் திட்டினார்கள். கண்ணாயிரத்தின் துணை இல்லாமல் ஏகாம்பரம் வெளியே போயிருக்க மாட்டானே! அதுதான் பெரியவர்களுக்குக்



கோபம்!

வாடிப் போன முகத்தோடு கண்ணாயிரம் அங்கிருந்து போனான். அவன் போன பிறகு, "அந்த ஊனப் பையனோடெல்லாம் உனக்கு என்ன சிநேகிதம்? படிக்காத பயல்...! அக்கம் பக்கத்திலே எடுபிடி வேலை செய்துகிட்டு, எச்சில் சோறு தின்னுகிட்டிருக்கான்" என்று அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி எல்லோருமே கண்டபடி அவனை இழிவாக ஏசினார்கள்!

ஏகாம்பரத்துக்குக் கண்ணாயிரத்தை நினைக்கப் பரிதாபமாக இருந்தது. ஆபத்திலே தன்னைக் காப்பாற்றியவனைப் பாராட்டா விட்டால் போகிறது, பேசாது விட்டிருக்கலாம் அல்லவா? அப்படியா திட்டுவார்கள்? அவன் படிக்காதவனாம்!

மூன்றாம் வகுப்பு வரை கண்ணாயிரம் குன்றத்தூரிலே படித்துக் கொண்டுதான் இருந்தானாம். ஏற்கெனவே அவன் அப்பா செத்துப் போயிருந்தார். அம்மாவும் காய்ச்சலாகப் படுத்து இறந்து போன பிறகு, யாரும் அவனைப் படிக்க வைக்கவில்லையே! யாராவது பாசம் காட்டி, பசிக்குச் சோறு போட்டு, படிக்க வைத்திருந்தால் கண்ணாயிரம் படிக்காமலா போயிருப்பான்?

குன்றத்தூருக்கு வருகிறபோதெல்லாம் கண்ணாயிரத்தோடு கூடிப் பேசுவதும், விளையாடுவதும், பல இடங்களுக்குப் போய்ப் பார்ப்பதும் தனக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கு! ஒருநாள் அவன் செங்கல் சூளைக்குக் கூடக் கொண்டு போய் நேரிலே காட்டினானே! அவனைப் போய்க் கண்டபடி திட்டுகிறார்களே என்று எண்ணியெண்ணி எரிச்சல் அடைந்தான் ஏகாம்பரம்.

தன்னைப் போல் அவன் எட்டாவது படிக்கவில்லைதான். ஆனால், அவனுக்கும் நிறைய பொது அறிவு இருக்கே. படிக்க வேண்டும் என்று ஆர்வம் இருக்கே! படிக்க முடியவில்லையே என்று ஏக்கம் இருக்கே!

"ஏகாம்பரம்! நீ என்னை விட நிறையப் படிச்சவன். இன்னமும் படிக்கிறே. உனக்குத் தெரிஞ்சிருக்குமே? இந்தக் குன்றத்தூரில்தான் சேக்கிழார் பிறந்தாராம். அவர் எழுதியதுதானே பெரிய புராணம்? எவ்வளவு பெரிய புலவர்! அவர் பிறந்த ஊரிலேயே, நான் பிறந்தும் நிறையப் படிக்க முடியாதவனாயிருக்கேனே? இது நான் செய்த பாவம்தானே!" என்று அன்றொரு நான் கண்ணாயிரம் சொன்ன போது, அவன் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்ததைக் கண்டு தானும் எவ்வளவு வருந்தினான்.

அன்று அவனுக்கு ஆறுதலாகச் சில வார்த்தைகள் கூறித் தேற்றியது அவன் நினைவுக்கு வந்தது.

"கண்ணாயிரம்! நான் உன்னோடு பழகி, உன்னைப் புரிந்து கொண்டிருக்கேன். என் அப்பா அம்மாவுக்கு உன்னைப் பற்றி, ஏழை, படிக்காதவன், எடுபிடி வேலை செய்கிறவன், சாப்பாட்டுக்குக் கஷ்டப்படுகிறவன் என்றுதான் தெரியுமே தவிர, உன் நல்ல குணங்கள் எதுவும் அவங்களுக்குத் தெரியாது. உனக்குக் கால்தான் ஊனம். அவர்களுக்கெல்லாம் மனசே ஊனம். அவங்களுக்காக நான் மன்னிப்புக் கேட்கிறேன். நான் ஊருக்கு வருகிறபோதெல்லாம் உன்னைப் பார்ப்பேன், பழகுவேன், பேசுவேன்."


"ஏகாம்பரம்! உண்மையா என் மேலே உனக்கு இவ்வளவு பாசமா? நான் உனக்கு ஒண்ணும் தரல்லியே!" என்று பரிதாபமாகச் சொன்னான் கண்ணாயிரம்.

"சேக்கிழார் பிறந்த ஊரிலே நீ பிறந்திருக்கே. அவர் நடந்த தெருவிலே நீ நடந்திருக்கே. நடந்துகிட்டிருக்கே. அந்தக் கவிக் கடலின் காலடிபட்ட மண்ணிலே ஒரு சின்ன தூசாவது உன் காலிலே பட்டிருக்கும். அந்தப் புண்ணியம் உனக்கு நிறைய இருக்கே. அதை நினைக்கிற போது, உன்னைப் பற்றி எனக்கு எவ்வளவு பெருமையா இருக்கு தெரியுமா? நான் வருகிறபோதெல்லாம் உனக்கு நல்ல நல்ல புத்தகங்களை வாங்கி வந்து தருவேன். நீ நிறையப் படிக்கலாம். படித்து, அந்தக் கருத்தையெல்லாம் எனக்குக் கடிதம் மூலம் எழுது."

"எங்க நர்சரி ஸ்கூல்ல படிக்கிற பசங்க பிற்காலத்துல எப்படியும் பிழைச்சுக்குவாங்க."

"ஆமாமா... மூட்டை தூக்கத்தான் சின்ன வயசுலயே 'டிரெயினிங்' கொடுத்துடறீங்களே!"

- சீர்காழி வி. ரேவதி



"உனக்கு நான் கடிதம் எழுதலாமா?" ஏக்கத்தோடு கேட்டான் கண்ணாயிரம்.

"தப்புத் தப்பாயிருந்தாலும் பரவாயில்லை. அதையெல்லாம் நான் புரிஞ்சுக்குவேன்" என்றான் ஏகாம்பரம்.

"அதுக்கில்லை. உன் அப்பா அம்மா... உன்னைத் திட்டுவாங்களே?"

"நானே கடிதங்களை வாங்கி, என் பள்ளிக்கூட முகவரியை எழுதிக் கொடுத்திட்டுப் போறேனே? இப்போது கூட நான் சில கதைப் புத்தகங்கள் கொண்டு வந்திருக்கேன். கொடுத்து விட்டுப் போறேன்" என்றான் ஏகாம்பரம்.

கண்ணாயிரத்தின் மனத்தில் மகிழ்ச்சி நிரம்பி வழிந்தது. சொன்னது போலவே, ஏகாம்பரம் நல்ல நல்ல புத்தகங்களை அவனுக்குக் கொடுத்தான். கண்ணாயிரமும் கூச்சசத்தோடு கடிதம் எழுதினான். அது தொடர்ந்தது.

பழைய நினைவிலிருந்து ஏகாம்பரம் விடுபட்ட போது, அவன் தந்தை அம்மாவிடம் பேசிக் கொண்டிருந்தது அவன் காதிலே விழுந்தது.

"நாளைக்கே குன்றத்தூருக்குப் புறப்படலாம். ஏரியிலே கலங்கல் ஒரு வாரத்துக்கு மேலே வழியாது. இன்று ஆறு மணி ஆட்டத்துக்குச் சினிமாவுக்குப் போகலாம். கவிதா டாக்கீசிலே 'நொண்டி மனம்' ஓடுது. நல்ல படமுன்னு பேசிக்கிறாங்க. இன்னைக்குச் சினிமா, நாளைக்கு ஊர்ப் பயணம்" - அப்பா சந்தோஷமாகச் சொன்னார்.

"மூணு டிக்கெட் ரிசர்வ் பண்ணிடுங்க, காலையிலேயே" என்று சந்தோஷமாகச் சொன்னாள் அம்மா.

"நீ கவலைப்படாதே. ரிசர்வ் பண்ணிடறேன். டிக்கெட் கிடைக்கலேன்னாலும் என்ன? 'பிளாக்'கிலே நிறையக் கிடைக்குமே!" என்று புறப்பட்டார் அப்பா.

ஏகாம்பரம் பதறிப் போனான். கட்டணத்துக்கு மேலே ஐந்து ஆறு மடங்கு விலை கொடுத்துப் 'பிளாக்'கிலே வாங்கி 'நொண்டி மனம்' பார்க்க வேணுமா? அது நல்ல மனம் செய்கிற செயலாக அவனுக்குத் தோன்றவில்லை.

ஓடிப் போய் அப்பாவின் எதிரே நின்றான்.

"அப்பா! ரிசர்வ் பண்ண முடிஞ்சா, பாருங்க. இல்லேன்னா நிறையப் பணம்



செலவு பண்ணி, 'பிளாக்'கிலே டிக்கெட் வாங்கி அந்தப் படத்தைப் பார்க்க வேண்டாம்!" என்றான்.

"நீ என்னடா சொல்றது? பணத்தைச் செலவு பண்ணப் போறது நான்தானே!" என்றார்" அப்பா.

"யார் செலவு பண்ணினா, என்னப்பா? தேவையில்லாமே அநியாயமா செலவு பண்ணணுமா? நியாயமா டிக்கெட் கிடைக்கிற போது பார்க்கலாமே! அந்தப் பணத்துக்கு இன்னும் நிறையப் புத்தகங்கள் எனக்கு வாங்கிக் கொடுக்கலாமே?"

"ஏன்... ஊரிலேயிருக்கிற ஊனப் பயலுக்குத் தருவதற்கா?" என்று கோபமாகக் கேட்டார் அப்பா.

"என்னப்பா, அவன் கால்தானேப்பா ஊனம்? மனம் ஊனமில்லையே! ஊனமான காலைக் காட்டி அவன் எங்கேயும் போய்ப் பிச்சை எடுக்கல்லியே? அந்த ஊனக் காலை இழுத்திழுத்து நடந்திட்டே முடியற வேலை செஞ்சித்தானே, வயிற்றுப் பசிக்குச் சோறு கேட்கிறான்? நானும் என்ன, அவனுக்கின்னா புத்தகம் கேட்கிறேன்? நான் படித்து விட்டுப் பழசான பிறகுதானே அவனுக்குக் கொண்டு போய்க் கொடுக்கிறேன்? அம்மா கூடப் பழைய புடவையை யாராவது கேட்டால் கொடுக்கல்லியா?"

ஏதோ வேகத்தில் விறுவிறு என்று அப்பாவிடம் பேசி விட்டான் ஏகாம்பரம். அவன் அம்மா வாயடைத்துப் போய் நின்றிருந்தாள். அப்பாதான் ஏதோ யோசித்துக் கொண்டிருந்தார்.

ஏகாம்பரத்தின் கண்கள் கலங்கியிருந்தன. அப்பா அவனை நெருங்கினார். அன்போடு அவன் தோள்களைப் பற்றினார்.

"நீ கண்ணாயிரத்துக்கு இனிமேல் புதிய புத்தகங்களாகவே தரலாம். குன்றத்தூருக்குப் போனதும் அவனையும் கூட்டிக் கொண்டு நாம் செம்பரம்பாக்கம் ஏரிக்குப் போகிறோம்" என்றார் அப்பா, மெதுவாக.

ஏகாம்பரம் வேகமாகத் தந்தையின் கரங்களைப் பற்றித் தன் கண்களில் ஒற்றிக் கொண்டான். அவன் உள்ளம் ஆனந்தக்கூத்தாடியது. என்ன காரணம் என்பது உங்களுக்குத் தெரிகிறதா?

அறிவொளி இயக்கமாமே! அப்படின்னா என்ன?

கல்வியறிவுக்கு அளவில்லாத முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கிறது நமது நாடு. வள்ளுவர் காலத்து ஔவையாரில் இருந்து, கவிமணி, பாரதியார், பாரதிதாசன் என்று எண்ணற்ற கவிஞர்கள் கல்வியின் பெருமையை விளக்கிப் பாடி வைத்துக் கல்வியறிவு பெற வேண்டியதன் அவசியத்தை உணர்த்தி வைத்து விட்டுப் போயிருக்கிறார்கள்." இருப்பினும் நம் நாட்டு மக்களுக்குக் கல்வி கற்பதில் ஈடுபாடு ஏற்படவில்லை. காரணம், நம் நாட்டு மக்களில் பெரும்பாலோர் விவ சாயப் பெருங்குடி மக்கள். பாரம்பரிய முறையில் விவசாயம் செய்யக் கல்வியறிவு தேவைப்படவில்லை. ஆனால், மக்கள் பெருக்கத்தாலும், அறிவியல் விழிப்பாலும் விவசாயத்தில் துரித முன்னேற்றம் தோன்றியது. இன்னும் தோன்றிக் கொண்டே இருக்கிறது. இதன் நன்மைகளைப் பயன்படுத்திக் கொள்ளக் கல்வியறிவு அவசியம் தேவைப்பட்டது. அதோடு மாறிக் கொண்டே வரும் உலகத்தின் புதிய வளங்கள், நன்மை தீமைகள் ஆகியவைகளை அறிந்து கொள்ளவும் கல்வியறிவு தேவைப்பட்டது. இன்று கல்வியறிவின் அவசியம் எல்லோராலுமே உணரப்பட்டு வருகிறது. இப்பொழுதுள்ள தலைமுறையினர் எல்லோருமே கல்வியறிவு பெற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கற்று வருகிறார்கள்.

இன்று எழுதப் படிக்க அறியாதவர்கள் என்ற நிலை சின்ன வயதில் பள்ளியைப் புறக்கணித்தவர்களாலேயே உருவாக்கப்பட்டது. இதற்கு எத்தனையோ காரணங்கள். காரணம் எதுவாக இருந்தாலும், இவர்களையெல்லாம் கற்க வைத்து கவிஞர்களாகவோ, பெரிய எழுத்தாளர்களாகவோ ஆக்குவது என்பது எளிமையான செயல் அல்ல. இது இப்போதைய தேவையும் அல்ல. இவர்களை எழுத்துக் கூட்டிப் படிக்கவும், கூட்டல் கழித்தல் போடவும் அறிய வைத்தால் அதுவே பெரிய செயலாகும். தாய்மொழியில் கடிதம் எழுதத் தெரிய வேண்டும். வந்த கடிதத்



தைப் படிக்கத் தெரிய வேண்டும். பஸ்ஸின் எண்களைப் படித்துச் சரியான பஸ்ஸில் ஏறிப் போகத் தெரிய வேண்டும். கடிகாரத்தைப் பார்த்து நேரத்தை அறியத் தெரிய வேண்டும். கையெழுத்துப் போடத் தெரிய வேண்டும். இன்று என்ன மாதம், என்ன தேதி, என்ன கிழமை என்பதை அறியத் தெரிய வேண்டும். இப்படி இவர்களைத் தயாராக்குவதே எழுத்தறிவு இயக்கம்.

இதற்கு அரசு ஏராளமாகப் பணம் செலவிட்டு, நமது நாட்டை முழு எழுத்தறிவு மிக்க நாடாக்க முயன்று வருகிறது. நமது நாட்டில் முழு எழுத்தறிவு பெற்ற முதல் மாநிலம், நமது அண்டை மாநிலமான கேரளம்தான். எழுத்தறிவு முழுமை பெற்ற மாநிலமாக ஆகத் தமிழ்நாடும் தீவிரமாக முயன்று வருகிறது. இதில், அரசுப் பணியாளர்களின் தொண்டைவிட, வலியவந்து தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் தொண்டர்களின் பணியே தீவிரமானது.


இந்த எழுத்தறிவு இயக்கத்திற்குத் தங்களால் இயன்றதைச் செய்ய கோகுலம் வாசகர்கள் முயல வேண்டாமா? சாதாரணமாகவே டீச்சர் விளையாட்டு, தம்பி தங்கைகளுக்கு மிகவும் பிடித்தமான விளையாட்டு. வீட்டில் உள்ள குழந்தைகளை ஒன்று கூட்டி உட்கார வைத்து, தானே டீச்சராகி வகுப்பை நடத்தி விளையாடும் தம்பி தங்கைகள் ஏராளம். இந்த விளையாட்டில் உங்கள் வீட்டில் வேலை செய்துவரும் படிக்காத ஓர் ஏழைச் சிறுமி அல்லது ஏழைத் தாயைச் சேர்த்துக் கொள்ளுங்கள். உங்களால் மனது வைத்தால் இது கண்டிப்பாக முடியும். அவர்களை எழுதப் படிக்க வைத்தால் அதுவே பெரிய வெற்றி. சொல்வது எளிது. செய்வது கஷ்டம் என்கிறீர்களா? மறுக்கவில்லை. ஆனாலும் இதற்கான தடைகளையெல்லாம் கடந்து, அவர்களை எழுதப் படிக்க அறிய வைப்பது தான் உங்கள் குறிக்கோள் என்று தீவிரமாக இருங்கள். கண்டிப்பாக வெற்றி உங்களுக்குத்தான்.

இது நாட்டுப்பணி மட்டுமல்ல, உங்களைப் பெருமை கொள்ள வைக்கும் மகத்தான கல்வித் தொண்டும் கூட. நமது நாட்டைப் பெருமையோடு தலை நிமிர வைக்கும் பணி. எங்கே, இன்றே தொடங்குங்கள் உங்கள் பணியை.


அட்டையில் பாடம் நடத்தும்
ஆசிரியையாக : **ரஞ்சனி**

மாணவர்கள் **சஞ்சு, ரஞ்சு, கோகுல்.**

வண்ணப்படம் :
காமிரா திருஞானம்



பிருந்தாவனக் கவியரங்கம்!



யானையே!



உருவில் பெரிய யானையே
உற்ற தோழன் ஆவோமா?
மருள வைக்கும் யானையே
மாலை போட ஆசையே!

கரும்பை முறிக்கும் யானையே
கழுத்தில் மணியைக் கட்டவா?
விரும்பி விழுங்கும் தேங்காயை
வாயில் போட வரட்டுமா?

தந்தம் நீண்ட யானையே
தூங்க எப்போ போகிறாய்?
விந்தை விலங்கு உன்னையே
வாழ்த்த வார்த்தை இல்லையே!

- வி. சி. சத்தியமூர்த்தி.

தேர்

பாரு நல்லாப் பாரு!
பக்தர் இழுக்கும் தேரு!
ஊரு கூடி இழுத்திடில்
உருண்டு வரும் தேரு!

ஒற்று மையின் உயர்வினை
உணர வைக்கும் தேரு
சுற்றம் நண்பர் கூடியே
சேர்ந்து இழுக்கும் தேரு

தாரை தப்பட்டை முழங்கவே
தம்பி தங்கைகள் இழுக்கவே
ஊரை வலம் வந்திடும்
உவகை அளிக்கும் தேரு!

- சிவ. கலாதரன்.





சென்னைக்கு வந்தேனே!

விடுமுறை தன்னைக் கழித்திடவே
விரும்பி சென்னை வந்தேனே
கடற்கரை அழகைக் கண்டேனே
கண்ணகி சிலையைப் பார்த்தேனே

எம்.ஜி.ஆர். அண்ணா சமாதிகளின்
எழில்மிகு தோற்றம் கண்டேனே
வள்ளுவர் கோட்டம் பார்த்தேனே
வரிசைக் குறள்கள் படித்தேனே

தங்கக் கடற்கரை போனேனே
தன்னை மறந்து வியந்தேனே!
எங்கும் வேகம் உணர்ந்தேனே
எனக்கு மலைப்பு வந்தேனே!

- சு. கண்ணகி.

பருந்து

உயர உயரப் பறக்குது
உற்று உற்றுப் பார்க்குது
வியக்க வைக்கும் வகையிலே
விண்ணில் வட்டம் போடுது!

பெருமை மிக்க அரசராய்
பறவை இனம் மதிக்குது
கரணம் போட்டு வானிலே
காட்சி எல்லாம் காட்டுது!

இரையைக் கண்ட கணத்திலே
ஈட்டி போலப் பாய்கிறார்
பருந்து என்ற பெயரினால்
பாரோர் இதை அழைக்கிறார்!

- மு. மனோ.





மலை

ஆறு தரும் மலை
அருவி விழும் மலை
மரங்கள் வளர் மலை
மழை பொழியும் மலை

இயற்கை எழில் எல்லாம்
இன்பம் கொஞ்சும் மலை
பயனைத் தரும் மரங்கள்
பலதும் நிறைந்த மலை.

உயரம் மிக்க மலை
உற்ற நண்பன் மலை
வியப்பை அளிக்கும் மலை
வணங்கிப் போற்றும் மலை

— எம். ஷேக் உசேன்.

புத்தகம்

நல்ல நல்ல புத்தகம்
நான் படிக்கும் புத்தகம்
என்னை அறிஞன் ஆக்கவே
எனக்கு உதவும் புத்தகம்


அருமை மிக்க கதைகளை
அதிகம் தரும் புத்தகம்
மறந்தும் கூடக் கெட்டதை
மறைத்துத் தராப் புத்தகம்

நல்ல வனாய் வாழவே
நாளும் தூண்டும் புத்தகம்
வல்ல வனாய் வாழவே
வழியைக் காட்டும் புத்தகம்

- டி. மகேந்திரன்.



பிளாஸ்டிக் ஒயரில் பல வண்ணப் பூ மரம்



படத்தில் உள்ள பூ மரத்தைப் பாருங்கள். இது மூன்று பகுதிகளாகப் பிரித்து சேர்க்கப்பட்டது. அடிப்பாகம் (base), தண்டு (stem), பூக்கள்.

தேவையானவை :

1. பட்டையான வண்ண பிளாஸ்டிக் ஒயர்கள், கிழிந்துபோன பழைய பிளாஸ்டிக் கூடை, பை, நாற்காலியின் ஒயர்கள் கூட ஏற்றவையே.
2. வண்ண நூல்கள் அல்லது பழைய பிளாஸ்டிக் பையின் ஒயர்கள். கலராக இருப்பது அவசியம்.
3. நீளமான கனத்த கம்பி அல்லது பழைய பிள்ளையார் குடையின் குச்சி அல்லது பழைய காலண்டர் கம்பி. நீளம் உங்களுக்கு வேண்டிய அளவு. இது மரத்தின் தண்டு (stem) பாகத்துக்கு.
4. பிளாஸ்டிக் டம்ளர், அல்லது காலியான ஐஸ்கிரீம் கப் அல்லது use and throw காப்பி/டீ கப் அல்லது அடிப்பாகமாக (base) அமையக் கூடிய வடிவுடைய பிளாஸ்டிக் கிண்ணம்.
5. base ஆக அமையக் கூடியது கொள்ளும் அளவுக்குக் களிமண்.
6. ஊசி

செய்யும் முறை :


பூத்தொடுக்க நாரை மெல்லியதாகக் கிழித்துக் கொள்வது போல் பிளாஸ்டிக் பட்டை ஒயர்களை ஊசியின் கூரான

கே. குப்புராஜ்

முனையை வைத்து மெல்லியதாகக் கிழித்து வைத்துக் கொள்ளுங்கள். பெரியவர்கள் உதவியைப் பெற்றுக் கொள்ளவும்.

முதலில் ஒரே ஒரு வெட்டிய ஒயரை மட்டும் எடுத்துக் கொண்டு (¾ அடி நீளம் இருக்கலாம்.) கண்டு விரல் நுனியில் அதன் நுனியை வைத்து, மோதிரம் மாதிரி இரண்டு சுற்று சுற்றிக் கொண்டு கழற்றிக் கொள்ளுங்கள். இந்த மோதிரம்தான் பூக்களைச் செய்ய ஃபிரேம். எனவே, மோதிரம் சின்னதாக கெட்டியாக இருப்பது அவசியம். இந்த மோதிரம் பிரிந்து போகாதபடி, இந்த ஒயரின் மீதிப் பாகத்தை வைத்து, உன்பக்க மாகச் சுற்றிச் சுற்றி எடுங்கள். மோதிரச் சுற்றுக்கும், இந்தச் சுற்றுக்கும் இடையே ஒயரின் மீதியான நுனியை இரண்டு முறை நுழைத்து இறுக்கிக் கொள்ளுங்கள். பூக்களின் இதழ்கள் வரப் போவது இதைச் சுற்றித்தான். இனி மீதமுள்ள ஒயர் பாகத்தை மோதிரச் சுற்றுக்கும் மேல் சுற்றுக்கும் இடையே உள்ள இடைவெளியில் நுழைத்து வெளியே கொண்டு வந்து, சற்றுத் தொய்வாக விட்டு, வளைத்து மேல்வழியாகக் கொண்டுவரவும். இந்தத் தொய்வு மேல்பக்கம் வரவேண்டும். இனி, ஒயரின் நுனியை கீழ்ப்பக்கமாக வளைத்து இந்தத் தொய்வில் நுழைத்து எதிர்ப்பக்கமாக இழுத்து, நுனியை இறுக்குங்கள். இந்த மடிப்பில், மலரின் நுனிப் பகுதி, மேல் தூக்கியவாறு அமையும். இப்படியே வளையத்தைச் சுற்றி இதழ் நுனிகளை அமைக்கவும். இது அவரவர் கற்பனைக்கு ஏற்றபடி, ஒயரின் தடிமனுக்கு ஏற்றபடி அமையும். ஒரு சுற்றுச் சுற்றியதும், மறுபடி இடைவெளியில் நுனியைச் செலுத்தி, வளைத்து முடி போடவும். இனி மீதி இருப்பது பூவின் காம்பாக அமையும். இப்படியே பல வண்ணங்களில் பல அளவுகளில் மலர்களைச் செய்து கொள்ளுங்கள். ஓர் அடி உயர பூ மரத்திற்குச் சுமார் 200 பூக்கள் தேவை. எண்ணிக்கை அதிகமானால் அழகாக அமையும். அவ்வளவே.

இனி பேஸ் - அடிப்பாகம் அமையப் போகும் பிளாஸ்டிக் கப்பை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் உயரத்திற்குத் தண்டாக 'ஸ்டெம்' அமைய வேண்டிய குச்சி அல்லது கம்பியை மார்க் செய்து எடுத்துக் கொள்ளவும். மார்க் செய்த பகுதியை விட்டுவிட்டு, மீதிப் பகுதியில் கீழிருந்து பூவின் காம்புகளை வைத்து, உருண்டை ஒயர்களை சுற்றிச் சுற்றிக் கட்ட ஆரம்பிக்கவும். மேலே போகப் போக, இந்தக் காம்புகளின் நீளத்தைக் குறைத்துக் கொண்டே வந்தால் சவுக்கு மர வடிவில், கிறிஸ்துமஸ் மரத்தின் வடிவில் நுனி குறுகி அழகாக அமையும். உங்கள் கற்பனைக்கு ஏற்பவும் இந்த மலர்த் தொட்டிகளை வைக்கலாம். தனித்தனியாக இன்றி கொத்துக் கொத்தாகவும் இணைக்கலாம்.



கடைசியில், நுனியில் முடிச்சுப் போட்டு முடிக்கவும். மெல்லிய கம்பி வைத்துச் சுற்றியும் முடிக்கலாம்.

இந்த மரத்தை, இதற்கான அடிப்பாகக் கிண்ணத்தில் ஈரக்களிமண்ணில் வைத்து அமுக்கிவிடவும். இந்த அடிப்பாகத்திலும் கற்பனைக்கு ஏற்ப அழகாக படங்களை ஒட்டி அழகுபடுத்தலாம்.

நான்கு ஐந்து பேராகச் சேர்ந்து ஆயிரம் பூக்களைச் செய்து இணைத்தால் பெரிய மரத்தை மிக அழகாக உருவாக்கலாம். கிறிஸ்துமஸ் கொண்டாடப்படும் இடங்களில் இது தனியான கவனத்தைப் பெறும்.

குறிப்பு : கலைப் பொருள் செய்வோம் கட்டுரை தொடர்பாக உங்களுக்கு எழும் சந்தேகங்களை திரு. கே. குப்புராஜ், கலைப் பொருள் பயிற்சியாளர், ஜவஹர் சிறுவர் இல்லம், இராஜாஜி மண்டபம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை - 600 002 என்ற முகவரிக்கு போதிய தபால் தலையுடன் எழுதிக் கேளுங்கள்.



காங்டி

காங்டி என்றால் என்னவோ என்று திகைக்காதீர்கள். காஷ்மீர் பள்ளத்தாக்கில் வாழும் மக்கள் பயன்படுத்தும் கணப்பின் பெயர்தான் இது.

சாதாரணமாக பனிகாலத்தில் குளிர்காய நாம் மூட்டம் போடுகிறோம். குச்சி, சுள்ளி, வைக்கோல், எரு முட்டை என்ற வரட்டி இவைகளைப் பற்ற வைத்துப் புகை எழுப்புவதே மூட்டம் போடுவது. இது நடுங்கும் குளிரிலிருந்து ஓரளவு பாதுகாப்புத் தரும். இவை தவிர, கம்பளிப் போர்வைகளைப் போட்டு மூடிக் கொள்கிறோம். இவையே நடுக்கும் பனிக் காலத்தில் நம்மைக் காத்துக் கொள்ளப் பயன்படுத்தும் முறைகள்.

ஆனால், உறைபனி கொட்டும் காஷ்மீர் பள்ளத்தாக்கில் பனியின் கொடுமையில் இருந்து காத்துக் கொள்ள இந்த முறைகள் பயன்படாது. உறை போட்ட ஒரு சின்ன மண் சட்டியை நம்ம பக்கத்து உறி போல் கயிறு கட்டி வைத்திருப்பார்கள். கிட்டத்தட்ட இது 'குமட்டி' என்ற கரி அடுப்புதான். இதில் அடுப்புக் கரியைப் போட்டு சூடாக்கி வைத்திருப்பார்கள். கரியைக் கிளறி விட ஒரு கரண்டியும் இருக்கும். இதன் பெயர்தான் காங்டி. இதை, கடுமையான பனி காலத்தில் காஷ்மீர் மக்கள் கையில் எடுத்துக் கொண்டு போவார்கள். மிகக் கடும் குளிரில் இதை அப்படியே வயிற்றின் பாகத்தில் வைத்துக் கட்டிக் கொண்டே தங்கள் பணிகளைச் செய்வார்கள். இதைப் பழக்கமானவர்களால் மட்டுமே செய்ய இயலும். நம்மைப் போல் புதிதாகப் போகிறவர்களால் இப்படிக் கட்டிக் கொள்ள முடியாது. சூடுபட்டு விடும். வேண்டுமானால் கைகளில் தூக்கிக் கொண்டு போகலாம். இந்த காங்டி பல அளவுகளில் கலை வேலைப்பாடுகளுடன் கிடைக்கிறது. சிறுவர்க்கு ஏற்ற அளவில் மிகச் சிறிதான காங்டிகளும் உண்டு.

இந்த காங்டியை காஷ்மீர் மக்கள் எத்தனை காலமாகப் பயன்படுத்தி வருகிறார்கள் என்பது தெரியாது. ஆனால், புராண காலந் தொட்டே காங்டி பயன்படுத்தப்பட்டு வருகிறது. நாடோடிப் பாடல்களிலும், கதைகளிலும் இது பாத்திரமாக வருகிறது. இப்படி ஒரு நடமாடும் கணப்பைப் பயன்படுத்தி வரும் மக்கள் இவர்களாகத் தான் இருக்க வேண்டும்.

அயல்நாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இந்த காங்டி பெரிய அதிசயம். இத்தனை அழகான, கைக்கு அடக்கமான, எளிய ஒரு கணப்பை அவர்கள் வாங்காது விடுவார்களா? கண்டிப்பாக ஒன்றோ இரண்டோ வாங்கிக் கொண்டு போகிறார்கள். கணிப்புப் போட்டுக் குளிர்காய அல்ல. வரவேற்பு அறைகளை அலங்கரிக்க!

திருமணத்தின் போது சீதனத்தில் எது இருக்குமோ இருக்காதோ, கண்டிப்பாக காங்டி தூக்குக் கணப்புக்கலம் இருக்கும்.



இரண்டு நாள் அடித்த அடை மழையில் பூமி குளிர்ந்து விட்டது. மண் தரையெங்கும் நீர் தேங்கிக் கிடந்தது. மாலுவும் நீலுவும் தேங்கிக் கிடந்த நீரில் கப்பல் செய்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

"இருட்டி விட்டது. இன்னும் மின்னுகிறது. மறுபடி மழை வந்தாலும் வரலாம்.

கத்துவது எங்கத் தவளை?

மின்சாரம் போய் விட்டால் திண்டாட்டம்தான். சீக்கிரமே சாப்பிட்டு விடுங்கள்" என்று அம்மா இருவரையும் கூட்டிக் கொண்டு போனாள்.

சாப்பிட்டு விட்டு நீலுவும் மாலுவும் தோட்டத்திற்கு வந்து பார்த்த போது இருள் கவிந்து விட்டது. தவளைகளின் 'கொள கொள' சத்தம் காதைப் பிளந்தது. தோட்டத்தில் தரையெங்கும் தவளைகள் தத்திச் சென்று கொண்டிருந்தன.

"என்ன அண்ணா இது! இத்தனை தவளைகள் திடீரென்று எப்படி முளைத்தன? மழை பெய்ய ஆரம்பிக்கும் வரை நாம் இவற்றைக் காணவில்லையே!" என்று வியந்து கொண்டான் மாலு.

"ஆமாம். எனக்கும் இது மர்மமாத்தான் இருக்கு! இத்தனை தவளைகளும் இத்தனை நாள்வரை எங்கே இருந்தன?" என்று வியப்பு மாறாது கேட்டான் நீலு.

"ஒருவேளை, இவை பக்கத்துத் தெருவில் இருந்த தவளைகளோ என்னவோ? மழை பெய்ததும் இப்படிக் கும்பலாகக் கும்மாளம் போட்டுக் கொண்டு கிளம்பி விட்டதோ என்னவோ?" என்றான் மாலு.

"அப்படித்தான் இருக்கும். நாம்ப இந்த வீட்டுக்கு வந்து ஆறு மாதமாச்சு. ஒருநாள் கூட இவைகளை இதுவரை நாம் பார்க்கவே இல்லையே!" என்றான் நீலு.

வாசலில் மோட்டார் சைக்கிள் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

"அப்பா வந்துட்டார்" என்று ஆவலுடன் ஓடினான் மாலு. நீலுவும் பின்னாலேயே ஓடினான்.

"அப்பா, பக்கத்துத் தெருவுல இருந்து ஏராளமா தவளைகள் நம்ம தோட்டத்துக்கு வந்திருக்கு!" என்றான் மாலு.

"அவை பக்கத்துத் தெருவுலேருந்துதான் வந்திருக்குன்னு உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டார் அப்பா.

"நம்ம தோட்டத்துல இதுவரை நான் ஒரு தவளையைக் கூடப் பார்த்ததில்லையே! நாம்ப இங்கே வந்து ஆறு மாதமாகப் போறதே?" என்றான் மாலு.

"நம்ம கண்ணில படலேங்கறதுக்காக நம்ம தோட்டத்துல தவளையே இருக்கலேன்னு முடிவு பண்ணிடறதா? தவ

ரேவதி

ளைங்களெல்லாம் கோடைக் காலத்தில் பூமிக்குக் கீழே வளை பறிச்சு தூங்கிக் கொண்டிருக்கும். மழை காலம் வந்து ஒரு மழை பெய்ததும் எல்லாம் உறக்கம் கலைந்து மேலே வந்து விடும்" என்றார் அப்பா.

"அப்ப, இந்தத் தவளைங்களெல்லாம் நம்ம தோட்டத்துல கோடைக் கால உறக்கத்தில் இருந்தவைங்கதான்னு சொல் றீங்களா அப்பா?"

"ஆமாம். தோட்டத்துல மூலையில ஒரு சின்னக் குட்டை இருக்கே. அங்கே கூட இவைங்க சேறுக்குள்ளே வளை பண்ணி கோடைக்கால உறக்கத்துல ஆழ்ந்திருக்கும்."

மாலுவும் நீலுவும் வியப்புடன் தவளைகளைப் பார்த்தனர்.

ஏதோ ஒரு தவளை "கொள கொள" வென்று குரல் கொடுத்தது.

"நுணலும் தன் வாயால் தானே கெடும்" என்று கூறிச் சிரித்தான் நீலு.

"தவளைக்கு நுணல்னு ஒரு பெயர் உண்டு. இப்படி இவைங்க குரல் கொடுத்து, தாங்கள் இருப்பதைப் பாம் புக்கு அறிவித்து விடுகின்றன. பாம்புகள் இவைகளைத் தேடி வந்து இரையாக்கிக் கொள்கின்றன என்பதுதான் இந்தப் பழ மொழிக்குப் பொருள். ஆனால், இந்தப் பழமொழியில் அறிவியல் அடிப்படை யில் ஒரு தவறு இருக்கிறது. அது என்ன தெரியுமா?" என்று கேட் டார் அப்பா.

"எனக்குத் தெரியும். பாம்பால் ஓசையைக் கேட்க முடியாது. அதிர்வுகளை மட்டுமே உணர முடியும். அதனால், தவளை எழுப் பும் 'கொள கொள' ஓசையைக் கேட்டுத் தான் பாம்பு வந்து தவளைகளைப் பிடித் துக் கொள்கிறது என்று இந்தப் பழமொழி தெரிவிப்பது தவறுதானே? பாம்பு, ஓசை யைக் கேட்கும் திறனுடையது என்று ஆகிறதே? இது தவறுதானே?"

"பலே பலே நீலு" என்று பாராட்டி னார் அப்பா.

மாலுவின் முகம் தொங்கிப் போயிற்று. "அப்பா, எல்லாத் தவளையுமே இப்படி கொள கொள சத்தம் போடுமா?" என்று கேட்டாள்.

"இப்படி உரக்கக் குரல் எழுப்பக் கூடிய வசதி ஆண் தவளைகளுக்கு மட் டுமே உண்டு. இந்தச் சத்தம் ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்குக் கூடக் கேட்கும். பெண் தவளைகளும் ஓசை எழுப்பும் என்றாலும், அது இந்த அளவுக்குக் கேட் காது. பெண் தவளைகளின் குரல் வளை யில் அதற்கான வசதி இல்லை."

"ஆண் தவளை மட்டும் ஏன் இப் படிக் கத்த வேண்டும்?"



"குடும்பம் நடத்துவதற்காகப் பெண் தவளைகளுக்கு விடுகின்ற அழைப்புதான் இந்தக் 'கொள கொள' சத்தம். இதைக் கேட்டதும் பெண் தவளைகள் அங்கே வந்து சேரும்."

"தவளையால் மனிதகுலத்திற்கு ஏதாவது பயன் இருக்கிறதா அப்பா?" என்று கேட்டாள் மாலு.

"மருத்துவப் பரிசோதனைகளைச் செய்து பார்க்கத் தவளைகள் பெரிதும் பயன்படுகின்றன. குறிப்பாக, தவளைகளின் இதயம், இரைப்பை இரண்டும். தவளைக்கு நுரையீரல் இருந்தாலும் தனது ஈரப்பசை நிறைந்த தோலின் மூலமாகவே இது சுவாசிக்கிறது."

"தவளை எப்படிப்பா தரையிலும் வாழ்கிறது; நீரிலும் வாழ்கிறது?"

"தவளையின் துருத்திய கண்களுக்கு முன்பாக இரண்டு மூக்குத் துளைகள் இருக்கும். இதனால், இது தலையை மட்டும் நீருக்கு மேல் வைத்துக் கொண்டு, காற்றை உட்கொண்டு, நீரில் கிடக்கிறது. தவளைக்குக் காதுகள் உண்டு. இவை கண்களின் பின்பக்கம் இருக்கும். தவளைக்கு முதுகெலும்பு கூட உண்டு. தரையில் இருக்கும் போது தவளை தத்தித் தத்திச் செல்லும். இப்படிக் குதிக்க இதன் பின்னங்கால்களே பெரிதும் உதவுகின்றன. இவை மிகவும் வலிமையானவை."

"ஓகோ, அதனால்தான் தவளையின் கால்களை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்களா?" என்று கேட்டான் நீலு.

"அப்பா, தவளைக்கு என்ன உணவு?"

"புழு பூச்சிகள்தான். தவளை இரையைப் பிடிப்பது மிகவும் வேடிக்கையாக இருக்கும். இதற்கு நீண்ட நாக்கு உண்டு. நுனியில் இவை பிளவுபட்டிருக்கும். இதில் பசை போன்ற அமைப்பு இருக்கும். இதைக் கொண்டு, இரை அருகில் வந்ததும் தாவிச் சென்று, நாக்கை நீட்டி, இரையை ஒட்ட வைத்து வளைத்து வாய்க்குள் இழுத்துக் கொள்ளும்."

"தத்தித் தத்தி நடந்து செல்லும் தவளையாரே!" என்று பாடிக் கொண்டே குதித்தபடி உள்ளே போனாள் மாலு.



அறிவியல் உண்மைகள் :

★ தவளை ஓர் இருவாழ்வி. தரையிலும் நீரிலும் வாழும்.

★ நூற்றுக்கணக்கில் நீரில் முட்டையிடும். இவை ஜெவ்வரிசியைப் போல் பசையுள்ளவை. ஒன்றுடன் ஒன்று சேர்ந்து அடை போல் கிடக்கும். இவை தலைப் பிரட்டையாகி, வளர்ந்து பல மாற்றங்களைப் பெற்றுத் தவளைகளாகின்றன.

★ கால்களின் விரல்கள் சவ்வு போன்ற தோலால் சேர்ந்திருக்கும். இது நீந்த உதவும்.

★ நுரையீரல் இருந்தும் தோலாலேயே சுவாசிக்கும்.

★ உரக்கக் கத்துவது ஆண் தவளையே. இது பெண் தவளைக்கு அழைப்பு. இது ஒரு கி.மீ. வரை கேட்கும்!

★ கோடைக்காலத்தில் சகதியில், தரைக்கு அடியில் வளை தோண்டி கோடைக்கால உறக்கத்தில் ஆழும்.

★ தவளைகளில் பல வகைகள் உண்டு. தவளைச் சொரி என்ற தோல் நோய் தவளையால் வருவது அல்ல.

★ தவளைகள் எல்லா நாடுகளிலும் உண்டு.


★ நுணலும் தன் வாயால் தானே கெடும் என்ற பழமொழி அறிவியல் அடிப்படையில் தவறு.

சார் தபால்

தாங்கறீங்களே சார்!

* தீபாவளிக் கதைகள் எல்லாமே, தீபாவளி இனிப்பைப் போல் நன்கு இனித்தன. கண்களைத் திறந்தபடி தும்மச் சொல்லி பந்தயம் வைத்து ஜெயித்து விட்டேன். கேள்வி கேட்ட கிரிப்ஸ் பில்டனுக்கும், இப்படி ஒரு பதிலைத் தந்த சேரநம்பிக்கும் நன்றி சார்! - பொன்மலை சிவராமன், திண்டிவனம் சி. ராசப்பா, காளையார் பட்டி வி.சுலோசனா, விழுப்புரம் சின்னபேபி, காரமடை எம். பானுமதி, ஊஞ்சலூர் வா. மதிவாணன், கச்சிராபாளையம் ஜெ. ஜெயசங்கர் மற்றும் ஏராளமானோர்.

* ''நான் எதுக்கு?'' கதை பிறருக்கு உதவ மறுக்கும் எல்லாத் தம்பி தங்கையர்க்கும் சரியான அடி. - திருப்பதி மா. சொர்ணவேலு, பெரியபாளையம் வி. கார்த்திகேயன், நகரி து. மங்கம்மா, ராணிப்பேட்டை வா. பழனிவேல், கச்சிராபாளையம் இளையவன், மற்றும் பலர்



* 'வெங்காய புராணம்' வியக்க வைத்தது. இப்படியே எல்லாத் தாவரங்களைப் பற்றியும் எழுதலாமே? - திருச்சி எஸ்.வி. பார்த்தசாரதி, கச்சிராபாளையம் கவிக்கம்பன், சிங்கம்புணரி நா. பட்டம்மாள், திருநாகேஸ்வரம் மு. கணபதிராஜ், மற்றும் பலர்.

* பிருந்தாவனக் கவிதைகள் எல்லாமே தாளம் போட்டுப் பாட வைத்தன. இந்தப் பகுதி ஒன் றுக்கே ஐந்து ரூபாய் தரலாம் சார்! - கோட்டையூர் மா. நாகம்மை, மணியாச்சி மா.து. பொன்னுரங்கம், சிறுவயல் எம். கதிரேசன், சதுரங்கப்பட்டணம் மா. சாகுல் அமீது, மற்றும் பலர்.

* இரண்டாவது சாவி தொடர் கதை நல்ல விறுவிறுப்பு சார். இன்னும் கொஞ்சம் கூடுதல் பக்கங்களைப் போடலாமே? - டால்மியாபுரம் வா. சேதுராமன், அருப்புக்கோட்டை மு. சக்திவேல், வடமாதிமங்கலம், வே. பூங்குன்றன் நண்பர்கள் மற்றும் பலர்.

* பன்றி ஒரு சுத்தம் விரும்பி என்பதைப் படித்த போது எனக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை. - சிவபுரி மா. சுந்தர்ராஜ், தரங்கை கி. கிருஷ்ணவேணி, சீர்காழி சி. சந்தான கிருஷ்ணன், புதுகை மா. முத்துச்செல்வி, ஆரணி கே. யுவராஜ், மற்றும் பலர்.

* ஐம்பது ரூபாய் ஆனாலும் கோகுலத்தை வாங்கியே தீருவோம். பேனா நண்பர்கள் பகுதியை ஆரம்பியுங்கள். - வேப்பம்பட்டி, சா. சாத்தம்மாள், திருவள்ளூர் தா. சிந்தாமணி, மதுரை பெருமாள்சாமி, மேல் மலையனூர் எஸ். சரவணன், கச்சிராபாளையம் க. கோவிந்தராஜ், மற்றும் பலர்.

* கடல் கடந்த மகிபாலன், முயற்சி திருவினையாக்கும் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளது. படங்கள் பேசுகின்றன! - பட்டீஸ்வரம் கே. கருப்பையன், கச்சிராபாளையம் அபிநயா மற்றும் பலர்.

* தமிழ்ச் சிறுவர் விரும்பும் படிக்கும் பத்திரிகை என்பது உறுதியாகி விட்டது. வாசகர் பக்கங்களை அதிகப் படுத்தி, இரண்டு மாதங்களுக்கு ஒருமுறையாவது சந்திப்புக்கு ஏற்பாடு பண்ணலாகாதா? - திருத்தணி, மா. சின்னராஜா, குமாரபாளையம், வா. பெரிய நாயகி, கொத்தமங்கலம் வா.நா. நாராயணன், மற்றும் பலர்.

* ''எங்கள் ஊரில் நடந்தது' பகுதியில் வெளி வந்துள்ள 'தொலைவு' ஏற்கெனவே சாவியில் வெளியான ஜோக்கின் அச்சு. என்ன சார் இப்படித் தூங்கறீங்க! - நாகை தா. சாரதா, மணச்சநல்லூர் பஷீர் அகமது, அரக்கோணம் ஜி. புவனேஸ்வரி மற்றும் ஏராளமானோர்.

வெளியாகும் எல்லாப் பத்திரிகைகளையும் படித்து அதிலுள்ளவற்றையெல்லாம் நினைவில் வைத்துக் கொள்வது இயலுமா? ஆசிரியரை ஏமாற்றலாம். ஆனால் வாசகர்களை ஏமாற்ற இயலுமா? இதைக் குறிப்பிட்டு எழுதியுள்ள அனைவருக்கும் நன்றி! - ஆசிரியர்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி, ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் ; 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 200/-.

அமெரிக்காவில் கிறிஸ்துமஸ் வாணவேடிக்கை



GOKULAM (Tamil) December '94 REGISTERED NO. TN MS (S) 281 Registered as Newspaper in Sri Lanka

